Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்


விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 வெள்ளி - 46 09 - 15 - சனவரி - 2004

## என்ன செய்யப்போகிறார்கள்?







## காட்டு வெளியிடை

சாந்தன் எழுதும் கென்யப் பயண அனுபவம்



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 09 . 01 . 2004
மின் அஞ்சல : www.weekly@eezhanatham.com

# விளைவை அனுபவிக்க வேண்டியவர்களாக தமிழர்கள் மட்டும்

நாடு தேர்தலைநோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்ற கருத்து நாளுக்கு நாள் வலுத்துவருகிறது. தேர்தலை தடுத்து நிறுத்துவது இயலாத தொன்றாகியும் வருகிறது.

நாடு யுத்த நிறுத்தத்தில் இருப்பது இன்று பலரும் நினைவில் கொள்வேண்டியதொன்று என்பதை மீள் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. யுத்த நிறுத்தம் இலங்கை அரசியலில் சாதாரணமானதொன்றல்ல. இலங்கையின் அரசியலில் மையச் சுழற்சியாக இருந்தது யுத்தம்தான். இரு யுத்த சக்திகளும் மீளவும் சமரசம் செய்துகொள்ள முடியாதளவிற்கு பகைமை உணர்வு இருதரப்பிலும் கூர்மையடைந்திருந்தது. இருதரப்பும் யுத்தத்திற்கு கொடுத்த விலை மிகப்பெரியது. அதில் ஒடுக்கப்படும் தரப்பு என்ற வகையில் தமிழர்களின் நிலை கவனத்திற்குரியது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மூன்றாந்தரப்பு என்ற ஒரு பாத்திரம் இல்லையெனில் இந்த யுத்த நிறுத்தம் சாத்தியப்பட்டிருக்காது. அதிலும் சர்வதேசத்தின் சக்திமிக்கநாடுகளின் சமாதானம் மீதான கரிசனை இருந்திருக்காதுவிடின் இது நீடித்திருக்கவும் வாய்ப்பில்லை.

ஆக, இரு பகைமைச் சக்திகள் சமரசம் செய்து கொள்வதற்கு அடிப்படைத் தேவையாக இருந்தது உத்தரவாதம்தான். அந்த உத்தரவாதம் புலிகளைப் பொறுத்தவரை அதிகமாகத் தேவைப்பட்டது.

இலங்கையின் சமாதானத்தில் தங்கள் நலனின் பொருட்டேனும் அதிக அக்கறையுற்றிருந்த சக்திமிக்க நாடுகள், நாடு மீளவும் யுத்தத்திற்கு திரும்பக் கூடாதென அவாவி நின்றன. அதனை வற்புறுத்தவும் செய்தன.

ஆனால், இலங்கையின் அரசியல் அதிகாரம் இரண்டுபட்டுப் போயிருந்த நேரத்தில், தேசிய நலனின் பொருட்டு செயற்படும் அரசியல் கலாச்சாரமற்ற இந் நாட்டில் ஒரு பக்க அதிகாரத்துவ உத்தரவாதமற்ற நிலை யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு எப்படி உத்தரவாதம் அளிப்பதாக அமையும்.

நாடு யுத்தத்திற்குத் திரும்பக்கூடாது என்ற கரிசனை, முன்யோசனை அதற்கான தனது பலத்தை புலிகள் மீதும் அதைச் சுற்றியுமே பிரயோகிக்கப் பட்டுக்கொண்டிருந்தது.

நாடு தேர்தலுக்குத் திரும்பும் வாய்ப்பிருப்பது பற்றி அதிகம் எதிர்வு கூறப்படவோ, முன்யோசனை கொள்ளவோ அக்கறை மிக்கவர்கள் தவறிவிட்டனர் என்றுதான் கொள்ளவேண்டும். நாடு தேர்தலுக்குத் திரும்பும் போது யுத்தநிறுத்த ஒப்பந்தமும் வலுவிழந்து போகிறது. யுத்தத்திற்குத் திரும்பாது பாதுகாக்க வேண்டுமெனில் நாடு தேர்தலுக்குத் திரும்பாதும் பாதுகாத்திருக்க வேண்டும். தவறான கணிப்பீடுகளின், தவறான அணுகுமுறைகளால் எழுந்த விளைவே வரப்போகும் தேர்தல்.

யுத்த நிறுத்தமே உத்தரவாதமற்றிருக்கும் போது சமாதானப் பேச்சு, அமைதித் தீர்வு என்பதெல்லாம் புலிகளைப் பொறுத்தவரை மிகத் தொலைவில். அதன் பாதகமான விளைவுகளை அனுபவிக்கவேண்டியவர்களாக சிங்களவர்கள் இல்லை. தமிழர்களே இருக்கின்றனர்.

தவறான கணிப்பீடுகளில், தவறான அணுகுமுறைகளைச் செய்த சர்வதேச நாடுகளுக்கு இது விளங்குகிறதா என்பதுதான் தெரியவில்லை.

## தூரனின் பார்வையில்

# அமெரிக்க அழுத்தங்களும் இந்தியாவுக்கான அழைப்பும்

சிறிலங்காவின் தற்போதைய அதிகார மேலிடங்களுக்கிடையேயான போட்டியானது வெளிப்புறத்தே, ரணிலுக்கும் சந்திரிகாவுக்கும் இடையேயான அரசியல் போட்டியின் வெளிப்பாடாக தென்பட்டாலும் கூட, உண்மையில் இந்தப் போட்டியின் பின்னணியில் அயலக மற்றும் அந்நிய ஆதிக்க சக்திகளின் வலுவான கரங்கள் இருப்பது நாளுக்கு நாள் உறுதிப்படுத்தப்பட்டுக்கொண்டே வருகிறது. இன்றைய நெருக்கடி நிலைக்கு பிரதமர் ரணில்,சனாதிபதி சந்திரிகாவையும், சந்திரிகா ரணிலையும் பரஸ்பரம் குற்றம் சுமத்தி வருகின்றபோதிலும், இந்த நெருக்கடி நிலை காரணமாக சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பதில் சந்திரிகாவுக்கு வெளிப்படையான மகிழ்ச்சியும், ரணிலுக்கு மறைமுகமான திருப்தியும் ஏற்பட்டுள்ளதென்ற நோக்கர்களின் அவிப்பிராயம், சரியான கணிப்பீட்டில் உருவானதென்றே கூற வேண்டும்.

சமாதானப் பேச்சு வார்த்தைகள் ரணில் திட்டமிட்டுள்ளது போன்று நோர்வே மற்றும் மேற்குலக நாடுகளின் வழிகாட்டலில் அல்லது அறிவுறுத்தலின் கீழ் முன்னெடுக்கப்படுதல் தொடருமேயானால் அதனைத்தான் தொடர்ந்தும் அதில் சம்பந்தப்பட்ட பார்வையாளராக இருந்து அவதானித்து வந்தால் அதன் விழைவுகள் தன் அரசியல் எதிர்காலத்தைப் பாரதூரமாகப் பாதிக்கச் செய்துவிடும் என்ற அச்சமே சந்திரிகாவை தனது நிறைவேற்று அதிகாரவலுவை பயன்படுத்தி ஒரு அரசியல் நெருக்கடியை தோற்றுவிக்கும் திட்டமொன்றை செயற்படுத்த வைத்தது.

இதன்மூலம் அதாவது இந்த அரசியல் நெருக்கடி மூலம் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் ரணிலின் அரசியல் ரீதியான நகர்வுகளை வெகுவாக பாதிக்கச் செய்துவிடலாம் என்று சந்திரிகா நம்பினார்.

ஒரு வகையில் இது சரியாக இருந்தாலும் கூட, அவரது அந்த நடவடிக்கை காரணமாக ரணில் எந்தவகையிலும் எதிர்பார்த்திராத சில அனுகூலங்களையும் பெற்றுக்கொண்டார் என்பதும் உண்மையே.

விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்டவரைபு அரசிடம் கையளிக்கப்பட்டதும் அது தொடர்பாக மேற்கொண்டு எத்தகைய நகர்வினை மேற்கொள்வது என்பது குறித்து தீர்க்கமான முடிவை உடனடியாக எடுக்கமுடியாத நிலை ரணிலுக்கு அப்போது ஏற்பட்டிருந்தது.

இடைநிறுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சுக்களைத் தொடர இத் திட்டவரைபினை அடிப்படையாகக் கொள்வேண்டிய சூழலில், சனாதிபதி தரப்பும் ஏனைய பேரினவாத எதிர்க்கட்சிகளும் அதனை முற்றாகவே நிராகரித்து எதிர்ப்புக்காட்டத் தொடங்கியிருந்தமையானது ரணிலுக்கு தர்மசங்கடமான நிலையை உருவாக்கியே இருந்தது.


இதனை எப்படிச்சமாளிப்பது என்பது குறித்தயோசனைகளோடு அமெரிக்காவில் ரணில் நின்றிருந்த நேரம் சந்திரிகா தனது அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டு கைகொடுத்தார்.

அமைச்சுக்கள் பறிக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு அதிகாரவலுவற்ற தனது பலவீனமான அரச பதவியை காரணம் காட்டி சமாதானத்தைத் தொடரும் பொறுப் பினை சந்திரிகா தலையில் சுமத்திய வேகம் அவரது அப்போதைய நிலையை எடுத்துக் காட்டப் போதுமானதாகும்.

இது சந்திரிகா எதிர்பார்க்காத ஒன்றேயாகும். ரணில் நிம்மதிப் பெருமூச்சுவிட, சந்திரிகா சுடுமூச்சு விட வேண்டியவரானார். சமாதானம் என்ற பிரச்சினையை தூர அகற்றிவிட நினைத்த அவருக்கு அதுஅவரின் தலையிலேயே சுமக்கவேண்டிய நிலையை ரணில் சாதுரியமாக ஏற்படுத்தினார்.

சமாதானத்தை அவரே பொறுப்பேற்க வேண்டும்.இல்லையேல் அது தடைப்பட்டதற்கான பழியைப் பொறுப்பேற்கவேண்டும். அதுவுமில்லையேல் மீண்டும் அதனை ரணிலின் தலையில் இறக்கிவைக்கவேண்டும்.

எல்லாமே அவருக்குச் சிக்கலான, தீர்வெடுக்கமுடியாத விடயமேயாகும். இந்தநிலையில் சந்திரிகாவின் பின்னால் அயலக ஆதிக்க சக்தியும், ரணிலின் பின்னால் அந்நிய ஆதிக்க சக்திகளும் நின்றுகொண்டு இருவரது நகர்வுகளுக்குமான கட்டளைகளைச் சப்தமின்றி சமிக்ஞைகள் மூலம் பிறப்பித்துக்கொண்டிருப்பதை சுலபமாகப் புரிந்துகொள்வது கடினமானதானாலும் அதுவே உண்மையானதுமாகும்.



இதன் வெளிப்பாடுகளைக் கடந்தவார நிகழ்வுகள் யாவும் வெளிப்படையாக உணர்த்தியுள்ளதாக குறிப்பிட்டுச் சொல்லமுடியும்.

அமெரிக்காவின் றிச்சார்ட் ஆர்மிரேஜ் அவர்கள், இலங்கையின் அரசியல் அதிகாரத் தலைமைகளின் முரண்பாடுகள், நெருக்கடிகளை நீடிக்கவைப்பதைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாதென்று சற்று இராஜதந்திர ரீதியிலான மிரட்டல்தொனியில் கூறியதைத் தொடர்ந்து கொலின் பவல் அவர்கள் அரசிற்கும் சனாதிபதிக்கும் அனுப்பிய கடிதம் அதனை வலியுறுத்துவதாகவே அமைந்திருந்தது.


ஆர்மிறேஜ்ஜின் அறிவுறுத்தலும் கொலின்பவலின் கடிதமும் சனாதிபதிக்கும் அவர் சார்ந்த அணிகளுக்கும் அதிருப்தி ஏற்படுத்தும் உணர்வுகளையே உருவாக்கிய போதிலும், அமெரிக்க அழுத்தத்தை முற்றும் முழுதாக நிராகரித்துவிடும் துணிசசல் அவர்களுக்கு கிடையாது என்பதால் அது தொடர்பான முணுமுணுப்புகளை மட்டுமே கேட்கக் கூடியதாக இருந்தது.

அமெரிக்க அழுத்தம் வெளித்தோற்றத்திற்கு ரணிலுக்கு மானதொன்றாக தென்பட்டபோதிலும், அவரை அது எந்த விதத்திலும் பாதிக்கவில்லை யென்றே கூறவேண்டும்.

இந்த அமெரிக்க அறிவுறுத்தலும், கடிதமும், சிறிலங்காவின் இனவிவகாரங்களில் அமெரிக்காவின் ஈடுபாடும், ஊடுருவலும், ஆதிக்கமும் எந்த அளவுக்கு ஆழமாக உள்ளது என்பதை சார்க்நாடுகளின் உச்சி மாநாடு ஆரம்பமாக இருந்த வேளையில் அனைவருக்கும் உணர்த்தி நின்றமையே முக்கியமானதாகும்.

சந்திரிகாவுக்கு வெஞ்சினத்தை உள்ளூர இந்த அழுத்தம் எந்தளவிற்கு ஏற்படுத்தியது என்பதற்கு அவர் சார்க் மாநாட்டில் இந்தியத் தலைமையுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து வெளியான காரணிகளே போதுமானதாகும்.

(19ஆம் பக்கம் பார்க்க)



றதுடன் தகர்ந்துபோயிற்று. அதன் உடனடி விளைவாகவே இலங்கையின் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர யுத்தத்திற்கு வழங்கப்பட்ட ஆதரவிலிருந்து சமாதானத்திற்கான ஆதரவை மேற்குலகம் வன்மையாகக் கடைப்பிடிக்க வேண்டியதாயிற்று.

விடுதலைப்புலிகள் சர்வதேச அரசியல் அரங்கில் போராட்டம் தொடங்கி இத்தனை ஆண்டுகளும் இராஜதந்திர அரசியல் அர்த்தத்தில் அதிகம் பிரசன்னமாகியிருக்காத சூழலில் விடுதலைப் புலிகளின் போர் ஓர்மம், தாம் வரித்துக்கொண்ட இலக்கில் இருந்து விடாப்பிடியாக இருக்கும் தன்மை, வளைந்து கொடாமை, போன்ற குணாம்சங்களுக்கூடாகத்தான் மேற்குலகம் புலிகளை விளங்கி வைத்திருந்தது. மேலும் சிறிலங்கா அரசாங்கங்களின் இராஜதந்திர முயற்சிகளால் விடுதலைப் புலிகள் பிரிவினையின்றி வேறெதையும்

இராஜாங்க அமைச்சரிடமிருந்து கடிதம் மூலம் இச் செய்தி விடுக்கப்பட்டிருப்பதால் எச்சரிக்கை கலந்த ஒரு வற்புறுத்தலாகவே இதனைப் புரிந்துகொள்ள முடியும்.

இதிலிருந்து எதை விளங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது என்றால் இலங்கை அரசியலில் மேற்கிற்கிருக்கும் இன்றியமையாத முக்கியத்துவத்தையும் அதன் மனோபாவத்தையும்தான். இதைப் புரிந்துகொள்ள இன்னொன்றையும் நாம் பார்க்கலாம்.

அமெரிக்க நெப்ரெஸ்க்கா வெஸ்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் றொபட் சீ ஒபஸ்ற் கூறிய கருத்துக்களை அவதானிக்கலாம்.

விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால திட்டவரைபு எடுத்த எடுப்பிலேயே பல அரசியல் கட்சிகளால் நிராகரிக்கப்படுவது ஆச்சரியப்படக் கூடிய தொன்றல்ல. உண்மையில் இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கையில் நிலவும் ஒரு துரதிஸ்ட நிலையே இதுவாகும். மேலும் தீர்வுத் திட்டம் குறித்துப் பேசுவதற்குக்கூட ஒப்புதல் மறுக்கப்பட்டிருப்பது பாரதூரமான விசனத்திற்குரிய ஒரு நிலையாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் ஏற்பட்டுள்ள அதிகாரத்துவ இழுபறி பேச்சுவார்த்தையை முடக்கியுள்ளது. தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கத்தின் அதிகாரத்துவக் குரலாக இரு தரப்பினருமே எதனையும் கூற முடியாத ஒரு நிலை உருவாகியுள்ளது.

புலிகள் சமர்ப்பித்துள்ள இன்றைய இடைக்கால தன்னாட்சி அதிகாரத்

என்பதை விழங்கவைத்திருந்தது.

ஒஸ்லோவில் புலிகளின் உள்ளகச் சுயநிர்ணய உரிமையுடனான சமஸ்டிப் பிரகடனம், யுத்த நிறுத்த அனர்த்தங்களில் புலிகள் கடைப்பிடித்த பொறுமை, பேச்சுக்களில் அரசதரப்பின் வேண்டுகோளிற்கிணங்க சில முக்கிய விடயங்களை மேசைக்கெடுக்காது பின்போட்டமை, தாமாக ஒரு இடைக்கால திட்டவரைபை முன்வைத்தமை போன்றனவெல்லாம் இதுவரைகாலம் புலிகள் பற்றி தோற்றப்படுத்தப்பட்டு வந்த பல விடயங்களைச் சர்வதேச எண்ணங்களில் மாற்றங்காணவோ குறைந்தபட்சம் வீரியம் குறையவோ வாய்ப்பளித்திருந்தது.

இத்தகைய பின்னணியில் புலிகள் யுத்தத்திற்கு திரும்பினால் காத்திரமான அழுத்தத்தையோ வற்புறுத்தல்களையோ செய்யும்



தான வைத்த பொறியைப் பற்றி தானே பறைசாற்றிப் பெருமிதமடைந்து இறுதியில் அதில் தானே விழநேர்ந்து பலியாகும் துர்ப்பாக்கியம் யாருக்காவது நிகழ்ந்தால் அவர்கள் இன்றிருக்கும் சிங்கள அரசியல் தலைவர்கள் போல் பரிதாபத்திற்குரியவர்களாயிருப்பர்.

ரணில் பறைசாற்றிய சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னல் பற்றித்தான் இங்கு குறிப்பிடுகிறேன் என்பது சிலருக்குப் புரிந்திருக்கலாம். இதற்குள் தன்காலத்தில் அமெரிக்கா புலிகளைத் தடைசெய்துவிட்டதாக பெருமையடித்துக்கொண்ட அம்மணி சந்திரிகாவையும் உள்ளடக்கலாம்.

அமெரிக்கா உள்ளிட்ட

ஆதரிக்காதவர்கள் என்றும், யுத்தத்தைத் தவிர மாற்று அணுகுமுறைக்கு உடன்பாடற்றவர்கள் என்றும் அவர்கள் பலமான படைச்சக்தியே தவிர அவர்களுக்கான அரசியல் பின்னணி மிகவும் பலவீனமானதென்றும் நம்புவிக்கவோ அல்லது இக்கருத்தை கவனத்தில் எடுத்துக்கொள்ள வைக்கவோ முடிந்தது.

இத்தகையதொரு பின்னணியில் சமாதானத்தின்பொருட்டு புலிகளை யுத்தத்திற்கு திரும்பவிடாத ஒரு சூழலைப் பேண மேற்குலகம் விரும்புமென்ற யதார்த்தத்தை சிங்கள அரசியல் தலைவர்கள் அதிகம் இராஜதந்திர அர்த்தத்தில் புலிகளைத் தாம் வென்று விட்டதாக

# என்ன செய்யப் போகிறார்கள்?

மேற்குலகத்திற்கு புலிகள் ஒன்றும் தீண்டத் தகாதவர்களல்ல. அவர்களுக்கென்று இப்பிராந்தியத்தில் இலங்கையின் மீதான நலன்கள் 2000ம் ஆண்டின் பின் முதன்மைப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கான அரசியல் பொருளாதார தேவைகருதி இலங்கையில் கொந்தளிப்பாக இருக்கும் யுத்தத்தை தணிவித்து இலங்கையில் அமைதிச் சூழலைப் பேணவேண்டியிருக்கிறது.

யுத்தத்தின் பச்சையான யதார்த்தத்தை புரிந்துகொண்டு சமாதானம் செய்ய இவ்விருகட்சிகளில் எது அதிகம் முன்வருகின்றதோ அதை ஆதரிக்க மேற்குலகம் தயாராகவே இருக்கிறது.சந்திரிகாவினது சமாதான முயற்சிக்கும் இவ்வாறு ஆதரவு கிடைத்தது தெரிந்ததே.

யுத்தம் மீது மேற்குலகத்திற்கு கட்டிவளர்க்கப்பட்ட பொய்மைகள் வன்னிப்போரை புலிகள் வென்



எண்ணினர். தோற்றப்படுத்தினர்.

ஆனால் இப்பொழுது ரணில் - சந்திரிகாவுக்கிடையில் எழுந்துள்ள அதிகாரப்போட்டி மெய்நிலையை அதிகம் மேலெழுப்பிக் கொண்டுவருகிறது. அதைத் தரிசிக்கும் வாய்ப்பு இப்பொழுது மேற்குலகத்திற்கு கிடைத்திருக்கின்றது. கிடைத்ததன் விளைவாய் மேற்குலகத்தின் பிரதிபலிப்பு இனப்பிரச்சினையின் மேற்குலகின் நிலைப்பாடு குறித்த மெய் நிலையை

**ஜீ-கே**

மேலெழுப்பி வருகிறது. அதைத் தரிசிக்கும் வாய்ப்பும் சிங்களத் தலைவர்களுக்கும், புத்திஜீவிகளுக்கும், மக்களுக்கும் இப்பொழுது வாய்த்திருக்கிறது.

சனாதிபதியும் பிரதமரும் தமது அதிகாரப் போட்டிக்கு முடிவு கண்டுகொள்ள வேண்டும். அல்லது சமாதான முயற்சியில் பாரிய பின்னடைவுகள் ஏற்படும் என அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சட் ஆர்மிரேஜ் கருத்துத் தெரிவித்து ஒரு சில நாட்களுக்குள் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் பிரதமருக்கும் சனாதிபதிக்கும் தனித்தனியாக அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வண்ணம் கடிதம் 'அனுப்பிவைத்திருக்கிறார். அதன் உள்ளடக்கம் இரு அரசியல் தலைவர்களும் தமது அதிகாரப் போட்டிக்குத் தீர்வுகண்டு புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டும் என்பதாக இருந்தது.

அமெரிக்காவின்



திட்டவரைபினை உன்னிப்பாக அவதானித்தால் இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்திற்கும் புலிகளின் திட்டத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்ட வேறுபாடுகளையே காணக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை புலிகளும் தாம் தெரிவித்திருக்கும் யோசனைகள் தொடர்பில் எத்தகைய சமரசத்திற்கும் வரமுடியாதவர்கள் என கூறவுமில்லை. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் புலிகளுடன் திட்டவரைபு தொடர்பில் பேச்சுவார்த்தைக்குக் கூட அது செல்லமுடியாது தவறியிருப்பது மிகவும் விசனத்திற்குரிய ஒரு காரியமென்றே கூறவேண்டும். என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு குறித்து எதிர்ப்போ, கண்டனமோ அதீதமானதென்றோ இராஜீக மட்டத்தில் கருத்தெழாதது குறிப்பிடத்தக்கது. வரவேற்புகளும் கிடைக்கத்தான் செய்தன.

இலங்கையில் சமாதானத்தை நாடும் மேற்குலகத்தின் நிலைப்பாட்டை புலிகளுக்கு எதிராக திருப்பிவிட முடியும் என்று நம்பியிருந்த சிங்கள இராஜதந்திரத்தின் மீதே அது திரும்பிப் பாய்கிறது. சர்வதேச அரசியலரங்கில் தமக்குக் கிடைத்தவாய்ப்பை புலிகள் பயன்படுத்தி தம்மைப் பிரசன்னப்படுத்திக் கொண்டவிதம் எச்சரிக்கையுடனேனும் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலப்பதற்கு எதிரானவர்களல்ல

அரசியல் புறநிலையை, தார்மீக பலத்தை மேற்குலகம் இழந்துவருகின்றது. அதை மேற்கு வைத்திருக்க வேண்டுமாயின் சிங்களத் தலைவர்கள் மீது மிகப் பலமான எச்சரிக்கை தோரணையிலான அழுத்தத்தை பிரயோகிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது.

நாடு யுத்தத்திற்குத் திரும்புமாயின் அதற்கான மகாபொறுப்பு சர்வதேச அரங்கில் சிங்கள ஆட்சியாளர்கள் மீது விழுமேயன்றி புலிகள் மீதல்ல.

இப்பொழுதுள்ள மேற்கின் நிலைமையோ இலங்கையை யுத்தத்திற்குத் திரும்பவிடாது செய்வதாயின் இலங்கையின் அரசியல் தலைவர்கள் மீது காத்திரமான அழுத்தத்தை பிரயோகிப்பதுடன் புலிகளின் திட்டவரைபு குறித்து சாதகமாகப் பரிசீலிக்க அவர்களை நிர்ப்பந்திப்பதில் தான் தங்கியிருக்கிறது.

சிங்களத் தலைவர்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமையை எங்கள் ஊரில் சொல்வார்கள் ''உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்'' என்று. ●

## ஒகோ! அப்படியா!



ஆனந்த சங்கரி. அறிக்கை.

என்னை யாராலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உள்வாங்கவும் முடியாது, உள்வாங்கவும் விடமாட்டேன்.

### ஒகோ !அப்படியா!

செ்ன்னையில் நடைபெற்றகூட்டத்தில். ஜெயலலிதா.



அ.தி.மு.க.வுக்கு சோதனை ஏற்பட்ட வேளைகளில் விசுவாசமாக இருந்தோருக்கே கட்சிப்பதவி.

### ஒகோ !அப்படியா!



மலேசியாவில். டீரோன்பெர்னான்டோ.

நாம் பொதுத் தேர்தலைச் சந்திப்போமாக இருந்தால் அது பிரிவினைக்கும் இரத்தம் சிந்துதலுக்கும் தலைமை தாங்குவதாக அமைந்துவிடும்.

### ஒகோ !அப்படியா!

காலிமாவட்டத்தில் வைபவமொன்றில். அனுரா.



ரணில், ஜோன் அமரதுங்கா, பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசா ஆகியோர் மிலேனியம் சிற்றியை காட்டிக்கொடுத்த தேசத்துரோகிகள்.

### ஒகோ !அப்படியா!



செய்தியாளரிடம் பேரியல்

முஸ்லிம்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு மு.கா. கட்சியுடன் இணைத்து செயற்படத் தயார்.

### ஒகோ !அப்படியா!



செய்தியாளரிடம். கருணாநிதி.

வை.கோ.வும் அவருடன் கூட உள்ள எட்டுப்பேரும் பிணையில் வெளியே வரவேண்டும். இது எனது அன்புக்கட்டளை.

### ஒகோ !அப்படியா!



கா.போ.சங்க உறுப்பினர் முன். டக்ளஸ்.

காணாமல் போனோர் சங்கத்தில் உள்ள அனைவரும் கொழும்பிற்கு வந்துள்ளமை அநாகரிகமான செயல்.

# நறுக்கென...

## மூன்றாந்தர அரசியல்வாதிகளான முன்னாள் தோழர்கள்



அரசியல் கொள்கைகளை தேவைக்கேற்ப மாற்றிக் கொள்வதில் ஜே.வி.பியின் செஞ்சட்டை + செந்தொப்பியணிந்த முன்னாள் இடது சாரித்தோழர்கள் தாம்யாருக்கும் சளைத்தவர்களில்லை என்பதை அண்மைக்காலத்தில் தொடர்ந்து நருபித்து வருகிறார்கள்.

முன்னொரு காலத்தில்.... அதாவது ரோகண விஜேவீர காலத்தில் பாட்டாளி மக்களின் தலைமையிலான இடதுசாரிப் பொதுவுடமைக் கொள்கையுடன் கூடிய ஆயுதப்புரட்சி பற்றி உரக்க கோஷம்போட்டு தொலைநோக்கு சிந்தனையோ, ஒழுங்கமைப்பான திட்டமோ இல்லாத போராட்டம் ஒன்றை அரைகுறையாக நடத்தி மக்களையும் அழித்துத் தாமும் அழிந்து புரட்சி என்ற மகத்தான சொல்லுக்கே மாசு கற்பித்தார்கள்.

எந்த, சிறிமாவோ பண்டாரநாயக்கா என்ற அவர்களால் பூர்ஷுவா வர்க்க அரசியல்வாதி என வர்ணிக்ககப்பட்டவரை ஆட்சி பீடமேற்ற கடுமையாக உழைத்தனரோ அவருக்கெதிராகவே தமது ஏப்ரல் 71 கிளர்ச்சியை நடத்தியபோதே அவர்கள் தமது அரசியல் தெளிவின்மையைப் பகிரங்கப்படுத்திக் கொண்டார்கள்.

பின்னர் ஜே.ஆர். என்ற முழுமுதலாளித்துவவாதியின் ஆட்சியில் விடுதலையானதும் பாராளுமன்ற சனநாயக முறைக்கு ஒரே தாவலாகத்தாவி சனாதிபதியாகும் நோக்குடன் அதாவது அற்ப ஆசையுடன் ஜே.ஆருக்கு எதிராகவே போட்டியிட்டு படுதோல்வியடைந்த ரோகண விஜேவீர பின்னர் பிரேமதாஸ ஆட்சிக்காலத்தில் பைத்தியக்காரத்தனமாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் முட்டாள் தனமாக சிக்கி படுகொலை செய்யப்பட்டதுடன் ஜே.வி.பி தனது மூன்றாவது அவதாரத்தை சந்திரிகா காலத்தில் எடுத்தது இப்போது தாம் சோசலிஷம், பொதுவுடமை, புரட்சியென அனைத்துக்கும் முழுக்குப்போட சனநாயக நீரோட்டத்துள் குதிப்பதாகக் கூறினர்.

பின்னர் சிவப்புச்சாயம் போன நிலையில் இனவாதிகளாக வெளிவந்து இப்போது மூன்றாந்தர அரசியல் வாதிகளாகி இப்போது பதவிக் கதிரைகளுக்காக கொள்கைகளைப் பேரம் பேசி வருகிறார்கள்.சில மாதங்களின் முன்னர் அதிகாரப் பரவலாக்கல் தீர்வு முறையை பொ.ஐ.முன்னணி கைவிட்டால்தான் அவர்களுடன் அரசியல் கூட்டு வைக்கப்படும் என்றவர்கள், இப்போது அதனை ஆதரிக்கத் தயார் என்று சனாதிபதியிடம் கூறியுள்ளார்களாம்.

பதவியென்று வந்துவிட்டால் கொள்கை ஏது கோட்பாடேது.... இலங்கையில் இடதுசாரிகளின் அமைப்புக்கள் படும்பாடுதான் பரிதாபமானது சில ஜே.வி.பியினரின் இந்த இறுக்கப்பாட்டுக்கு என்ன காரணம்? ஏற்கெனவே ஜே.வி.பியினருடனான கூட்டு முயற்சிக்கு பொ.ஐ.முன்னணிக்குள் எழுந்துள்ள எதிர்ப்பால் சனாதிபதி தங்களைப் புறந்தள்ளி விடுவாரோ என்ற அச்சமாகவும் இருக்கலாம். அல்லது ரணிலுடன் மீண்டும் பேச விருப்பம் தெரிவித்துள்ள சனாதிபதி புற அழுத்தங்கள் காரணமாக அவருடன் இணக்கத்திற்கு வந்தால் தம்பாடு ஆபத்தாகி விடும் என்றும் நினைக்கலாம். ஆனால் எதுவானாலும்

ஜே.வி.பி என்ற ஒரு காலத்திய புரட்சி வாதிகள் படுமோசமான மூன்றாந்தர அரசியல் வாதிகளாகி விட்டார்கள் என்பது தெளிவானது. பாவம் இந்த வரட்டுத்தனமான தலைமைகளை நம்பி 'புரட்சியில் இறங்கி மரணித்த தோழர்கள்.

## சந்திரிகாவை சமாதானம் படுத்தும் பாடு...



சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து சந்திரிகா என்ன நினைக்கின்றார் என்று எவராவது கேள்வியொன்றைக் கேட்டால் அதற்கான பதில் அவர் ஒன்றையும் நினைக்கவில்லை ஆனால் தேவைப்படும் போதெல்லாம் அவர் அது குறித்து ஏதாவது ஒரு கருத்தை விரும்பம் போல ......அல்லது சந்தர்ப்பத்துக்கு ஏற்றால் போல கூறிவருகிறார் என்று சொல்வதே பொறுத்தமானதாகும்.

சமாதானம் என்ற சொல்லை அவர் தனது அரசியல் என்ற விருந்தில் கறிவேப்பிலையைப் போல் பயன்படுத்துகிறார். அவ்வளவுதான். அதற்கு மேல் அவர் அதற்கு எந்த விதமான முக்கியத்துவத்தையும் கொடுத்ததுமில்லை அப்படிக் கொடுக்கும் ஒரு நாகரிகமான அரசியல் பாரம்பரியத்தில் வரவுமில்லை.

சமாதானம் என்பது சிறுபான்மையோருக்கான, நியாயமான, அரசியல் உரிமைகளை வழங்குவதில் போய்த்தான் முடியும் என்ற அச்சம் அவரின் பரம்பரைக்கே உண்டு. அதனால் தான் பாம்பைப் பிடிக்க நேர்ந்த குரங்கு போன்று அதைப்பார்ப்பதும், உடன் பயத்தில் முகத்தை திருப்பிக் கொள்வதுமாக இருக்கிறார்.

இன்னொருபுறம் பௌத்த சிங்கள பேரினவாத வெறி கொண்ட பெரும்பான்மை சமூகமானது தமிழர்களின் உரிமைகள் குறித்து பேசுவதையோ, அதனை ஆங்கீகரிப்பதையோ, விரும்புவதில்லை என்பதை நன்கு அறிந்து கொண்டுள்ள சந்திரிகா, சமாதானம் என்ற சொல்லை யுத்தத்திலிருந்து பிரிக்காது சமாதானத்திற்கான யுத்தம் எனப் புதுமையான பெயரை உருவாக்கியதன் மூலம் 'யுத்தம் உண்மை சமாதானம் பொய்' என்ற மறைமுக அர்த்தத்தை உணர்த்துபவரானார்.

-1994இல் சமாதானம் மட்டும் தான் இலட்சியம் என்றார்.

-1995இல் யுத்தம் தம்மீது திணிக்கப்பட்டது என்றார்.

அதே ஆண்டில் யுத்தம் மட்டுமே தீர்வுக்கு வழி என்றார்.

-1997இல் யுத்தத்தை வென்றதும் பிரச்சினை தீர்ந்துவிடும் என்றார்.

-1998இல் சமாதானத்திற்கான யுத்தம் என்று கோஷமிட்டார்.

-ஆனால், 2000இல் பேச்சு மூச்சற்றுப் போகும் நிலைக்கு மாறினார்.

போரின் வெற்றியில் பிரச்சினைக்குத் தீர்வு என்றவர், போரின் தோல்வியில் சமாதானம் பேசும் சூழல் ஒன்றுக்குள் தாம் தள்ளப்படுவோம் என்று நினைத்துக் கூடப்பார்த்திருக்கவில்லை.

-பாவம் சமாதானத்திற்கு எத்தனையோ வரைவிலக்கணம் கொடுத்தவர் இப்போது சமாதானம் குறித்துத் தன் அரசியல் எதிரியிடம் சமாதானமாகப் பேசவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

அதாவது.. கடந்தகாலப் போட்டி அரசியலை மறந்து, விரோதமனப்பான்மையைத் திறந்து, சமாதானத்தை முன்னெடுக்க ரணிலுடன் இணைந்து பணியாற்றத் தயார்.. அதற்காக ரணிலுடன் பேசத்தயார் என்றுகூறி ரணிலைத் தன்னுடன் பேச வருமாறு பாகிஸ்தானில்- சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளப்போகுமுன் அழைப்பு விடுத்துள்ளார்...

சாத்தான் மீண்டும் வேதம் ஓத ஆரம்பிக்கிறது...

## சந்திரபாலவின் புலிகள்மீதான முறைப்பாடு



யாழ். குடாநாட்டிற்கு பலத்த பரபரப்புடன் வவுனியாவிலிருந்து மாற்றலாகி வந்த இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றிருக்கும் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தொடர்ந்து அந்தப் பரபரப்பை நிலையாக வைத்திருக்க விரும்புகின்றார் போல் தெரிகிறது.

வவுனியாவில் தனது பணியை முடித்துக்கொண்டு விடைபெறும் போது அங்குள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்திற்கு சென்று பிரியாவிடை பெற்றுக்கொண்டதுடன் விடுதலைகளின் அன்பளிப்பு நினைவுச் சின்னத்தையும் பெற்றுக்கொண்டு சமாதானத்தை வலியுறுத்திப் பேசியமையானது ஊடகங்களினூடாக பெருமளவில் பிரசாரம் செய்யப்பட அவர் பரபரப்பை ஏற்படுத்திய செய்திக்குரிய ஒருவரானதில் வியப்பில்லை.

மக்கள் நலன்பேணும், சமாதானத்தை விரும்பும், புலிகளுடன் நட்புறவைப் பேணவிரும்பும் ஒரு மாறுபட்ட இராணுவ அதிகாரியாகத் தன்னை இனம் காட்டிய விதம் எதனையும் இலகுவில் நம்பிவிடும் குடாநாட்டு மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒன்றாக இருந்ததிலும் வியப்பில்லை.

அவர் குடாநாட்டுக்கு வந்ததும் நல்லூர் கோவிலுக்குச் சென்று வழிபட்டார். இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் குறித்து தனக்கு அறியத்தந்தால் தான் உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுப்பேன் என வாக்குறுதியளித்தார். இவ்வளவும் போதாதா என்ன?

இவர் சரத் பொன்சேகா போன்ற அதிகாரியல்ல எனத் தமிழ் மக்களின் வெகுளித்தனம் நம்பத் தொடங்க, அதை மேலும் உறுதிப்படுத்த அவர் மக்களுடன் நெருங்கிப் பழகுவது போன்று தன்னை இனம் காட்டுவதில் தீவிரம் காட்டினார்.

இதன்பின்னர் ஒரு உள்நோக்கம் இருந்தது. அது இப்போது வெளிப்பட்டுள்ளது. அதாவது மக்களோடு நெருங்கிப்பழகினால் கொல்லப்படுவீர் என அவருக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி மக்களிடையே பரப்பப்பட்டு ஊடகங்களூடாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கண்காணிப்புக் குழுவும் விசாரணை நடத்தப்போகிறதாம்.

அண்மையில் விடுதலைப் புலிகளின் பிரதி அரசியல் துறைப் பொறுப்பாளர் ஒருவர் சாவகச்சேரியில் தன்னை அச்சுறுத்தியதாகவும் சுசில் சந்திரபால தெரிவித்துள்ளமையானது மக்களுக்கு விடுதலைப் புலிகள் மீது அதிருப்தியை ஏற்படுத்தும் முயற்சியாகவே கருதப்படுகின்றது.

இன்றைய சமாதான சூழலில் விடுதலைப் புலிகளும், இராணுவத்தளபதிகளும் அடிக்கடி சந்திப்பதும், பேசுவதும், பிரச்சினைகளுக்கு இணக்கம் காண்பதும், சகஜமாகியுள்ள நிலையில் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவின் குற்றச்சாட்டின் தன்மை அர்த்தமற்ற ஒன்றாகவே உள்ளது. மக்களை நேசித்து அவர்களோடு நெருக்கமாகப் பழகி அவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணமுயலும் தன்னை விடுதலைப் புலிகள் அச்சுறுத்துகின்றனர் என்ற கருத்தியல் தாக்கத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் புலிகளை மக்கள் மனதில் இருந்து அகற்றும் உளவியல் ஊடுருவல் செயற்பாடுகளில் அவர் இறங்கியிருக்கிறாரோ என்ற எண்ணம் தமிழ் மக்கள் மனதில் உருவாகிவிட்டது என்றே கூறவேண்டும்...

அறிவையும் மனதையும் வெல்லும் (Winnig hearts and minds) நடவடிக்கைகளை இந்தவகையில் மேற்கொள்வது ஒரு விதமான இராணுவ நடவடிக்கையேயாகும்.

சமாதான சூழலில் இதெல்லாம் தேவையா....?

## அழுத்தங்களும், அறிவுறுத்தல்களும்...



சிறிலங்காவின் ஆட்சியின் இரட்டைத் தலைமைகளான சனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் மீதான சர்வதேச அழுத்தங்கள் பலவழிகளிலும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளமை மிகவும் வெளிப்படையாகவே தெரிகிறது.

இந்த அழுத்தங்கள் நேரடியாகவும், மறைமுகமாவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

புறத்தே, சமாதானத்தை முன்னெடுப்பதற்கு இரு தரப்பினரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு விரைவில் வரவேண்டும் என்பதை வலியுறுத்து வதாக இந்த அழுத்தம் அமைந்திருந்தாலும், அகத்தே இந்த அழுத்தத்திற்கு பல்வேறு விதமான அரசியல் உள்நோக்கங்களுடன் கூடிய காரணிகளும் இருப்பதை மறுக்கமுடியாது.

அழுத்தம் கொடுக்கும் நாடுகள் தத்தமது அரசியல் அபிலாசைகளையும் இந்த அழுத்தத்தினூடாக சமிக்ஞை செய்யத் தவறவேயில்லை. இந்த அழுத்தங்களின் அதிகபட்ச பழுவானது பிரதமரை விடவும் இப்போது சனாதிபதி மீதே அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. சிறிலங்காவின் அரசாங்கம் பெயருக்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் பெயரில் இயங்கினாலும், அது அதிகாரபலமற்ற, தீர்மானங்கள் எடுக்க முடியாத, தீர்மானங்களை எடுத்தாலும் சனாதிபதியால் நிராகரித்து ஒதுக்கி விடக்கூடிய, ஒன்றாகவே உள்ளது என்பதால் பிரதமர் மீது கொடுக்கப்படும் அழுத்தங்களுக்கு பெருமளவில் அர்த்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அத்துடன் ரணிலே நேரடியாக தனக்கு அதிகாரமில்லை என்பதால் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் தான் தலைமை வகிக்க முடியாது என்று கூறிவிட்டுள்ள நிலையில் அழுத்தங்கள் அனைத்தும் சந்திரிகாவின் மீதே தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. அதேவேளை அவர் மீதான அழுத்தங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தன்மையைக் கொண்டனவாகவே உள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயம்.

அமெரிக்கா ஒருவிதமான அழுத்தத்தை தானே நேரடியாகவும், தனது ஆதரவு நாடுகள் மூலமாகவும் மேற்கொண்டு வரும் அதேவேளை இந்தியாவோ தனது பிராந்திய அரசியல் அபிலாஷைகளுக்கேற்ப வேறுவகையிலான தன்மை கொண்ட, அதாவது அமெரிக்க அழுத்தங்களுக்கு மாறுபட்ட தன்மைகொண்டதான, அறிவுறுத்தல்களையே மறைமுகமாக சந்திரிகாமீது மேற்கொண்டு வருவதுதான் அவரது இரண்டுமற்ற தன்மைக்கு காரணமாகும். இந்நிலையில் தனது அதிரடி அரசியல் நடவடிக்கைகளின் மூலம் ரணிலுக்கு அரசியல் குழப்பங்களை ஏற்படுத்த முயன்ற அதேவேளை, தனக்குத்தானே ஒரு சர்வதேச அரசியல் நெருக்கடியையும் தோற்றுவித்துள்ளார் என்றே கூறவேண்டும்.

இந்திய அறிவுறுத்தலுக்கு செவிசாய்ப்பதா? அமெரிக்க அழுத்தங்களின் வழி நடப்பதா இவையே அவரை இப்போது விடைகாண முடியாது தவிக்க வைத்துள்ள பிரச்சினைக்குரிய கேள்விகளாகும். இந்த நிலையில் அமெரிக்க அழுத்தத்தை சனாதிபதி பொருட்படுத்தும் சாத்தியமில்லை என்று சனாதிபதி செயலகத்தை சேர்ந்த வட்டாரங்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது....

இது ஒருவேளை சரியாகவும் இருக்கலாம். ஏனெனில் தற்போது சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள பாகிஸ்தான் சென்றிருக்கும் சந்திரிகா, இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் இலங்கை அரசியல் நெருக்கடி குறித்து பேசவுள்ளதாகக் கூறப்படுகிறது....

வாஜ்பாய் சந்திரிகாவுக்கு என்ன கூறப்போகிறார்.

அமெரிக்காவின் சொற்படி நடக்குமாறு நிச்சயமாகக் கூறமாட்டார் என்பது மட்டும் நிச்சயம்.

**செங்குட்டுவன்**

அனுபவத்தின் பயன், அதிகம் பார்ப்பதில் அல்ல; அறிவோடு பார்ப்பதில்தான். - ஸர் வில்லியம் அஸ்வர்

# வவுனியா அமைதியடையுமா?

போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலும் வவுனியா மக்கள் பல்வேறு விதமான நெருக்குவாரங்களுக்கும் அவலங்களுக்கும் முகம் கொடுத்தே தமது வாழ்க்கையை நடத்தினர். "பாஸ்" கெடுபிடிகளும் திடீர் சுற்றிவளைப்புகளும் கைதுகளும், செக் பொயின்றுகளின் வழிமறிப்புக்கள் ஒரு புறமும் மறுபுறத்தில் முன்னாள் மாற்று ஆயுதக் குழுக்களின் அட்டகாசம் என இம் மக்களை தினம் தினம் பயபீதியுடன் வாழ நிர்ப்பந்தித்த பட்டியல், நீளும் துயராய் விரிந்து செல்லும்.....

வவுனியாவில் அண்மைக் காலமாக தொடராக இடம்பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களால் இன்றைய சமாதானச் சூழலிலும் மக்கள் பெரிதும் அச்சமடைந்தவர்களாக வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.



பூந்தோட்டம், நெளுக்குளம், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், திருநாவற்குளம், தாண்டிக்குளம், கோவில்குளம் போன்ற பகுதிகளில் இக் கொள்ளைகள் பரவலாக இடம் பெற்றுள்ளன.

பணமும், நகைகளும் பறிபோன கொள்ளைச் சம்பவங்களை ஆயுதந் தரித்த குழுக்களே நடாத்தியுள்ளன.

பண்டாரிக் குளத்தில் கொள்ளையரைத் துரத்திப் பிடிக்க முற்பட்ட போது வீட்டுக்காரர் கிரனைட் தாக்குதலுக்குள்ளானார். நெளுக்குளத்தில் நீதிமன்ற ஊழியரின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர் வீட்டுக்காரர்களினால் மடக்கப்பட்ட போது ஊழியரை சுட்டு விட்டு T-56 ரக துப்பாக்கியையும் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இவ் ஆயுதம் படையினரின் காவலரணிலிருந்தது காணாமல் போனதாக படைத் தரப்பில் பின்னர் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

எனினும் ஆயுத முனையில் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்கின்றன. அதன் பின்னர் திருநாவற்குளத்தில் நகைத் தொழிலில் ஈடுபடும் ஒருவரின் வீட்டில் இரவு 7மணியளவில் சன நடமாட்டம் உள்ளபோதே துப்பாக்கி முனையில் கொள்ளைபோனது. கோவில் குளப்பகுதியில் பூசகரின் வீட்டிலும் நகைகளும், பணமும் ஆயுததாரிகளினால் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவமும் நடைபெற்றுள்ளது.

நடுநிசியில் யன்னல் கம்பிகளை வளைத்து உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் உட்புகுந்து தமது கைவரிசையைக் காட்டும் இன்னொரு வகையான கொள்ளைச் சம்பவங்களும் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் 15 ற்கு மேற்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. வீட்டுக்காரர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த போதும் இக் கொள்ளைகள் இடம் பெறும் போதும் விழித்துக் கொள்ள முடியாமல் போவது ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது. ஒரு வித மயக்க மருந்து விசிறப்பட்டு நடைபெறுவதாக பலமான சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இச் சம்பவங்களில் விழிப்படைந்த சிலர் துப்பாக்கிப் பிரயோகத்திற்கும், வெட்டுக்காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இதுவரை எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது மக்களுக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது. கடந்த வாரம் திருநாவற்குளம் பகுதி வீடொன்றில் ஐம்பது பவுணுக்கு மேற்பட்டநகைகளும் பெறுமதியான சில பொருட்களும் மேற்குறித்த பாணியில் கொள்ளை போனது இங்கு விசாரணைக்காக விஜயம் செய்த பொலிஸ் பொறுப்பதிகாரி "இக் கொள்ளையர்கள் இங்கு தமது கைவரிசையைக் காட்டி விட்டு வன்னிக்கு தப்பித்துச் சென்று விடுவதாக" எழுந்தமானமாக நியாயம் கற்பித்து விட்டு சென்றார். பொதுமக்கள் அயலவர்களிடம் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இப் பகுதி இளைஞர் குழு ஒன்று பொது மக்களின் தகவல்களின் உதவியோடு இச் சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வர் கொண்ட கொள்ளையர் குழு ஒன்றை பல்வேறு பகுதிகளில் இருந்தும் மடக்கிப் பிடித்துள்ளது. இவர்களிடமிருந்து பெறுமதிவாய்ந்த பொருட்களும் மீட்கப்பட்டன பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இவர்களிடமிருந்து மேலதிக விசாரணைகள் உரிய முறையில் நடத்தப்படாததினால் நகைகள் எதுவும் மீட்கப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறும் முறை, முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் என்பவை தொடர்பாக பிரஸ்தாபிக்கும் மக்கள் இக் கொள்ளைகளுடன் முன்னாள் ஆயுதக் குழுக்களுக்கும் படையிலிருந்து தப்பியவர்களுக்கும் தொடர்பிருப்பதாக பலமான சந்தேகங்களை முன் வைக்கின்றனர்.

இக் கொள்ளைகளைத் தொடர்ந்து இப் பகுதி மக்கள் பலர் தமது பெறுமதிவாய்ந்த நகைகள், ஆபரணங்களை பாதுகாப்பிற்காக ஒரு குறைந்த பெறுமதிக்கேனும் வங்கிகளில் அடைவு வைப்பதில் அக்கறை காட்டி வருகின்றனர்.

வவுனியா வளாக சமூகத்தினர் வவுனியாவில் இடம் பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டி இங்குள்ள வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரைச் சந்தித்துள்ளனர். தலைவரோ தமிழ்த் தேசியப் பிரச்சினைகள் என்று தொடங்கி..... கூட்டணியின் தலைமைத்துவம் உட்கட்சி முரண்பாடு தொடர்பாக வந்தவர்களுக்கு வகுப்பு நடாத்தி விட்டு கைவிரித்து விட்டாராம்.


இது இவ்வாறு இருக்க பின்னொரு சனிக்கிழமை வவுனியா குருமன் காட்டுப் பகுதியில் வைத்து அஜித்குமார் என்ற வாலிபர் இனம் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார். இக் கொலைக்கான பின்னணி, யார் இதனைச் செய்தார்கள் என்பது பகிரங்கப்படுத்தப்படாத போதும் இவ் இளைஞரின் மரணத்திற்கு அதிகளவில் வவுனியாவில் அனுதாபம் எழவில்லை எதிர்மாறான உணர்வுகளே எழுந்தன ''அஜித் குறூப்'' என்ற இளைஞர் குழுவின் தலைவராக தன்னை இனம் காட்டிக் கொண்டு பல சமூக அநீதிச் செயற்பாடுகளிலும் குற்றச் செயல்களிலும் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வந்துள்ளார் என அறியப்படுகிறது.

தாண்டிக்குளம் பகுதியில் நடைபெற்ற கொள்ளைச்சம்பவத்துடன் இவருக்கிருந்த தொடர்பினைச் சுட்டிக் காட்டிய பெண்மணி (இவர் கொள்ளைச் சம்பவத்தில் காயமடைந்தவர்) சுஜித்திடம் நேருக்கு நேர் நின்று நியாயம் கேட்டு பலர் பார்த்திருக்க திட்டித் தீர்த்ததும் ஊர் அறிந்த விடையம் தானாம் இவரும் இவரது சகாக்களும் கொண்டுள்ள குடும்ப அரசியல், அதிகாரப் பின்னணியால் மக்கள் மௌனம் காத்தனர் இதன் பின்னர் கொலைமிரட்டல் கடிதம் ஒன்று சில இளைஞர்களின் பெயர்களை குறிப்பிட்டு புலிச்சின்னத்துடன் வந்ததாக சிலர் பொலிஸில் சென்று தஞ்சமடைந்தனர். அக் கடிதம் கையெழுத்திலேயே இருந்தது. எழுத்துப் பிழையுடனும் இருந்தது. வவுனியா புலிகள் அரசியல் துறை தமக்கு இதில் தொடர்பில்லை என மறுத்திருக்கிறது.

ஆயினும் அதன் பின்னால் வவுனியா சற்று அமைதியாகிறது போல் தெரிகிறது இது முன்னரே நடந்திருக்கலாமே என்றும் மக்கள் கூடிக் கதைக்கிறார்கள்.

**கிளியன்**

## மதவடி மயிலர்



**செய்தி :-** புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரி புஷ்ஷுக்கு அமைச்சர் மகேஸ்வரன் கடிதம்.

**மயிலர்:-** 'புஷ்'ஸை மகேஸ்வரன் 'புஸ்' பண்ணுகிறார் போலும்... இதுவும் புஸ்வாணம் ஆகாமல் இருந்தால் நல்லது தான்... ஆனால் புஷ்ஷுக்கு அவரையாரும் 'விஷ்' பண்ணுவது பிடிக்கும்.. 'புஸ்' பண்ணுவது பிடிக்காது என்பது மகேஸ்வரருக்கு தெரியாது போலும்...

**செய்தி :-** சர்வதேச அழுத்தங்கள் அதிகரிப்பு சனாதிபதி சந்திரிகா அதிருப்தி.

**மயிலர் :-** சர்வதேசம் ஆயுதம் கொடுத்தா அம்மாவுக்கு படுதிருப்தி சமாதானத்திற்கு அழுத்தம் கொடுத்தா அதிருப்தியா?

**செய்தி :-** சமாதான முயற்சிகள் குறித்து ஆராய அமெரிக்க பிரதிநிதிகள் வருகின்றனர்...

**மயிலர்:-** உள்ளூர் பிரதிநிதிகளும், அயலூர் பிரதிநிதிகளும் ஆராய்ந்து களைத்துப் போய் விட்டனர்... இப்ப அமெரிக்க பிரதிநிதிகள் வரப்போகினம் பாருங்கோ... அதிகார மோதலே அமைதிக்கு இடைஞ்சல் என்பதை அறிய ஆராய்ச்சி தேவையாக்கும்...!

**செய்தி :-** மீண்டும் பேச்சு நடத்த ரணிலை வருமாறு சந்திரிகா அழைக்கிறார்.

**மயிலர்:-** மீண்டும் வேதாளம் முருங்கைமரத்தில் ஏறப்போகுது என்று சொல்லுங்கோ... பேசுவதற்கு அழைத்து கெடுத்தது ஆட்சி. பேசிப்பார்த்தே கெட்டது அரசு.... அம்மணிக்கு பொழுது போகவில்லை என்றால் ஐயாவை பேச்சுக்கு அழைத்து பேய்க்காட்டுவார்... இது தெரிஞ்ச விடயம்தானே!

**செய்தி :-** பதவிக்கு வந்த அரசாங்கங்கள் மக்களை ஏழைகளாக்கியுள்ளனர்... மகாநாயக்க தேரர் தெரிவிப்பு.

**மயிலர்:-** பதவிக்கு வராத அரசாங்கங்கள் மக்களை பணக்காரராக்கிவிடும் என்று இதனாலை கருதக்கூடாது பாருங்கோ. அதுசரி இந்த உண்மையைச் சொன்ன மகாநாயக்கர் பதவிக்கு வந்த அரசுகள் மக்களின் வரிப்பணத்தால் பணக்காரராகி விட்டார்கள் என்ற உண்மையை ஏன் கூறவில்லை?

**செய்தி :-** சமாதான முயற்சிகளை முன்னெடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என சனாதிபதி வேண்டுகோள்...

**மயிலர்:-** இருவருடங்களுக்கு முன்னர் யுத்தத்தை முன்னெடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என இதே சந்திரிகா கூறியதை நாங்கள் இன்னமும் மறக்கவில்லைப் பாருங்கோ... முதல்லை இப்படித்தான் கூறுவா.. பின்னர் சமாதானத்துக்கான யுத்தத்தை முன்னெடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அறைகூவல் விடுப்பா பாருங்கோ.

நேர்நோக்கு

# பொருத்தமான உபதேசமல்ல

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு உறுதியான அணுகு முறைகள் மூலம் அடிப்படைக் காரணங்களை இனங்கண்டு அவற்றுக்குரிய பரிகாரம் காண்பது இன்றியமையாதது எனவும் அத்தகைய முயற்சிகளின் நன்மைகளை இலங்கை அனுபவிக்கத் தொடங்கியுள்ளது. எனவும் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார். இந்தக் கருத்தை அவர் அண்டை நாடுகள் கலந்து கொண்ட 'சார்க்' மாநாட்டில் கூறியிருப்பதுதான் மிகச்சிறப்பானதாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த 09-வருடங்களாக சிறிலங்காவின் தலைவியாக ஆட்சி புரிந்து வருகிறார். அவர் தனது முதல் ஐந்து வருட ஆட்சிக் காலத்திலும், அடுத்த ஒரு வருடகாலமும் "பயங்கரவாத ஒழிப்பிலேயே" முழுக்க வனத்தையும் செலுத்தினர். பின்னர் இந்த முயற்சியில் முற்றுமுழுதாகத் தோல்வியடைந்து அடுத்து என்ன? என்று தெரியாத நிலையில் சிங்கள மக்களே சமாதான நல் வழியை காட்டி விட்டனர்.

அவரது ஆறுவருட "பயங்கரவாத ஒழிப்புக்" காலத்திலும் நடத்திய கொடூர யுத்தத்திற்கு அவர் சூட்டிய பெயர் "சமாதானத்திற்கான யுத்தம்" அதாவது யுத்தத்தில் வெற்றி பெற்றுச் சமாதானத்தை உருவாக்குதல் என்பது அவரது அடிப்படை வியூகமாகும். ஆனால் அவர் அந்த யுத்தத்தில் வெற்றி பெறவும் இல்லை. சமாதானத்தை உருவாக்கவும் இல்லை. ஆனால் விடுதலைப் புலிகள் அக்காலப்பகுதியில் உறுதியாக நடத்திய போராட்டம் அவர்களுக்கு வெற்றியைத் தந்தது மட்டுமல்லாது சமாதான சூழ்நிலையையும் ஏற்படுத்தியது. எனவே புலிகள் நடத்திய யுத்தம் சமாதானத்தை உருவாக்கியதேயொழிய, சந்திரிகா புரிந்த யுத்தம் சமாதானத்தை உருவாக்கவில்லை. எனவே இன்றைய சமாதான சூழ்நிலை குறித்து அவர் பெருமைப்பட எதுவுமேயில்லை என்பது மட்டுமல்ல, பெருமைப்பட அவருக்கு எதுவித தகுதியுமில்லை.

இந்தப் படிப்பினையிலிருந்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புரிந்துகொள்ளவேண்டிய விடயமொன்று இருக்கிறது. அதாவது பயங்கரவாதம் அல்லது ஆக்கிரமிப்பு சமாதானத்தைத் தராது என்பதுவே அதுவாகும்.

விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்தி நடத்திய போராட்டம் பயங்கரவாதமாக இருந்திருப்பின் அதாவது குறிக்கோளற்ற ஒரு போராட்டமாக இருந்திருப்பின் அது ஒரு போதும் சமாதானத்தைத் தேடித்தந்திருக்காது.

விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் சார்பாக இந்தப் போராட்டத்தை ஏன் முன்னெடுத்தார்கள்? என்ற கேள்விக்கான பதிலை அதற்கான அடிப்படைக் காரணத்தைச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனங்கண்டு அதற்குப் பரிகாரம் காணமுயன்றிருப்பாராயின் ஆறுவருடகாலத்தில் அவர் பாரிய யுத்தமொன்றை நடத்தி சிறிலங்காவை படுகுழிக்குள் தள்ளியிருக்க வேண்டிய தேவை எழுந்திராது.



சமாதான முயற்சிகளை மேற்கொள்ள அதாவது பிரச்சினையை இனங்கண்டு அதற்குப் பரிகாரம் காண அவருக்குச் சந்தர்ப்பம் கிட்டாமலும் இல்லை. ஏனெனில் அவரது ஆட்சிக் காலமும் சமாதானத்துக்கான ஒரு நம்பிக்கையுடனேயே ஆரம்பமானது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சரியான முறையில் திட்டமிட்டு யுத்தத்தை நடத்தாமையினாலேயே அதனால் யுத்தத்தில் வெற்றிபெற முடியவில்லை எனவும் பல வருடங்களுக்கு யுத்தம் புரிய ஒதுக்கும் நிதியை ஒரேவருடத்தில் ஒதுக்கித் தீவிரமான யுத்தமொன்றை நடத்துவதன் மூலம் "பயங்கரவாதத்தை" ஒழித்துவிட முடியும் எனவும் அவர் எண்ணிக் கொண்டதே அவர் பிரச்சினைக்கான காரணத்தைக் கண்டறிய முடியாமைக்கு அல்லது அவரது தவறான யுத்தத்திற்கு காரணமாக அமைந்தது.

இப்பொழுதும் தனது சமாதான முயற்சிகளையே இன்றைய அரசு பின்பற்றுவதாகப் பெருமையடித்துக்கொள்ளுவர் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் அதாவது "பிரச்சினையை இனங்கண்டு பரிகாரம் தேடும்" முயற்சிகளை நாசம் செய்யும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றார்.

இன்று சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டி சமாதான முயற்சிகளுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும் இச்சமாதான முயற்சிகளில் நேரடியாகப் பங்கேற்ற நோர்வே இதிலிருந்து தற்காலிகமாக விலகியிருக்கிறது. ஆதரவளித்த நாடுகள் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுவரும் பாதக நிலை குறித்து கவலையுடன் எச்சரிக்கை செய்துள்ளன.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சமாதான நடவடிக்கைகள் குறித்து அவ நம்பிக்கையும் கவலையும் கொண்டுள்ளனர்.

ஆனால் அதிகாரத் தரப்புக்கள் விட்டுக் கொடுப்பு எதற்குமே தயாராகவில்லை. அதிலும் முக்கியமாக தனது திட்டமிட்ட நடவடிக்கை மூலம் சமாதான முயற்சிகளை தேக்கநிலையடையச் செய்துள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதுகுறித்துக் கவலை கொள்பவராக இல்லை. இதன் மூலம் அவர் மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ள பலன்களை இல்லாதொழித்துவிடவே முயல்கிறார்.

இந்நிலையில் அவர் சார்க் மாநாட்டில் "பயங்கரவாதத்திற்குப்" பரிகாரம் தேடுவது எப்படி? என விளக்குவதும் தாம் பரிகாரம் தேடி வருவதால் இலங்கை மக்கள் சமாதானத்தை அனுபவிக்க தொடங்கியுள்ளதாகக் கூறுவதும் அவரது வழமையான பாணியிலான ஏமாற்றுப் பேச்சே. சந்திரிகா அம்மையாரின் உபதேசம். ஊருக்கு உகந்ததாயிருப்பினும் அவருக்குப் பொருந்துவதாயில்லை.

வேலவன்

# பரிதாபத்திற்குரிய உப்பள ஊழியர்கள்

கைத் தொழில் அமைச்சின் கீழ் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கி வந்த பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இனியும் இயங்கக் கூடிய தடயங்கள் இல்லாமல் இருந்தும் கூட இத்தொழிற்சாலையில் கடமையாற்றிய நிரந்தர ஊழியர்கள் அனைவரும் மாதக் கணக்கில் சம்பளம் பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், இதே அமைச்சின் கீழ் இயங்கிவந்த ஆனையிறவு-குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் இயங்கக்கூடிய வளங்களை வைத்திருந்தும் இங்கு கடமையாற்றிய நிரந்தர ஊழியர்களுக்கு 1998 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படாதிருப்பது மிகவும் பரிதாபத்திற்குரிய விடயமே! இப்பரிதாபத்திற்குரியவர்கள் நாளாந்தம் வாழ்க்கையில் படும் அலங்கோலங்கள் சிலவற்றைச் சொல்லாமலும் இருக்க முடியாது.

மேற்படி உப்பளங்களிலேயே வேலை பார்த்து இச்சம்பளத்தையே நம்பி வாழ்க்கையை ஓட்டநினைத்து இயலாமையால் கடன் தொல்லையால் ஊர்விட்டு ஊர் போனவர்கள், கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற நினைத்து இயலாமல் உடல் இழைத்துப் படுக்கையானவர்கள், இறந்தவர்கள், உப்பளமே தஞ்சமென நம்பிப் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து எதிர்பாராமல் ஏற்பட்ட இடப்பெயர்வால் (1990 ஆம் ஆண்டு ஆடி மாதம்) திக்குத் திசை தெரியாமல் ஓடி அகப்பட்ட ஒட்டுக் குடிகளிலிருந்து காலம் கழித்தது மல்லாமல் காணி பூமியற்ற இவர்கள் மாதம் ஒருமுறை யாவுதல் வீட்டுக்கு வீடு இடம்பெயரும் நிகழ்வுகள்... இப்படி எத்தனை.... எத்தனையோ...



இவர்களின் கஷ்டங்கள்; துன்பங்களை அரசாங்கத்துடன் எடுத்துக் கதைக்க வன்னியில் இருந்த ஒரு உப்பு அத்தியட்சகரும் (S.m.கபரியல்,பிரமந்தனாறு) அண்மையில் மாரடைப்பால் காலமானார்.


## தொழிற்சங்க நடவடிக்கை

இந்த உப்புத் தொழிலாளர்களை நெறிப்படுத்திவந்த, கொழும்பைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத் (C.M.U) தின் ஆனையிறவுக் கிளைச் செயலாளர் திரு.ப.சுந்தரலிங்கம் மேற்படி தொழிலாளர்களின் விடயம் பற்றி கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு.இராசநாயகத்துடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அதேநேரத்தில் இச்சங்கத்தின் கொழும்புக்கிளை சம்பந்தப்பட்ட அமைச்சுடன் உப்பள ஊழியர்களின் சம்பள விடயம் பற்றி நடத்திய கலந்துரையாடல் மூலம் கொடுத்த தாக்கத்தின் பிரகாரம் சம்பளத்துடனான நட்ட ஈடு வழங்க அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் நம்பப்படுகின்றது. வருடக் கணக்காகச் சம்பளமற்றிருந்த பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்கட்கு, அமைச்சுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மாதக் கணக்கில் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்த பெருமை இதே தொழிற்சங்கத்திற்குத்தான் உரியது என்பது குறிப்பிடத் தக்கது.

## பாராட்டுக்குரிய அரச அதிபர்

உப்பள ஊழியர்களின் நிலைமையை நன்குணர்ந்த பின் கைத் தொழில் அமைச்சுடன் தொடர்பு கொண்டு பரிந்துரைத்த கையுடன் உப்பள ஊழியர்கட்குச் சம்பளம் கிடைக்கும் வரை நிவாரணம் வழங்கும்படி உத்தரவு பிறப்பித்தமை மிகவும் பாராட்ட வேண்டிய ஒரு விடயமாகும். எது எப்படி இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தின் ஆளுகைக்குட்பட்ட ஆனையிறவு உப்பளத் தொழிலாளர்களின் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் கிளிநொச்சி அரச அதிபர் திரு.இராசநாயகத்துக்கே உரியது எனக் கூறுவது மிகவும் பொருத்தமான தாகும். கவனிப்பாரற்றுக் கிடக்கும் உப்பள ஊழியர்களின் சம்பளத்தை விரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க கிளிநொச்சி அரச அதிபர் முன்வருவாரேயானால் இது மிகவும் பாராட்டப்படக்கூடிய விடயமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

கருணா







# சிக்கிம் மன்னரின் காதலின் பின்னாலிருந்த அரசியல்

இமய மலைச் சாரலின் தென்-கிழக்குப்பகுதியில் நேபாளம், சிக்கிம், பூட்டான் ஆகிய மூன்று மன்னராட்சி நாடுகள் இருக்கின்றன இவற்றுள் பெரியது நேபாளம் சிறியது சிக்கிம் பிரிட்டிஷ் ஆட்சி நிலவிய காலத்தில் சிக்கிம், பூட்டான் ஆகியவை பிரிட்டிசாரின் கட்டுப்பாட்டில் இயங்கின வெளிவிவகாரம், பாதுகாப்பு ஆகிய துறைகளைப் பிரிட்டிசார் கவனித்துக் கொண்டனர். உள்ளாட்சி பொறுப்பு மாத்திரம் இரு நாடுகளுக்கும் வழங்கப்பட்டன. இந்தியா சுதந்திரம் அடைந்த பின் இதே கொள்கையை இந்தியாவும் தனதாக்கியது. பிரிட்டிசாரைப் போல நேபாளத்தை தனித்தியங்க அனுமதித்தாலும் அவ்வப்போது நேபாள விவகாரங்களில் இந்தியா தலையிட்டு வருகின்றது.

நோயை உருவாக்கி அதற்குத்தானே மருந்தாக நுழைவது, காலம் காலமாக அயல் நாடுகள் சம்பந்தமாக இந்தியா கடைப்பிடிக்கும் வெளியுறவுக் கொள்கை. இதை நாம் மேற் கூறிய மூன்று மன்னராட்சி நாடுகள் சம்பந்தமான விவகாரங்களில் அவதானிக்கலாம்.1950இல் இந்தியாவும் சிக்கிமும் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி உள்நாட்டு அரசியல் நிர்வாகப் பொறுப்பு சிக்கிம் நாட்டிற்கு இந்தியா வழங்கியது. பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரப் பொறுப்பை தன்பால் இந்தியா வைத்துக் கொண்டது. அத்துடன் இந்தியப் படையணியை சிக்கிம் மண்ணில் நிறுத்தி வைக்கும் உரிமையையும் இந்த உடன்படிக்கை மூலம் இந்தியா பெற்றுக் கொண்டது.

சிக்கிமிற்கு முன்பே பூட்டான் நாட்டை இந்தியா தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது. பூட்டானின் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரம் 1949இல் செய்யப்பட்ட உடன்படிக்கைப்படி இந்தியா வசம் சென்றன. உள்நாட்டுச் சுதந்திரம் மாத்திரம் பூட்டானுக்கு உண்டு இரு நாடுகளையும் வேகமாக தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டிய அவசர தேவை இந்தியாவுக்கு இருக்கிறது பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் சீன அரசு பூட்டான் தனக்குச் சொந்தமென்று உரிமை கோரியது. பலமான நிலையில் இருந்த பிரிட்டிசார் இதை நிராகரித்தனர். 18 ஆம் நூற்றாண்டில் திபெத்தின் பிடியில் சிக்கிம் இருந்தது. 1950இல் திபெத்தைக் கைப்பற்றிய செஞ்சீனா சிக்கிமிற்கும் உரிமை கோரியது. 2003வரை இந்தியாவின் சிக்கிம் மீதான உரிமையை சீனா ஏற்றுக் கொள்ளவில்லை. சீனாவின் வரை படங்களில் சிக்கிம் சீன நிலப் பரப்பின் ஒரு பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது.



இந்திய அரசியல் சாசனத் திருத்தச் செய்யப்பட்ட 38ஆம் திருத்தத்தின் படி 26 ஏப்ரல் 1975 தொடக்கம் சிக்கிம் இந்தியக் குடியரசின் 22ஆம் மாநிலமாக அமையும் வண்ணம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை மிகக் குறைந்த மாநிலமாக இருக்கும் சிக்கிம், ஒரு விசேட முக்கியத்துவம் உள்ளதாக இருக்கின்றது. இந்தியாவில் இருந்து திபெத்திற்குச் செல்லும் மிகவும் குறுகிய தூரமுள்ள பாதை சிக்கிம் ஊடாகச் செல்கின்றது. உலகின் மூன்றாவது உயர்ந்த மலையான கஞ்சென்ஜுங்கா சிக்கிமில் காணப்படுவதோடு அது பிற இடங்களில் காணப்படாத தாவரங்களைக் கொண்ட "தாவர வியலாளர்களின் சொர்க்கமாக" திகழ்கின்றது.

சிக்கிம் நாட்டின் சட்ட மன்றம்(legislative council) 10 ஏப்ரல்1975இல் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி சிக்கிமின் மன்னராட்சி முற்றாக நிறுத்தப்பட்டது. இந்தியாவின் 22ஆம் மாநிலமாக இணைக்கப்படுவதற்கு இரு வாரத்திற்கு முன் மேற்கூறிய மன்னராட்சி நிறுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மன்னராட்சி நிறுத்தப்படுவதற்கு அப்போது சிக்கிம் மன்னராகப் பதவி வகித்த சொகியால்(choGyal) அரச பரம்பரையைச் சேர்ந்த பால்தென் தொண்டுப் நாம்கியால்(palden tondup namgyal) மன்னரின் திருமணம் தான் முக்கிய காரணமாக இடம் பெற்றது.


பால்தென் தொண்டுப் நாம்கியால் 23மே1923இல் பிறந்தவர் அவருக்கு ஒரு மூத்த ஆண் சகோதரம் இருந்தபடியால் சொகியால் அரச பரம்பரை வழக்கப்படி புத்த மதகுரு பீடமொன்றுக்கு தவ வாழ்க்கை நடத்துவதற்காக அவர் அனுப்பப்பட்டார். 60வீதமான இந்துக்களைக் கொண்ட நாடாக இருப்பினும் சிக்கிம் அரசியல் விவகாரங்களில் புத்தமத லாமாக்களின் செல்வாக்குத்தான் மேலோங்குகின்றது. இன்றும் ஒரு புத்தமத நாடாகவே சிக்கிம் கணிப்பிடப்படுகின்றது. இதே நிலவரத்தை இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நேபாளத்திலும் நாம் அவதானிக்கலாம்.

இரண்டாம் உலகப் போரில் விமானியாகப் பணியாற்றிய பால்தென் தொண்டு நாம்கியாவின் மூத்த சகோதரன் 1941ல் கொல்லப்பட்டார். அதன்பின் அந்த அரசகுமாரன் தனது லாமாப் பயிற்சியை நிறுத்திக் கொண்டு அரண்மனைவாழ்க்கைக்குத் திரும்பினார். அவர் ஆங்கிலப் படிப்பு, நிர்வாகப் பயிற்சி போன்றவற்றில் ஈடுபட்டார். இருபத்தியேழாம் வயதில் தனது நாட்டு அரச குடும்பப் பெண்ணைத் திருமணம் செய்தார். இரு ஆண் ஒரு பெண் மகவுகளை ஈன்ற பின் இப்பெண் 1957ல் இயற்கை எய்தினார்.

தனித்து வாழ்ந்த பட்டத்து இளவரசர் 1960ல் தனது பிள்ளைகளுடன் டார்ஜீலிங் நகருக்கு ஓய்வெடுக்கச் சென்றார். தனது உல்லாச விடுதியின் தேனீர் சாலையில் அவர் பலமேலத் தட்டு மனிதர்களோடு அமர்ந்திருக்கும் போது அவருடைய வாழ்க்கையை மாற்றியமைத்த நிகழ்ச்சி நடைபெற்றது.அவருடைய மேசைக்கு முன்னால் இருந்த வெற்று நாற்காலியில் திடீரென ஒரு அமெரிக்க வெள்ளை மாது வந்து அமர்ந்தாள். மரியாதை காரணமாக அப்பெண்ணுடன் பேச்சுக்கொடுத்தபடி அவருக்கு தேனீர் கொடுத்து உபசரித்தார். இப்பெண் அவரை அதுவும் முன்பின் தெரியாத ஒருவரை இப்படி அணுகுவதற்கு ஏதோ தூண்டுதல் இருக்கலாம் என்று சந்தே கிக்கப்படுகின்றது.

அது பனிப்போர் உச்சமடைந்த காலம். சோவியத் ஒன்றியம் அமெரிக்கத் தலைமையில் உலகம் இரண்டு பட்டுக்கிடந்தது. இந்தியா அப்போது சோவியத் ஒன்றியத்துடன் நெருக்கமாக இருந்தது.திபெத் இந்தியா ஆகியவற்றிற்கு இடையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் சின்னஞ் சிறிய சிக்கிம் இருந்தது. இமயமலை உச்சியிலிருந்த சிக்கிமை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் இலக்கை அமெரிக்க உளவுத் துறையான சிஐஏ கொண்டிருக்கலாம். அவர்கள் அழகான பெண்கள் மூலம் காரியம் சாதிப்பார்கள் அதையே இங்கும் செய்தார்கள் என்று எண்ணுவதில் தவறில்லை.

நியூயோர்க் நகரின் மிகவும் வசதி படைத்த குடும்பத்தில் பிறந்த அப்பெண்ணின் பெயர் ஹோப்குக் வின்செஸ்ரர் (HOPE COOK WINCHESTER)அமெரிக்க அரச சேவையில் இக்குடும்பத்தவர் பணியாற்றுகின்றனர். இப்பெண்ணின் மாமனார் ஈராக் நாட்டிற்காக முன்னாள் தூதுவர். கல்வியறிவிற் சிறந்த இப்பெண் பற்றிய வேறு பின்னணித் தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை. அன்றைய இருவர் சந்திப்பு பாரிய விளைவுகளை ஏற்படுத்தியதோடு சிக்கிம் நாட்டின் அரச பரம்பரையினர் வரலாற்றையும் முடிவுக்கு கொண்டு வந்தது.



படுவேகமாக வளர்ந்த இருவர் நட்பு 1962 ல் திருமணப் பேச்சுக்கள் வரை சென்றன. வயோதிபரான சிக்கிம் மன்னர் சோக்தாவீ நாம்கியால் திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்து தோல்வி கண்டார். லாமா மதபீடம் தனது கடும் எதிர்ப்பைக் காட்டியது. ஒரு கிறிஸ்தவப் பெண்ணை மணப்பது தெய்வ நிந்தனையாக முடியுமென்று அவர்கள் மிரட்டினர். இளவரசர் பிடிவாதமாக நின்றார். திருமணத்தை நடத்துவதற்குப் பொருத்தமான நாளை கணிப்பிடும் பொறுப்பை வகிக்கும் லாமாக்கள் திருமண நாளை 1963ஆம் ஆண்டிற்கு தள்ளிப் போட்டனர். அதன்படியே சிக்கிம் தலைநகர் காங்தொக்கில் பௌத்த முறைப்படியே திருமணம் நடைபெற்றது. இதன் பின் வயோதிப மன்னர் இறந்தார்.

கியல்மோ (GYALMO) என்ற புத்த மதப்பெயருடன் அந்த வெள்ளை மாது சிக்கிம் அரண்மனையில் குடியேறினாள். அதன் பின் அவர் மிகவும் மெதுவாக தனது நிலைப்பாடுகளை வலியுறுத்த ஆரம்பித்தார். தன்னை இறைமையுள்ள அரசரின் மனைவியாக உலகத் தலைவர்கள் அங்கீகரிக்க வேண்டுமென அவர் யாவரையும் கேட்டுக் கொண்டார். 1950 ம் ஆண்டு உடன்படிக்கையின் படி சிக்கிம் மன்னர் ஒருமுழு அளவு இறைமை உள்ளவர் அல்ல. இதனால் அவருடைய கோரிக்கைக்கு ஒருவரும் செவி சாய்க்கவில்லை. இரண்டாவதாக இந்தியப் படைகள் சிக்கிம் மண்ணில் நிலைகொண்டிருப்பதை அவர் வெளிப்படையாக ஆட்சேபித்தார். அத் தோடு சிக்கிம் ஐநா அங்கத்துவம் பெறவேண்டும் என்ற நோக்கில் அவர் செயற்படத் தொடங்கினார்.

அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் அடிக்கடி சிக்கிம் வரத் தொடங்கினர். இவர்கள் உண்மையில் பத்திரிகையாளர்கள் தானா என்ற சந்தேகம் எழத்தொடங்கியது. காலப் போக்கில் இந்திய உளவுத்துறையான றோவும் அமெரிக்க உளவுத்துறையான சிஐஏயும் நிழல் யுத்தம் நடத்தும் போர்க்களமாக சிக்கிம் மாறியது. மக்களையும் லாமாக்களையும் தம்பக்கம் இழுத்த இந்தியர்கள் அரச குடும்பத்தை தனிமைப்படுத்துவதில் வெற்றி கண்டனர். அரசருக்கும் அவருடைய மனைவிக்கும் எதிரான நாடுதழுவிய கிளர்ச்சிகள் வெடித்தன. யாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் சிக்கிம் சட்ட சபை மன்ன ராட்சியை முடிவிற்குக் கொண்டு வரும் தீர்மானத்தை நிறை வேற்றியது.

அரச பதவி பறிபோனவுடன் கணவனைப் பற்றி சற்றும் சிந்திக்காமல் அவர் களுக்குப் பிறந்த பிள்ளைகளையும் கொண்டு அவர் அமெரிக்காவுக்குத் திரும்பிவிட்டார். அத்தோடு விட்டால் பரவாயில்லை. அமெரிக்கச் சட்டத்தின் கீழ் கணவனை விவாகரத்தும் செய்துவிட்டார். பெருமளவு சிக்கிம் நாட்டுப் பணத்தையும் அசைவுள்ள சொத்துக்களையும் அரச குடும்ப ஆடை ஆபரணங்களையும் அந்தப் பெண் எடுத்துச் சென்றுள்ளதாக பின்பு தெரிய வந்தது. இறுதி வரைஅவர் மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்ததாக சொல்லப்படுகின்றது.

தனியாக விரக்தியில் வாழ்ந்த முன்னாள் சிக்கிம் மன்னர் அதிகம் புகைப் பிடித்ததால் தொண்டைப் புற்றுநோய்க்கு ஆளானார். நவம்பர் 1981ல் அவர் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றார் சிகிச்சை பலனளிக்காமல் 30 ஜனவரி1982ல் அவர் அங்கேயே உயிர் நீத்தார். அவருடைய உடலை முன்னாள் மனைவி பொறுப்பேற்றார். அவரே விமான மார்க்கமாக அந்த உடலை தனது 16 வயது மகன் 14வயது மகள் சகிதமாக சிக்கிம் கொண்டு வந்து முதல் தாரப் பிள்ளைகளிடம் ஒப்படைத்தார். அதன் பின் அவர் நாடு திரும்பி விட்டார்.

மன்னர் பதவியை இழந்தாலும் சிக்கிம் அரண்மனையில் மக்கள் மரியாதைக்காக 21 நாட்கள் உடல்வைக்கப்பட்டிருந்தது. இந்தியர்களின் தூண்டுதலினால் அரச குடும்பத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் இப்போது பெரும் எண்ணிக்கையில் வந்து மரியாதை செலுத்தினர். எதிர்ப்புக் காட்டிய லாமாக்கள் இப்போது இறுதிக்கிரியைகளை நடத்தி முடித்தனர். இந்தக் கதையில் சில அவிழ்க்கப் படாத முடிச்சுக்கள் உள்ளன. ஹோப்குக் வின்செஸ்ரர் என்ற அப்பெண் உளவாளியா அல்லது தவறாக வழி நடத்தப்பட்டவரா? என்ற கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. பார்க்கப் போனால் இந்திய உளவுத் துறை செய்ததும் சரிதான் இந்திய தேசிய நலனின் பாதுகாவலர்கள் அல்லவா அவர்கள்.

அன்பரசு

# இன்னுமேன் இவர்கள் இப்படி

தேசபிரேமி கட்டி பௌத்தபீட செயலாளர் பென்கமுவ நாயக்க தேரர் 30.12.2003 திவயின நாளிதளில் எழுதிய கட்டுரை

மொழியாக்கம்-சக்திவேல்

# கள்ளனின் தாயாரிடமே சோதிடம் கேட்டல்

கள்ளனின் தாயாரிடமே சோதிடம் கேட்டல் குற்றவாளிகளிடம் அறிவுரை கேட்டுச் செயற்படுபவர்களிடம் குறைகளைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். குற்றவாளி திருந்த வழி சொல்லிக்கொடுக்க மாட்டார்கள். இது கள்ளனின் தாயாரிடம் சோதிடம் கேட்டதற்கு (தொலைந்த பொருளுக் காக) ஒப்பானதாகும்.

இன்று எமது நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலான பிரச்சினைகளுக்கு மேற்கத்திய நாடுகளிடம் அறிவுரை கேட்டு அவர்களின் சொற்படி நடப்பதால் இந்த நாட்டுப் பிரச்சினைகள் மிகவும் சிக்கலான நிலையில் இறுகிக் கிடக்கின்றது. அவர்களின் எண்ணப்படி எப்படியாவது தங்களின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு நாட்டை அடிமைப்படுத்தி அந்த நாட்டை எவ்வளவு சீரழிவான பாதையில் இட்டுச் செல்ல முடியுமோ அதை அவர்கள் கட்டாயமாகச் செய்ய தயங்கமாட்டார்கள்.

வடகிழக்கில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினை நாட்டின் முக்கியமானதொரு பங்கை வகிக்கின்றது. பிரச்சினைகளைச் சரியாக இனங்கண்டு அதன்படி நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால் மேலும் பிரச்சினைகளை உண்டு பண்ணிச் செய்வதறியாமல் திணறிக்கொண்டு இருக்கின்றது நாடு. .

இந்நாட்டின் அதிகளவு பரப்பையும், கடற் பரப்பில் 2/3பங்கைத் தம்வசம் வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் ஆசீர்வாதங்களைப் பெற்றுத் தனி அரசு அமைப்பதைத் தற்பொழுது புலிகள் மேற்கொண்டு வருகின்றனர். செல்வநாயகம், அமிர்தலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோர் தனிநாடு என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார்கள். ஆனால் பிரபாகரன் அவர்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு அதன் மார்க்கமாகத் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தார். இந்த இரண்டு பின்னணியிலும் செயற்பட்டவர்கள் மேற்கத்திய கிறிஸ்தவ நாடுகளேயாகும். இவை இந்த நாட்டின் சிறுபான்மையினரையும், இடதுசாரிகளையும் ஒன்றிணைத்து பௌத்த மதத்திற்கு எதிராகச் செயற்படுவதற்குப் பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வருகின்றன. ஆகையால் இன்று சிறுபான்மை இன மக்களின் ஆதரவு இல்லாமல் பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகள் அரசமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் தான் பிரபாகரனின் பயங்கரவாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. செல்வநாயகம் தனிநாடு கேட்டு எப்படித் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தாரோ அதேபோல் பிரபாகரன் அவர்கள் தனி 'ஈழநாடு' கோரிக்கையை முன்வைத்துத் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் இயக்கத்தை ஆரம்பித்துள்ளார். இன்று மேற்கத்திய நாடுகள் புலிகளின் இயக்கத்தைத்தடை செய்திருந்தாலும் மறைமுகமாக அந்தப் பயங்கரவாத இயக்கத்திற்கு முழு ஆதரவையும் கொடுத்த வண்ணம் உள்ளன.

ஒன்றுபட்டுள்ள ஒரு நாட்டின் அதிகாரங்களைப் பிரித்து அதிகார பரவலாக்கலை வடகிழக்கிற்குக் கொடுப்பதே இவர்களின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. இதை இவர்கள் ஒரு அரசியல் விடயமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள். பிரபாகரனின் பயங்கரவாத இயக்கம். இதற்குத் தமிழ் ஈழம் என நாமம் சூட்டி உள்ளது. இந்த இயக்கம் தாங்கள்தான் தமிழர்களின் பாதுகாவலர்கள். அவர்கள் வாழ்வதற்குத் தனியானதொரு ராஜ்யம் தேவை என்று கூறிக் கொள்வதைத் தமிழ் அரசியல் வாதிகளும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இந்தத் திட்டங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சி உரம் இட்டுக்கொண்டு இருப்பவர்கள் வெஸ்பர்க்,



சொல்எயிம் ,ரியன் பொக்ஸ், கிறிஸ்டி பெர்டன் ஆகியோரே.

எங்கள் நாட்டு அரசியல்வாதிகளுக்கு இது நன்றாகத் தெரியும். நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. நாங்கள் நாட்டை ஆட்சி செய்ய வேண்டும் என இவர்கள் எண்ணுகிறார்கள். இது பெரும் துர் அதிர்ஸ்டமாகும். ஐரோப்பிய நாடுகளின் அனுமதி இல்லாமல் எமது நாட்டுக்கு விஜயம் செய்த கிரிஸ்டி பீடர்சனை ராஜமரியாதை வழங்கி, அவருடன் பேச்சுவார்த்தைகள் செய்து, பிரபாகரன் அவர்களைச் சந்திப்பதற்கு விமானம் கொடுத்தவர்கள் எமது நாட்டு ஏமாளி அரசியல் வாதிகளா? இல்லையேல் முட்டாள்களா என்பது தெரியாமல் இருக்கின்றது.

எமது நாட்டின் சனாதிபதிகள், பல அரசியல்வாதிகள், இந்தியப் பிரதமர் மற்றும் இந்நாட்டில் வயோதிபர்கள், இளைஞர்கள், யுவதிகள், பால்குடிக்கும் குழந்தைகள் மற்றும் அரச வங்கிகள், நாட்டின் சொத்துக்கள் போன்றவற்றை அழித்து, நாட்டின் பொருளாதாரத்தைப் பாதாளத்திற்குத் தள்ளிய, இந்திய அரசாங்கத்தாலும், இலங்கை அரசாங்கத்தாலும் தண்டனை கொடுத்துக் கைது செய்யும்படி உத்தரவுகளைப் பிறப்பித்த அத்துடன் நாட்டின் பௌத்த முக்கிய ஸ்தானமான தலதாமாளிகையைக் குண்டு வைத்துத் தகர்த்தெறிந்த பிரபாகரன் என்ற அதி பயங்கரவாதியோடு மாவீரர் தினத்தில் கலந்து கொள்வதற்கு கிரிஸ்டி பெடர்சனுக்கு விமானம் கொடுத்த எமது நாட்டவர்களைத் தேசத்துரோகியாகவும், இனத் துரோகியாகவும் நான் கூற விரும்புகின்றேன்.

அதிக பெரும்பான்மையாகச் சிங்கள இனமக்கள் வாழும் இந்நாட்டை அவர்களுக்குத் தாரை வாத்துக் கொடுக்க முடியாது. இது எமது நாடு, பௌத்தமே எமது உயிர்நாடி, கிரிஸ்டி பெட்டர்சன் ஒரு பௌத்த எதிரி. பௌத்தம் அழிவதற்கு இடம் கொடுக்க வேண்டாம். சகல புத்தி ஜீவிகளும் இந்தச் செயல்களை எதிர்ப்பதற்கு முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# வடுக்களின் வலி



வடுக்களுடனேயே மனிதர்கள் வாழ்கிறார்கள். வடுக்களின் சுமை வாழ்வின சுமையாகிறது. வடுக்களின் வலி வாழ்வின் வலியாகிறது. மனிதர்களே மனிதர்களுக்கு வடுக்களைத் தருகிறார்கள். மனிதர்களே மனிதர்களுக்கு மருந்திடாமல் வாழ்வு வெல்லப்படப் போவதில்லை. அதிலும் நாங்களோ யுத்தத்தை எதிர்கொள்ளும் விதியைக் கொண்டுளளவர்கள.

G.T.Z. நிறுவனத்தினரால் கடந்த 16-12-2003 தொடக்கம் 21-12-2003வரை நடாத்தப்பட்ட நாடக அரங்கு பயிற்சிப் பட்டறை மன்/பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது. சிறார்களின் மேம்பாட்டை மேன்மைப்படுத்தும் வகையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. மருதங்கேணி, துணுக்காய்,வவுனியா வடக்கு,மடு வலயங்களிலிருந்து சுமார் 34 பயிற்சியாளர்கள் பயிற்சியில் கலந்து கொண்டோம் பயிற்றுனர்களாக திரு.செ.விந்தன், திரு.கு.மகிழ்ச் சிகரன், திருமதி சிவரதி, செல்வி பவளராணி ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர்.

இந்நாடகப் பட்டறையில் வித்தியாசம் என்னவென்றால், பயிற்சியாளர்கள், பயிற்றுனர்கள் என்ற பேதம் காணாமல் போனதுதான். ஏற்றத்தாழ்வில்லாத சகோதரத்துவத்திற்கும் மேலான ஒரு நட்பைக் கொண்டதாகப் பயிற்சியாளர்களினதும், பயிற்றுனர்களினதும் நெருக்கம் காணப்பட்டது.

முதல் நாள் சேர்ந்தும், சிறு சிறு குழுக்களாகவும், சிறு சிறு விளையாட்டுக்களுடன் ஆரம்பித்த இந்நிகழ்வு சந்தோசமான வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கும் பிரமை பயிற்சியாளர்களாகிய எங்கள் மனதில் தென்பட்டது. இரண்டாம் நாள் நிகழ்வு வழமைக்கு மாறானது. ஒரு மன நோய் வைத்தியனால் அல்லது உளவள நிபுணனால் கண்டறியப்படாத அல்லது கேட்டு உணரப்படாத பல விடயங்கள், இன்ப துன்பங்கள் கேட்டறிந்த அந்நிகழ்வு அனைவரையும் பிரமிக்க வைத்தது. காலை 8.00 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்ட மண்டபத்தில் கூடிய நாங்கள் கண்களை இலேசாக மூடியவுடன் அங்கு பறைமேளத்தில் எழுப்பிய ஒலியும், ரேப்ரைக்கோடர் மூலம் எழுந்த இசையும் கலந்து பயிற்றுனர்களின் மனதில் உதிர்ந்த வார்த்தைகளும் சேர்ந்து எங்கள் ஆழ் மனதிற்குள் புதைந்து கிடந்த பல நினைவுகளை கிளறிக் கிளறி வெளியில் கொண்டுவரச் செய்தது ஆச்சரியம்தான். எல்லோரையும் ஒரு நிலைப்படுத்தி அமரச் செய்து ஒவ்வொருவரினதும் ஆழ் மனதில் பதியப்பட்ட நிகழ்வுகளை சொல்லுமாறு கேட்கப்பட்டதற்கிணங்க நாங்கள் ஒவ்வொருவரும் எமது அவலங்களையும், துன்பங்களையும் பரிமாறிக் கொண்டோம்.

மூன்றாம் நாள் பாடசாலைச் சிறார்களுடனான ஒன்றுகூடல் சிறுவர்களுடன் சேர்ந்து குதூகலித்தோம். அவர்களைத் தோளிலும்,கையிலும் ஏந்தி நின்று ஆடினோம்,பாடினோம், விளையாடினோம், மதியம் சிறுவர்களுடன் சேர்ந்து உணவருந்தினோம், மாலை சிறுவர்களுடன் சேர்ந்து கதைத்து அவர்களின் துன்ப துயரங்களைக் கேட்டறிந்தோம். சிறார்களின் உள்ளத்திலும் சந்தோசம் ஏற்பட வாய்ப்பே இல்லைப் போலும். நாம் சந்தித்த சிறார்கள் அனைவரும் ஏதோ ஒருவித பாதிப்பை அனுபவிப்பதை உணர முடிந்தது.

சிறுமி ஒருத்தி "நாங்கள் 05 பேர், அப்பா வேலை செய்யிறேல்ல. அம்மாதான் மடுக்கோயிலில வேலை செய்துபோட்டுக் காசு கொண்டு வந்து சாமான் வாங்கிச் சமைச்சுத் தாறவா. ஒருநாள் அப்பா கசிப்புக் குடிச்சுப் போட்டு வீட்டவந்து இறைச்சி வெட்டிக் கொண்டிருந்த அம்மாட்ட 'காட்ஸ்' கூட்டம் எங்க எண்டு கேட்டுச் சண்டை பிடிச்சு அம்மான்ர கையை வெட்டிப் போட்டார். ம..."

சிறுவன் ஒருவன் பெண் ஆசிரியைகளுடன் சேரவேயில்லை. ஏனென்றால், "நான் களவெடுத்தனான் எண்டு ஒரு பொடியன் எங்கன்ர வகுப்பாசிரியரிட்டச் சொல்ல அவா அவன்ர கதையக் கேட்டு எனக்கு மூன்று பச்சமட்ட சேர்த்து அடிஅடியெண்டு அடிச்சவா. அதால எனக்கு விருப்பமில்ல" என்றான் தரம் மூன்று படிக்கும் மாணவன்.

இப்படியாக இன்னும் பலவழிகளிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களை நாம் அறிந்து கொண்டோம் 02 ஆம் நாள் எம்மை நாம் அறிந்து கொண்டது மாணவர்களைப் புரிந்து கொள்வதற்காகவே என்பதை 03 ஆம் நாள் அனுபவித்துக் கொண்டோம். நாம் எம்மீது அன்பு செலுத்துபவரை எப்படி எதிர்பார்க்கிறோமோ அதுபோலவே சிறுவர்களும் அன்பு செலுத்தும் உள்ளங்களை அடைய ஏங்கித் தவிக்கிறார்கள் என்ற உண்மையை அறிந்துகொண்டோம்.

நான்காம் நாள் கலாநிதி சிதம்பரநாதன் அவர்களும் எம்முடன் சேர்ந்து கொண்டார். அவர்களுடனும் நாம் அனுபவித்த முதன் நாள் நிகழ்வுகளைப் பரிமாறிக்கொண்டோம். இறுதிநாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், மதகுருமார்கள் முன்னிலையில் சிறுவர்களின் ஆதங்கங்களைப் புரிந்துகொள்ளும் வகையில் ஒரே தீர்மானமாக உறுதியுரை எடுத்துக் கொண்டோம். "சிறுவர்களுக்கு இடங்கொடுப்போம்", "அவர்களுக்கு அன்பு செலுத்துவோம்", "பிரம்பு என்ற வார்த்தையைச் சுட்டெரிப்போம்", "அதிகாரப் பிசாசுகளைத் துரத்திடுவோம்", "எல்லா மாணவர்களையும் சமனென மதிப்போம்", "எதிர்காலததின் உயர்ந்த உன்னதமான வாழ்வைக் கட்டியெழுப்புவோம்" என்ற பல கோசங்களுடன் கல்வியில் அரங்கை நிறைவு செய்ய ஒன்று கூடினோம். எல்லோர் முகத்திலும் ஒரு புதிய ஒளி வீசியது. நாம் பீதிகொள்ளக் கூடிய பிசாசுகள் அல்ல. பிறர் உணர்வுகளை மதிக்கும் மகாத்மாக்கள். நொந்து மனம் உடைத்து வரும் சிறார்களை அன்பு செலுத்தி அவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆவலில் ஆழ் மன நினைவுகளுடன் அவரவர் ஊர் சென்றோம்.

பா.றுஜினா

கெட்ட மனதுடன் மதபோதனை செய்வதைவிட, நல்ல மனத்துடன் பாடுவதே மேல். - திபெத் நாட்டுப் பழமொழி

# தொடர்கதை

## பகுதி — 03



தாமரைச்செல்வியின்

# பச்சைவயல் கனவு

## அத்தியாயம் - 10

சிவம் தங்கள் நெல்லறைக் கதவுகளை நன்றாகத் திறந்து விட்டார். அதற்குள் நான்கு குடும்பங்கள் குடிவந்தன. மொத்தம் இருபத்தினாலுபேர், அறைக்குள் இருந்த சாக்குகள் படங்குகள் மற்றும் எல்லாப் பொருட்களையும் ஒரு பக்கத்தில் அடுக்கி விட்டு மிகுதி இடத்தை ஒதுக்கிக் கொடுத்தார்கள். உழவியந்திரங்களோ, காரோ இல்லாததால் வெறுமையாய் இருந்த விறாந்தையில் ஒரு ஓரம் அடுப்பு மூட்டி சமைத்தார்கள்.

பெண்களும் குழந்தைகளும் உள்ளே படுக்க ஆண்கள் விறாந்தையில் படுத்தார்கள். அவர்களும் பெரும் துக்கத்தைத் தாங்கிக் கொண்டு கண்ணீர் வழிய இருந்தது தான் இவர்களுக்கு அதிகவேதனையைத் தந்தது. "நாங்கள் இடம் பெயர்ந்து வந்து இங்காலவாறதுக்கு கிளாலிக் கரையில நிண்டனாங்கள். அப்ப பொம்பரில வந்து சனத்துக்கு மேல குண்டு போட்டாங்கள். அந்தக் கடற்கரை வெளியில எங்க ஓடுறதும் ஒளியிறதும். கத்திக் குளறிக் கொண்டு நிலத்திலயே விழுந்து கிடந்தம். எங்கட கண்ணுக்கு முன்னால எங்கட பிள்ளைக்கு மேல குண்டு விழுந்து அதிலயே சிதறிப்போச்சு. கடவுளே... எடுத்து அடக்கம் செய்ய ஏலாம பத்தைக்குள்ளயே கிடங்கு கிண்டி சேர்த்து அள்ளிப் போட்டு மண்ணால மூடிப் போட்டு வாறம் ஐயா..." முற்றத்தில் நின்று அவர்கள் கதறி அழுத போது தேற்ற வார்த்தைகள் இல்லாமல் அவர்கள் கவலையோடு நின்றார்கள். "வழியில எல்லாம் பிரேதங்கள் கிடக்கு அதுகளைக் கடந்துதானே வந்தனாங்கள்."

எத்தனை துன்பம், யாரோ எவரோ... முகம் தெரியாத அந்த சனங்கள் எல்லாம் எத்தனை அவலப் பட்டிருக்குங்கள்...

கிளிநொச்சி தெருக்களில் விலத்த முடியாத அளவுக்கு சனங்கள் நிறைந்து போயிருந்தார்கள். படகுகளில் இக்கரைக்கு வருபவர்களை நல்லூரில் வைத்து பதிந்து விட்டு வாகனங்களில் ஏற்றிவந்து கிளிநொச்சி நகர பாடசாலையில் இறக்கினார்கள். அங்கிருந்து பலர் தெரிந்தவர் உறவினர் வீடுகளுக்குப் போக சிலர் இப்படி ஒவ்வொரு வீடுகளில் இடம் கேட்டு தங்கிக் கொண்டார்கள். குமரபுரத்துக்குள்ளும் இப்படி வந்து சிலர் இருந்தார்கள்.

பலர் ஒவ்வொரு காணி பார்த்து குடிசைபோடக் கேட்டு போட்டுக்கொண்டு குடியிருந்தார்கள்.

அது விதைப்புக் காலம்தான். ஆனாலும் வழக்கம்போல எந்த ஆரவாரமும் தெரியவில்லை. தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதில் பலர் வயல் விதைக்காமலே விட்டு விட்டார்கள். விதைக்காமல் விடப்பட்ட வயல்களில் புற்களும் பற்றைகளும் மூடிக்கிடந்தன.

நெல் விதைத்தவர்களும் ஒரு வித பதட்டத்தில் தான் இருந்தார்கள். ராணுவம் முன்னேறி வந்தால் வயல் நிலம் எல்லாம் விட்டு ஓடவேண்டி நேரிடும். இப்படி எத்தனை தடவை எல்லாம் விட்டு ஓடிப்போயிருக்கிறார்கள்.

ஆனையிறவிலிருந்து பரந்தன் கிளிநொச்சிப் பக்கங்களை நோக்கி எறிகணை வீச்சு தீவிரமானது. இரவில் அதிரும் அந்த சத்தங்களைக்கேட்டு இடம்பெயர்ந்து வந்திருப்பவர்கள் பதறினார்கள்.

"அங்கிருந்து இந்தத் தேசம் வந்தும் நிம்மதியில்லை. நாலைஞ்சு மாதம் தாக்குப்பிடிச்சு இங்க இருந்திட்டம். இனி இருக்க பயமா இருக்கு. இன்னும் தூரவாய் போய் இருக்கப்போறம்."

வீட்டில் இருந்தவர்கள் உருத்திரபுரத்தில் ஒரு காணியில் குடிசை போட்டுக்கொண்டு போய் விட்டார்கள்.

தொடர்ந்து இதே பதட்டம் தான். சித்திரை வருடப்பிறப்பைக் கூட இயல்பாகக் கொண்டாட முடிய வில்லை. வடதிசையிலிருந்து வரும் சத்தங்களைக் கேட்கும் போது என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று கலக்கமாக இருந்தது. தென்மராட்சி வடமராட்சியில் இடம்பெயர்ந்து தங்கியிருந்தவர்களில் அநேகம் பேர் திரும்ப யாழ்ப்பாணத்துக்கே போய்க் கொண்டிருந்தார்கள். இந்தச் சண்டையுடன் கிளாலியில் படகுகள் ஓடுவது நின்றுவிட்டது. எல்லாப் பாதையும் அடைபட்டுப்போனது. ஆனையிறவுடன் குறுக்காக பாரிய சுவர் எழுப்பப்பட்டது போன்ற நிலை வந்தது. ஒவ்வொரு நாளும் யோசனையிலேயே கடந்து போனது.

முன்பெல்லாம் இங்கு வரும் நடராசுவிடம் அன்னத்தைப் பற்றி விசாரிப்பார். இனி நடராசுதான் எப்படிவருவது...? "யாழ்ப்பாணத்தை பிடிச்சிட்டு சனத்தை வரச்சொல்லி கூப்பிட்டு இருக்கச்சொல்லிப் போட்டாங்கள். சனம் ஆமிக்குள்ள நெஞ்சிடியோடதான் இருக்குதுகளாம். தியாகராசா விதானையாற்ற தமயன் கடிதம் போட்டிருக்கிறாராம். எழுதி ஒரு மாதத்துக்குப் பிறகுதான் கடிதம் வந்திருக்குதாம். இள வயதுப் பிள்ளையளை வைச்சுக் கொண்டு பயத்தோட இருக்குதுகளாம். என்ர அக்கா குடும்பமும் திரும்பப்போய் இருக்குதுகள். என்ன பாடோ..." தருமலிங்கம் சொல்லிக் கவலைப் பட்டார்.

நாட்கள் நகர நகர ஆனையிறவைச் சுற்றியுள்ள இடங்களிலும் பதட்டம் அதிகரித்தது. எறிகணைகள் அடுத்தடுத்து வந்து எல்லா இடங்களிலும் விழுந்து வெடித்தன. குண்டு வீச்சு விமானங்கள் இரைச்சலுடன் வந்து குண்டுகளைக் கொட்டிவிட்டு போய் மறைந்தன வெளிக்கிடப் போறாங்களோ... அதுதான் இப்பிடி அடிக்கிறாங்களோ... சந்தேகம் வந்தது.

பாடசாலை வாசலில் குண்டு விழுந்து வெடித்ததுடன் பாடசாலை மூடப்பட்டுவிட்டது. ஊரிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் ஆட்கள் வெளியேறத் தொடங்கினார்கள். அவருக்கும் யோசனையாகத்தான் இருந்தது. வாணி பிள்ளைகள், சியாமளா பிள்ளைகள் எல்லோரையும் விக்கினேஸ்வரன் வீட்டுக்கு அனுப்பி விட்டார். அவரும் பராசத்தியும் முருகானந்தனுமே வீட்டில் இருந்தார்கள். பரந்தன் சந்தியில் சனம் நின்று கதைத்ததைக் கேட்டு விட்டு வந்து முருகானந்தன் சொன்னான்.

"முல்லைத்தீவு காம்ப் அடிபடுகுதாம். ஆட்லறி எல்லாம் எடுத்தாச்சாம். சனம் கதைக்குதுகள்."

இந்தச் செய்தியில் மனம் பரபரத்தது. மாலை யோகன் வந்து மேலும் விபரம் சொன்னான்.

"காம்ப்புக்குள்ள இருந்த ஆமிக்காரரை பெடியள் சுத்தி வளைச்சு நிற்கினமாம். நிறைய ஆமி செத்துப்போச்சுதாம். அந்த நேரம் விநாசியும் வந்தார். முகத்தில் மகிழ்ச்சி அப்பிக் கிடந்தது. "ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆமியள் சரி என்று கதைக்கினம் இனி ஆனையிறவுக் காரர் இந்தக் கோபத்தை எல்லாம் எங்களில காட்டப்போறாங்கள்."

"கவனமாய் இருக்கத்தான் வேணும்"

"நாங்களும் குஞ்சுப்பரந்தனில இருந்து என்ன செய்யிறது. புதுக்குடியிருப்போட போவம் எண்டு பார்க்கிறன். மனிசியின்ர தமயனவை அங்க இருக்கினம். போனா மகேசனை ஏதும் கடையில நிற்க விடலாம். இளையவனையும் ஏதும் கராச்சில சேர்த்துவிடலாம்."

"ஆள் உதவி உள்ள இடத்தில போயிருக்கிறது நல்லது விநாசி." "நீங்களும் ஊரில இருக்காமல் கொஞ்சம் தூரத்தில போய் இருங்கோ.

"ஓம். பார்த்துச் செய்வம் ஓடி ஓடி களைச்சுப்போனம்."

"பரந்தன் சந்திக்காரர் எல்லாம் சாமான்களை ஏத்திக் கொண்டு தூர இடங்களுக்குப் போகினம்" என்றான் யோகன்.

"நாங்களும் இனி இங்க இருக்க வேண்டாம் ஐயா. வாங்கோ விக்கி வீட்ட போய் இருப்பம்."

"ஓம் மோனை. நாளைக்கு வெள்ளிக்கிழமை. முருகன்ர பூசையைப் பார்த்திட்டு சனிக்கிழமை போவம்."

அன்று இரவு ஆனையிறவிலிருந்து தொடர்ச்சியாக எறிகணைகள் வந்து விழுந்து வெடித்துச் சிதறின. சத்தங்கள் அதிர வைத்தன. "அய்யோ என்னப்பா இப்பிடி ஷெல் அடிக்கிறாங்கள்." பராசத்தி பயத்தோடு சொன்னாள். இரவு முழுக்க சரிந்து படுக்க முடியவில்லை. கதவு நிலைகளெல்லாம் அதிர்ந்து ஆடின.

தொண்ணூற்றி ஆறாம் ஆண்டு யூலை மாதம் இருபத்தாறாம் நாள். விடியும் போதே எறிகணைகளின் அதிர்வோடு விடிந்தது. அதிகாலையிலேயே ஹெலிஹொப்டர்களும் குண்டு வீச்சு விமானங்களும் அந்த பிரதேசத்து வானில் சுற்றிச் சுற்றி வந்து குண்டு மழை பொழியத் தொடங்கின. "இனி இங்க இருக்க ஏலாது. ஐடென்ரிக்காட், குடும் பக்காட், எல்லாத்தையும் எடுத்துவை" அவர் காசு, காணி உறுதிகள் எல்லாவற்றையும் பைக்குள் போட்டு எடுத்துக்கொண்டார். வீட்டைச் சுற்றிலும் பார்த்தார். "ஊர்ச்சனம் எல்லாம் வெளிக்கிட்டுப் போகுதுகள். கெதியாய் வாங்கோ" முருகானந்தன் அவசரப்படுத்தினான். வீட்டைக் கூட பூட்டவில்லை மனப்பாரத்துடன் தெருவில் இறங்கினார்கள். "ஐயா நீங்கள் நடந்து வாங்கோ. நான் அம்மாவைக் கொண்டு போய் விக்கி வீட்ட விட்டிட்டு உள் பாதையால வாறன், ஓவசியர் சந்தியில வந்து நில்லுங்கோ."

முருகானந்தன் பராசத்தியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வேகமாய்ப்போனான். ஒழுங்கைகள், வீதிகள் எல்லாம் சனங்களின் நெரிசல். அய்யோ என்ற பதறலுடன் ஓடிக்கொண்டிருந்த சனங்களுடன் அவரும் வேகமாய் நடந்தார். எறிகணை குத்தும் ஒலி கேட்டதும் அத்தனை சனமும் அய்யோ என்று குளறிக்கொண்டு நிலத்தில் விழுந்தார்கள். சத்தம் அடங்கியதும் எழுந்து ஓடினார்கள். மிக அருகே விழுந்து வெடிக்கும் போது மண்புழுதி எழுந்து காற்றில் பரவியது. சிறுகற்கள் சிதறிப் பறந்தன. கந்தக மணம் தலையைச் சுற்ற வைத்தது. வெள்ளிக்கிழமையும் அதுவுமாய் வீடு வாசலை விட்டுப்போகிறோமே என்று கவலையாக இருந்தது.

"ஆமிக்காரங்கள் கிளிநொச்சிக்குத்தான் வாறாங்கள் போல கிடக்கு. அந்தப்பக்கம் போகாதேங்கோ...."

"அம்மாவைக் கண்டனீங்களே எங்களோட வந்தவா இப்ப காணேலை சனத்துக்க எங்க எண்டு தேடுறது..."

ஏரம்பு ஆட்களுக்குள் தாயைத் தேடிக்கொண்டிருந்தான். ஒருவரை ஒருவர் கூப்பிட்டுக் கொள்ளும் அவலங்களிடையே கிராமமே வெளியேறி பூநகரி வீதியில் நடந்தது றோட்டு நீளத்துக்கு கிளிநொச்சி வரை இருக்கிற சனங்களும் எழும்பி ஓடுதுகளாம்." அவருக்குத் 'திக்' கென்றது.

விக்கி வீட்டிலும் இருக்க முடியாமல் வரப்போகிறது. இரண்டு கால்களும் சோர்ந்து போக சிரமப்பட்டு நடந்தார்.

ஓவசியர் சந்திவரை போக முன்னரே முருகானந்தன் வந்து ஏற்றிக்கொண்டு போனான். மேலே பயமுறுத்தும் விமானங்களைப் பயத்தோடு பார்த்தபடி தடுமாறி விழுந்து எழும்பி ஓடும் சனங்களுக்குள் மோட்டார் சைக்கிள் ஓடுவதே சிரமமாய் இருந்தது.

விக்கினேஸ்வரன் வீட்டுக்கு போய்ச் சேர்ந்த போது எல்லோரும் உழவியந்திரப் பெட்டியில் ஏறிப்புறப்பட ஆயத்தமாய் இருந்தார்கள். "ஷெல் அடிக்கிற வேகத்தைப் பார்த்தால் இனி இங்கயும் இருக்க ஏலாது. குஞ்சுப்பரந்தனுக்குப் போவம்."

"ஓம். மோனை விதானையார் வீட்டபோவம். அங்க இருந்து பார்த்து செய்வம்"

அன்று மத்தியானம் குஞ்சுப்பரந்தனுக்குப் போனார்கள். ஏற்கெனவே அங்கு இருந்த ஆட்களுடன் எட்டு நாட்கள் அவர்களும் இருந்தார்கள். விநாசி குடும்பம் இரணைமடுக் குளக்கட்டு வழியாக வட்டக்கச்சி, தர்மபுரம் என்று பயணித்து புதுக் குடியிருப்புக்கு போய் விட்டார் கள். ஓவசியர் சந்தியிலிருந்து குஞ்சுப் பரந்தன் பெரியபரந்தன்வரை எறிகணைகள் விழத்தொடங்கின. அவர்கள் பக்கத்தில் சொல்லி ஒரு உழவியந்திரம் ஒழுங்கு செய்து புறப்பட்டார்கள். "எல்லாச்சனமும் ஸ்கந்தபுரம்,அக்கரயன் குளம் எண்டு போகுதுகள். நாங்களும் அதுவரை போவம்."

அவர்கள் உருத்திரபுரம் போய் சிவன்கோவில் கடந்து நீவில் குளக்கட்டு வழியாக கோணாவில் போய் ஸ்கந்தபுரத்தை அடைந்தார்கள். தெரு நீளத்துக்கு புழுதிபடிந்து களைத்துப்போன முகங்களுடன் சனங்கள் மூட்டை முடிச்சுக்களோடு நடந்து கொண்டிருந்தார்கள்.

வெய்யில் எறித்த மத்தியானப் பொழுதில் ஸ்கந்தபுரம் சந்திக்குப் போய்ச் சேர்ந்தார்கள். வயிற்றுக்குள் பசி உணர்வு. தலை கிறு கிறுவென்று சுற்றுவது போல் இருந்தது. பசிக்குது பசிக்குது என்று சாந்தன் தொடக்கம் சியாமளாவின் குழந்தைகள் வரை சிணுங்கத் தொடங்கிவிட்டார்கள். எங்கு நிற்பது... எப்படிச் சமைப்பது... எப்போது சாப்பிடுவது... சந்தி கடந்து தூரத்தில் மாமரச் சோலை தெரிந்தது.

"முதலில அந்த நிழலில போய் நிற்பம்."

சிறிது தூரம் போய் அந்தக் காணிக்குள் மாமர நிழலில் இறங்கி நின்றார்கள். ஏற்கெனவே அங்கு ஆட்கள் நின்று அடுப்பு மூட்டி சமைத்துக் கொண்டிருந்தார்கள் அடர்ந்து கிளை பரப்பியிருந்த ஒரு மாமரத்தின் கீழ் அவர்களும் கல்லு எடுத்து வைத்து அடுப்பு மூட்டி பானையைத் தூக்கி வைத்தார்கள். கொண்டு வந்த பச்சரிசி, மரக்கறி எல்லாம் போட்டு ஒன்றாக அவித்து இறக்கி தட்டுகளிலும் பூவரசு இலைகளைச் சேர்த்து வைத்தும் போட்டுச் சாப்பிட்டார்கள்.

இரவு விக்கி வீட்டிலிருந்து கொண்டுவந்த பாய்களை புல் படர்ந்த நிலத்திலேயே விரித்து படுத்துக் கொண்டார்கள்.. நிமிர்ந்து பார்க்க வானத்தில் பிறை நிலவு, நிறைந்து போயிருந்த நட்சத்திரங்கள்.

கடவுளே.. இப்படி ஒரு நிலை வந்ததா...

நெஞ்சுக்குள் மளுக்கென்று எதுவோ புரண்டது.

வீடுவாசல் விட்டு வெகுதூரம் வந்தாகி விட்டது.

கிளிநொச்சிப் பக்கம் இன்னமும் அதிரும் சத்தங்கள்...

ஈரம் கசிந்த கண்களை இறுக மூடிக்கொண்டார்.

(தொடரும்)




# கொதி தணியா



**வா**னுயர்ந்த கருமலைகளின் பிளவுகளினூடாக வடிந்து வரும் அருவி நீர்,நெடுமரக் காட்டைத் தழுவிவரும் காற்றின் வேகத்தில் மோதுண்டு வெண்நுரை கக்கி உயரப் பறந்து பொழிய... அந்த நீரலை வெண்மையில் பட்டுத் தெறித்துச் சூரிய ஒளி கம்பனைப் பரிகசிப்பது போல அழகெல்லாம் ஒன்றாகிச் சாலம் செய்தது.

ஆறுகள், நீர்நிலைகள்,காட்டாறுகள் தாளலயத்துடன் ஓசையெழுப்பி ஜதி ஆட...நதிகளே சங்கீதமும் நாட்டியமுமாகச் சேவித்துக் கொண்டிருந்தது.

அழவாக ஒடித்தெடுத்தால் தேயிலைச் செடிகள் பச்சைக் கம்பள விரிப்பைப் போல் பரந்திருக்க....

தென்னை,றப்பர்,கொக்கோ செழித்து நிற்க... செழுங்கரும்புத் தோட்டங்கள், தின்னக் கனிகள், தெவிட்டாப் பயன் மரங்கள் பச்சை வண்ணங்களில் பலவிதமாக யொலிக்க, மலையகம் மந்தகாச அழகுடன் அசோக வனத்திற்கொப்பாகக் காட்சிதரும்.

ஆனால், அங்கே மலையகத்து மனித வாழ்வு...? விலங்குப் பண்ணைகளை நினைவூட்டும் லயன்கள்... அந்தக் குச்சு லயன்களுக்குள் தலை நிமிரமுடியாது தவிக்கும் மனிதக்கூட்டம்...

அந்த லயன்களுக்குள் அந்தரங்கங்கள் அம்பலமாகி அதுவே வாழ்வின் படிப்பனையாகி மனித விலங்குகளாக, பண்பாடற்ற நிலையில் ஆள்வோரும் முதலாளிகளும், பாதுகாவலரும் மலையக மக்களின் இரத்தத்தைக் குடிக்கும் அட்டைகளாகி அவர்கள் மீது சவாரி விடுவது வாடிக்கையான ஒரு வரலாறு, என்ன செய்வது பொதி சுமக்கும் கழுதைகளின் நிலைக்குத் தள்ளி மனித கலாசாரத்தைச் சீரழிக்க வைத்து விட்ட முதலாளிகளின் மனப் போக்கு... மாறாதோ.?

பெண் சமத்துவம் பேசுவோர்.. குடி,சூது,சமூகச் சீர்கேடுகளில்தான் ஆணுக்குப் பெண்ணைச் சமனாக்கி வைத்துள்ளனர். உறவு முறைகூடப் புரியமுடியாத நகர வாழ்விலிருந்து அந்த மக்களால் விடுபட முடியவில்லை....

ரதன்,கண்டி பொப்பரஸ் தோட்டப் பகுதியைச் சேர்ந்தவன். வயது 22...சில நாளாக இராணுவத்தாலும்,பொலிசாலும் தேடப்பட்டு நண்பன் பீற்றருடன் மலைக்காட்டுக்குள் மறைந் திருக்கிறான். அந்த அளவிற்கு அவன் செய்த குற்றம் தான் என்ன?

ரதன் தனது 22 வருச வாழ்வில் தமது குடும்பத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளையும், தான் தேடப்படுவதற்கான சம்பவத்தையும் நினைத்து நினைத்து இனம்புரியாத வேதனையில் தவித்துத் தடுமாறினான்... இந்த இக்கட்டிலிருந்து எப்படி மீளப் போகிறேனென்று எண்ணிய போது அவனுக்குச் சிந்தனை தடைப்பட்டது. அதற்கு மேல் அவனது மூளை செயல்ப்பட மறுத்தது. தன்னால் பீற்றருக்கு ஏற்பட்ட பிரச்சினைகளையும், அவனது அம்மா அப்பா செய்த நன்றிகளையும், உதவிகளையும் நினைக்க நினைக்க அவனது கண்கள் பனித்தது. பீற்றருக்காகவும் அவனது பிஞ்சு மனம் கனத்தது...

நேரம் இரவு 10.00 மணியைத் தாண்டிவிட்டது, கடுங்குளிர் பனித் துளிகள் மழைத்துளிகள் போல் பொழிந்து கொண்டிருந்தது. நுளம் புத் தொல்லையும் அதிகரித்தது. தன்னை நன்றாகப் போர்த்தி மூடியபடி... ரதன், "என்னாலை தானே பீற்றர் உனக்கு இவ்வளவு கஸ்ரமும்..."

"அதைவிடு இப்படி எத்தனை நாளைக்குத்தான் இருக்கப்போறம் ரதன்..."

"பீற்றர் நானொரு முடிவு எடுத்திருக்கிறன்..."

'சொல்லு ரதன்...'

"பத்திரகாளி அம்மன் கோவில் பூசகரிட்டை நடந்ததைச் சொல்லிப் பரிகாரம் கேக்கப் போறன்..."

ரதன் அவசரப்படாதை அவரை நம்பலாமா?

"அவர் நல்ல மனிசன், செல்வாக்கானவர் அவரிலை எனக்கு நம்பிக்கை இருக்குப் பீற்றர்..."

அப்ப போவம் ரதன்...

"நாளைக்கு விடிய அவரிட்டை போவம் பீற்றர்..."

விடிந்ததும் விடியாததுமாக இருவரும் பூசகரின் வீட்டிற்குச் சென்றனர்.

"ஐயா... ஐயா..." ரதன் கதவைத் தட்டினான்...

"யார் தம்பி என்ன...?'

பூசகரின் குரல் வீட்டுக்குள்ளிருந்து கேட்டது..."

"ஐயா நான் ரதன் பொப்பரஸ் தோட்டத்திலிருந்து வாறன்..." பூசகர் வெளியே வந்து... "ஆர் தம்பியே, என்ன விசியம் இந்த நேரத்திலை... உள்ளை வாங்கோ... இருங்கோ" ரதன் தொண்டை வறண்டு தடு மாறினான்... "ஐயா.. ரங்கசாமி தம்பியவைக்குத் தேத்தண்ணி குடுங்கோ..." பூசகர் உதவியாளரிட்டை கூறினார்...

ரதனும் பீற்றரும் தேத்தண்ணியை வாங்கிக் குடித்தனர்.

"என்ன பிரச்சினை தம்பி..." பூசகர் ஆதரவாகக் கேட்டார். ஐயா எங்களை ஆமியும் பொலிசும் தேடுது... அதுதான்..

"ஏன்..., என்ன பிரச்சினை சொல்லும்..."

ஐயா, அதுபெரிய கதை.. சரி தம்பி பயப்பிடாமல் சொல்லும்..

"ஐயா என்ர அப்பா சுப்பையா படிப்பறிவில்லாதவர், துரைமாருக்கும் கங்காணிகளுக்கும் ஏவல் வேலை செய்பிறவர், கள்ளுக்கும், சாராயத்துக்கும் எதையும் செய்யக்கூடியவர். என்ர அப்பா வீட்டுக்கு நடந்து வந்ததை நான் காணேல்லை... தவழ்ந்து வந்ததைத்தான் கண்டிருக்கிறன். அம்மா பார்வதி தோட்டத்திலை ஓரளவு படித்தவர். தையல் மெசின் வைத்துத் தோட்டத்திலை தையல் வேலை செய்து எம்மைப் பராமரித்து வந்தார்... ஒரு வேளை கஞ்சிக்கே அல்லாடும் தோட்டத்து சனங்களுக்கை அம்மாவின்ரை கெட்டித்தனத்தாலை உணவுக்கும், உடுதுணிகளுக்கும் நாம் கஸ்ரப்படவில்லை... நாங்கள் மூன்று பிள்ளைகள். நான்,அக்கா ஜமுனா, தங்கச்சி மங்கயற்கரசி...

அப்பா குடிவெறியில் வந்து அம்மாவுக்கு ஒரே அடியும் குத்தும்தான். எல்லாத்தையும் அம்மா பொறுமையுடன் சகித்து வந்தார். அம்மாவின்ரை தாலிக்கொடியைக் கேட்டு ஒருநாள் அப்பா சண்டை பிடித்து அம்மாவின்ரை தலைமுடியைக் கவ்வாத்துக் கத்தியாலை அறுத்துவிட்டார். இந்த அவமானம் தாங்காது அம்மா நீண்ட நாள் வெளியாலை தலைகாட்டாமலே இருந்தார்... அப்பா இன்னொரு நாள் அம்மாவை மோசமான வார்த்தைகளால் பேசி, சண்டை பிடித்துத் தரதரவென்று வெளியில் இழுத்து அம்மாவிற்கு மேல் மண்ணெண்ணையை ஊற்றித் தீப் பெட்டியைத் தேடினார், நாங்கள் மூன்று பேரும் அம்மாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதோம்... அந்தநாள், அந்த நிகழ்வு பசுமரத்தில் ஏறிய ஆணி போல் இன்றும் என் மனதில் வடுவாக உள்ளது...

## மங்கை

துரைமாருக்கும், கங்காணிகளுக்கும் தோட்டத்துப் பெண்களைக் கூட்டிக்கொடுக்கிற 'மாமா' வேலையும் எங்கடை அப்பா செய்து வந்ததாக அம்மாவின்ரை வாயிலாக நான் அறிந்து கொண்டன்.

எங்கடை அம்மா அருவியிலை குளிக்கேக்கை காட்டாற்றில் தவறிவிழுந்து செத்ததாகக் கூறப்பட்டது.

"ரதன் விம்மி விம்மி அழுதான்...? அம்மாவின்ரை சாவுக்கு அப்பாதான் காரணமென்று பின்னர் அறிஞ்சு கொண்டன்...

தோட்டத்துப் பெண்கள் சிலரின் சாவுக்கும், தட்டிக் கேட்ட ஆண்களின் சாவுகளுக்கும் அப்பா தான் காரணம்....

அவருடன் வீட்டில் இருக்கப் பிடிக்காது நான் பீற்றரின் வீட்டில் தங்கி றப்பர் நிறுவனத்தில் வேலை செய்தன். எனக்கு வேலை எடுத்துத் தந்தது பீற்றரின்ரை அப்பா,பீற்றரின்ரை அப்பா,அம்மா செய்த உதவிகளை என்னாலை உயிருள்ளவரை மறக்கேலாது... அப்பா இல்லாத நேரங்களில் வீட்டிற்குச் சென்று சகோதரிகளைப் பார்த்துப் பணமும் கொடுத்து வந்தன்.

அக்காவைத் தோட்டத்துரையின்ரை 'வீட்டிற்குச் சமையல் வேலைக்குப் போகும்படி அப்பா கொடுமைப்படுத்தினார், அப்பாவின்ரை கொடுமை, நச்சரிப்புத் தாங்காது அக்கா துரை வீட்டில் சமைக்கப் போய், வயிற்றில் குழந்தையுடன் நிற்கதியாக வந்து நின்ற போது, பீற்றரின்ரை தாய்மாமன் அவளுக்கு வாழ்வு கொடுத்துத் தற்பொழுது கம்பளையில் வசிக் கின்றனர்...

தங்கச்சி மங்கயற்கரசியையும் பள்ளிக்கூடத்தை நிறுத்திவிட்டு, தோட்டத்திலை வேலைக்குப் போகும்படி அப்பா வற்புறுத்தியும், அம்மா,அக்காவிற்கு ஏற்பட்ட பிரச்சினைகளை மனதில் நிறுத்தி அவள் வேலைக்குப் போக மாட்டேனென்று திடமாக மறுத்துத் தொடர்ந்தும் படித்து வந்தாள்...

தங்கச்சி பருவமடைந்த பின்னர் நான் பட்டுவந்த மனவேதனைகள் கொஞ்சமல்ல, பிராந்துக் கூட்டுக்குள்ளிருந்த கோழிக்குஞ்சைப் பராமரிக்கும் நிலையிலிருந்தன்... தங்கச்சியைப் பார்க்க ஒவ்வொருநாளும் போய் வந்துகொண்டிருந்தன்...

கார்த்திகை மாதம் 10 ஆம் நாள், மூன்று நாள் தொடர்ந்து பெய்த மழையால் மலையகம் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது... மக்கள் நடமாட்டமும் இல்லை... நான் பெண்கள் பராமரிப்பு நிலையத்திலை தங்கச்சியைச் சேர்ப்பதற்குக் கதைத்துவிட்டுக் காத்திருந்தன், எனக்குத் தங்கச்சியின்ரை துயர்வாட்ட புதுக்கவுணும், உணவுப் பொருட்களும் வாங்கிக் கொண்டு பீற்றருடன் வீட்டிற்குப் போனன்...

காம்பராவுக்கு முன் கூடத்திலை அப்பா நிறை வெறியில் விழுந்து கிடந்தார். சத்தியெடுத்திருந்ததால் இலையான்கள், எறும்புகள் மொய்த்திருந்தது, அது தினமும் நடக்கிறதாலை நான் அவரைப் பொருட்படுத்தவில்லை....

அப்போது வீட்டுக்குள் பலமான சத்தமும் முனகலுமாகக் கேட்கவே...

விரைந்து ஓடினேன். அங்கே... அந்தக் கொடுமை..

"டேய் ராமசாமி இவளைப் பிடியடா"

பிடிச்சிட்டன் துரே...

'சரி இவளின்ரை கை இரண்டையும் மரத்தோடை கட்டடா...'

துரே கட்டுறன் துரே... சில்வா சாரு நீங்கள் குளறவிடாது வாயைப் பொத்திக்குங்க...

'ம்...ம்... ஐ.. யோ...'

மங்கையின் முனகல்... பொத்துங்க துரேய்... ஆக்கள் வந்தால் ஆபத்து...

'இவளுக்கு இந்தச் சாராயத்தைப் பருக்குங்கடா...'

ஆகட்டும் தொரே...

சில்வா இவளுக்கு இதைப் பருக்கிவிட்டால்... அப்புறம்... எனக்கு அவள் கட்டிலாகி...சே.. சொர்க்கம்...சொர்க்கம்.

பிறகு நீங்க...?

என் இரத்தம் கொதித்தது. கண்ணில் மின்னல் பறந்தது போன்ற உணர்வு... நான் என் நிலையிழந்து போனேன். குசினிக்குள்ளிருந்த வெட்டுக்கத்தியாலை மூவரையும் வெட்டிச் சரித்து விட்டன்... நானும்,பீற்றரும் தங்கச்சியின்ரை கட்டை அவிழ்த்துக் கொண்டு வெளியாலை வந்த போதும் அப்பா எழும்பவில்லை. தங்கச்சி அப்பாவைத் தட்டி எழுப்பினாள்... அவர் தலை சரிந்து வாயால் இரத்தம் வடிந்தது, அவர் ஏற்கெனவே இறந்துவிட்டார்.... செய்வதறியாது நாம் மூவரும் வெளியாலை ஓடி வந்துவிட்டோம். முதல் வேலையா தங்கச்சியைக் கொண்டு போய் வவுனியாவிலை தெரிந்தவர்கள் வீட்டிலை விட்டு விட்டு வந்த போது... எங்களை ஆமியும் பொலிசும் தேடுது...

மூன்று நாளா மலைக் காட்டுக்கை மறைஞ்சு இருந்தம். அடுத்து என்ன செய்வதென்றே தெரியவில்லை... அதுதான் உங்களிட்டை வந்தம்... என்னாலைதான் இவன்ரை வீட்டுக்கும் பிரச்சினை. இன்றைக்கு நாங்கள் குற்றவாளிகள், எமது நியாயங்கள் எடுபடாது..."

பூசகர் ஆழ்ந்த யோசனையிலிருந்தார்... ரதன் பொறுமையிழந்தவனாக... "என்ன ஐயா மௌனமாய் இருக்கிறியள்..."

பூசகர் வாய்திறந்தார். குரலில்..."தம்பி என்றைக்கும் என்ரை ஆதரவு உங்களுக்குண்டு... கொஞ்ச நாளைக்கு இஞ்சை இருங்கோ, ஆகவேண்டியதைப் பிறகு பார்ப்பம்..."

ரதன் தங்கச்சிக்குக் கடிதம் அனுப்பினான்.... சில நாட்களின் பின் வீட்டுக்காரர்களிடமிருந்து பதில் வந்தது. அத்துடன் இயக்கத்திற்கு அவள் போவதாக எழுதி வைத்துவிட்டுப் போன கடிதத்தையும் அனுப்பியிருந்தார்கள்.

□ □ □ □

(ஆத்தர் கேஸ்லர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் தழுவல்)

# புறமும் அகமும்

துர்கனேவ் (Turgenev) என்னும் பெயர்பெற்ற ரஷ்ய நாவல் ஆசிரியர் எழுதும் பொழுது கால்களை ஒரு வாளி சுடு நீரில் அமிழ்த்திக் கொண்டு தனது அறையின் திறந்த யன்னலுக்கு முன்னே இருப்பது வழக்கமாம். சுடுநீர் நிறைந்த வாளி கற்பனை அல்லது அடிமனம் என்றால் திறந்த சாளரம் வெளியுலகைக் குறிக்கும்.

கலைஞனின் அகவுலகிற்கும் வெளியுலகிற்கும் இடையே இருக்க வேண்டிய இணைப்பினை இவ் உவமானம் நன்கு உணர்த்துகின்றது.

திரைச்சீலையை இழுத்து ஜன்னலை மூடுவதைத்தான் பெரும்பாலான எழுத்தாளர்கள் செய்கின்றார்கள். இச் செயல் மிக இயல்பாகவும் தோன்றலாம். இவ்வாறு செய்வதன் மூலம் வெளியுலகின் குழப்பங்க்ளிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு அகவுலகு என்னும் ஆழ் கடலில் சுழியோடி நித்திலங்களைக் கரை சேர்ப்பதற்காகச் சில எழுத்தாளர் நினைக்கின்றனர். இச்சுயகாமத்தின் விளைவாக விநோதமான படைப்புக்கள் தோன்றுவது உண்மைதான்.

சில சமயங்களில் எழுத்தாளர் கற்பனை என்னும் சுடுநீர் நிறைந்த வாளியிலிருந்து தமது கால்களை எடுத்து விட்டு ஜன்னல்களை அகலத் திறந்து வெளியே எட்டிப் பார்க்கின்றனர். முதலில் குறிப்பிட்ட எழுத்தாளர் எவ்வாறு அகவுலகின் அழகில் மயங்கிப் புறவுலகை மறந்தார்களோ அதே போன்று இவ்வகை எழுத்தாளர் அகவுலகைப் புறக்கணித்து வெளியுலகில் இரண்டறக் கலந்து கொள்கின்றனர். முதற்சாராரிடம் கற்பனை வளமும் எழுத்தாற்றலும் இருக்கின்றன. ஆனால், யதார்த்தத்தைப் பற்றித் திட்டவட்டமான நோக்கில்லை. இரண்டாவது வகையினரிடம் புறவுலகுப் பார்வை இருந்த பொழுதிலும் அது கற்பனையினால் புடமிடப்படுவதில்லை.

சுடுநீர் நிறைந்த வாளிக்குள் கால்களை வைத்துக்கொண்டு அதேசமயம் ஜன்னலைத் திறந்து வைத்திருப்பது கடினமானது போலும். ஆதலாற்றான் இரண்டிற்கும் இடைப்பட்ட வழியொன்றைச் சில எழுத்தாளர் கடைப்பிடிக்கின்றனர். இவர்கள் கற்பனை என்னும் பாத்திரத்தில் கால்களை வைத்துக் கொண்டு ஜன்னலை முற்றிலும் மூடுவது மில்லை; அகலத் திறப்பதுமில்லை. சாளரம் சற்றே திறந்திருக்கும். திரைச் சீலை முற்றாக இழுக்கப்படாததினால் வெளியுலகத்தில் ஒரு குறுகிய பகுதியின் தரிசனமே இவர்களுக்குக் கிட்டும். இதனால் வெளியுலகில் இருக்கக் கூடிய துயரம் நிறைந்த அல்லது அபாயகரமான நிகழ்ச்சிகள் எழுத்தாளரின் கண்களில் படுவதில்லை. இவ்வித நோக்கின் விளைவாகச் சிறந்த நூல்கள் தோன்றினும் அவை ஒருதலைப்பட்சமானவை. அவை வாழ்க்கையின் சிக்கல்களை முற்றிலும் பிரதிபலிப்பதில்லை. இவ்வித எழுத்தாளரின் படைப்புக்களில் காதல் இருக்கும், பாலுணர்ச்சி இருக்காது; அல்லது பாலுணர்ச்சி விரவியிருக்கும். காதல் மருந்துக்கும் கிடையாது; வர்க்க வேற்றுமைகள் இருக்கும், ஆனால் வர்க்க உணர்வுகள் புலப்படா. சிறந்த எழுத்தாளருக்குக் கற்பனை வள மும் எழுத்தாற்றலும் போதா. அவர்களுக்கு இவற்றுடன் வெளியுலகைப் பற்றிய ஆழ்ந்த நோக்கும் இருத்தல் வேண்டும்.

ஜன்னல் முற்றாகத் திறந்துமிருக்க வேண்டும். அதேசமயம் கால்கள் கற்பனை என்னும் சுடுநீர் நிறைந்த வாளியில் அமிழ்ந்திருத்தலும் வேண்டும்.

-ஏ.ஜே.கனகரட்னா

## குட்டிக்கதை

# கபட (அதி) தாரி(காரி)

தரைப்படையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தியத்தலாவை இராணுவப் பயிற்சி முகாமில் வைத்து அடிப படை இராணுவப் பயிற்சிகள் வழங்கப்பட்டு இறுதியாக,


வட்டம் வட்டமாகப் புள்ளிகளிடப்பட்ட மனித உருவத்தை யொத்த பலகை 75 மீற்றர் தொலைவில் நிலைப்படுத்தப்பட்டுச் சூட்டுப் பயிற்சியும் வழங்கப்பட்டது.

10 வது,09வது வட்டங்களிற்குள் சுட்டவர்கள். தங்களது குறி பார்த்துச் சுடும் திறமையைப் பெருமித மகிழ்ச்சியாகவும் 08 வது வட்டத்திற்குள் சுட்டவர்கள் ஓரளவு சந்தோசமாகவும், 07வது வட்டத்திற்குள்ளும் அதற்கு வெளியிலும் சுட்டவர்கள் மிகுந்த கவலையுடனும் என ஒவ்வொருவரும் கூடிக்கூடி உரையாடிக்கொண்டிந்தனர்.

அப்போது அங்கு வந்த பயிற்சிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி வீரர்களே!

உங்களிற்கான பயிற்சிகள் யாவும் நிறைவடைந்துள்ளன. இனி நீங்கள் உங்கள் உங்கள் கடமைகளைப் பொறுப்பேற்று மிகச் சிறப்பாகவும் வீரத்துடனும் பணியாற்ற வேண்டும் என உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

என்ன சேர் நீங்கள்! சூட்டுப் பயற்சிக்கு அஞ்சு ரவைகள் தந்தனீங்கள் அதிலை இரண்டு 07 ஆம் புள்ளியிலை பட்டது. மிச்சம் மூண்டும் வெளியாலை போட்டுது. இந்த நிலையிலை நான் எப்படி..? இன்னும் அஞ்சு தந்தீங்களெண்டால் சேர்... எப்பிடியும் நான் 10 ஆம் புள்ளியிலை அடிப்பன்.



அதிகாரி நமட்டுத்தனமாய் சிரித்து விட்டுச் சொன்னார்.

உனக்கு ''றைபிளை'' கழட்டிப் பூட்டுவதுக்கும் சுடுவதற்கும் மட்டும் தெரிந்தால் போதும். மிகச் சரியாகக் குறிபார்த்துச் சுடவேண்டிய தேவை உனக்கில்லை. ஏனெனில் நீ வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குத் தான் கடமை செய்யப் போகப் போகின்றாய்.

தற்போது நடைமுறையில் இருக்கின்ற புரிந்துணர்வு உடன்படிக்கையை முடிக்கின்ற வகையில் ஏதாவது சாட்டை வைச்சு மக்கள் மீது சீண்டித் தாக்கினால் அவர்கள் கோபமுற்று உங்களுக்கெதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவார்கள். அப்போது நீ மிக இலகுவாகக் கண்டபடி சுட்டுக்கொள்ளலாம்.

இப்போது புரிகிறதா குறி பாத்துச்சுட வேண்டிய தேவை உனக்கில்லையென்பது.

தலையை ஆட்டியபடி கைகளைப் பிசைந்தான் சிப்பாய்.

அருகில் கிடந்த தலைகீ கவசம் சொல்லிற்று.

போரின் பெயரால் பணத்தைச் சுருட்டியவர் போர் ஓய்ந்திருப்பதை ஒரு போதும் விரும்பார்.

-ஆவரங்கால் சுதன்

## காத்திருப்பு



என் காத்திருப்புக்களாலேயே
கனத்துப் போயிருந்த இராப்பொழுது
தன் விழிமடல்களை
மெல்ல விலத்திற்று.

வரைவிலக்கணப் படுத்தப்படாத
என் வாழ்க்கை
ஏதோ ஒரு வரவுக்காய்
ஏங்கிக்கொண்டிருந்தது
எப்போதும் போல.

நிஜங்களை விழுங்கிக்கொண்டிருந்த
நினைவுகள் நெருஞ்சி முட்களாய்
என் நெஞ்சுக் குழியிலே.
அவற்றின் நடுவே,
ஏன் விடிந்தது என்ற
எரிச்சலும் கூடத்தான்.
இன்னும் எனக்குள் ஏதோ
இனம்புரியாத வேதனைகள்.

காகங்களின் கரையொலிகளோ
இன்றும் கங்கணம் கட்டியபடி தான்.
வீண்போகாது எந்த விடியலும் என்பதாய்.
என் அங்கலாய்ப்பினை
அவைகளும் பகிர்ந்துகொள்வதில்
எனக்கு அதீத திருப்தி.

கதிரவன் மட்டும்
எந்த இரக்கமும் இல்லாதவன்,
என் எதிர்பார்ப்புக்களை
ஏளனம் செய்பவன்.....
நான் ஆனாலும் வருந்தவில்லை.
காத்துக்கொண்டிருக்கின்றேன்.
இன்னும் இருப்பேன்.

இந்த அங்கலாய்ப்பு எந்த வடிவத்தில்
எனக்குள் ஊடுருவியது என்பது
ஏதோ புரியாத புதிர்தான்.
பரவாயில்லை.
உன் வரவுகள் ஒரு போதும்
என் வாசலுக்கு
வாய்க்காதவை என்றாலுங்கூட
உன் வார்த்தைகளுக்காகவேனும்
நான் காத்துக்கொண்டேயிருப்பேன்.
என் காத்திருப்புக்கள் எப்போதும்
காத்திரமானவை.

த.க.லிங்கராஜா

## மறுபக்கம்

அதோ! அந்த தெருவோர மனிதன்
இதுபோன்ற பாடுபொருள் பாடப்பட்ட பின்பும்
மீண்டும் ஒருமுறை.

மூன்றாண்டுகள் பார்த்துக் கொண்டே
பயணிக்கின்றேன் அவ்வீதியால்
ஆடையில் நூல்களை விட
அதிகமான கிழிசல்கள்
பணம் என்றால் ஐம்பது சதம் மட்டும்தான்
என்றறிந்த பாத்திரம் அன்று
புதுமுறை ஓவியர்கள் அம்மனிதனைப்
பார்த்துத்தான் வரைந்திருப்பார்களா
விகார மனித சாயல்களை?
அப்படியோர் உருவம்.
மூன்றாண்டுகள்
அதே இடம்!
அதே பாத்திரம்!
சும்மாவல்ல
தேர் திருவிழா தொடங்கி
தினப் பூஜை வரை சிறப்பாக
நடைபெறும் ஊரது:



இத்தவில் – சீலன்


# ஈழநாதத்தின் குறுநாவல் போட்டி

## சிறந்த படைப்புக்கு 25,000 /= ரொக்கம் பரிசு

இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஈழநாதம் குறுநாவல் போட்டி ஒன்றை அறிவிக்கிறது. இலக்கியப் படைப்பாளிகள் இதில் ஆர்வமுடன் பங்கேற்க அது வேண்டுகிறது.

கதை எவ்விடயப்பரப்பிலும் அமையலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிக்கு அனுப்பப்படும் படைப்பு முன்பு தவறி வந்ததோ, வேறு போட்டிக்காக அனுப்பப்பட்டதோ, முன்பு பிரசுரிக்கப்பட்டதாகவோ, பிரசுரத்திற்குக் கொடுக்கப்பட்டதாகவோ இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். தனது சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த படைப்புக்கு (25,000/=) இருபத்தி ஐயாயிரம் ரூபா ரொக்கம் பரிசாகக் கொடுக்கப்படும்.

பிரசுரிக்கத் தகுதியானவை எழுத்தாளரின் அனுமதியுடன் வெள்ளிநாதத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதி மே,15 ஆம் திகதி.
தொடர்புகளுக்கு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

ஆசிரியர்
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
கிளிநொச்சி.


நம்மை நாமே ஆளக் கற்றுத் தருவதே, அரசாங்கங்களில் சிறந்தது - யொஹன் கேத்தே

# குழந்தைநாதம்

## கெட்டிக்காரச் சிறுவர்கள்



ஒரு நாள் தீபனும், குமாரும் கடற்கரை மணலில் நடந்து கொண்டிருந்தார்கள்.

மாலை மஞ்சல் வெயில். வானம் சிவப்பு வர்ணக்கோடுகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. இருவரும் அதைப் பார்த்து ரசித்தார்கள். பின்னர் மணலில் அமர்ந்து கொண்டு கடல் அலை பொங்கி வருவதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

### ஆழம் அறியாமல் காலை விடாதே

இயல்பாகவே குறும்பு செய்யும் குமார் தான் கொண்டுவந்த கடலைச் சரையைப் பிய்த்து கடலையைஎடுத்து தீபனுக்குக் கொடுத்து தானும் வாயில் போட்டுச் சப்பினான். பின்னர் கடலைச் சரை கட்டியிருந்த பொலித்தீன் பையில் காற்றை நிறைத்து அதன் வாய்ப்பகுதியை நன்றாக முடிச்சுப்போட்டுக் கட்டி காற்றில் பறக்க விட்டான். அது காற்றில் மிக வேகமாக அடித்துச் செல்லப்பட்டது. அது கடலை நோக்கி தத்தித் தத்திச் சென்று கொண்டிருந்தது.

அதையே பார்த்துக் கொண்டிருந்த குமாருக்குப் பொறுக்க முடியவில்லை. பையைப் பிடிக்கத் துள்ளிக்குதித்து ஓடினான்.

காற்றில் அடித்துச் செல்லப்பட்ட பை கடல் அலையில் மிதந்து கொண்டிருந்தது. குமார் பையைப் பிடித்து கடலில் குதித்து அலையுள் மறைந்து விட்டான் தீபனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பதறிப் போய் குமார்... குமார்... என்று அவலமாகக் கத்தினான்.

எகிறி எழுந்து கரையில் மோதிய அலை ஒன்றால் வீசி எறியப்பட்ட குமார் கரையில் மணல் திட்டியில் வீசப்பட்டுக் கிடந்தான்.

பயத்தால் அவன் இருதயம் வேகமாக இடித்தாலும் அவனுக்கு எதுவும் ஆகிவிடவில்லை.

தீபனுக்கு அது நின்மதியாக இருந்தது.

குமாரின் வயிற்றில் அமத்தி அவன் விழுங்கிய தண்ணீரை வெளியே எடுத்தான். வாயில் இருந்து நீர் வெளியே வடிந்தது.

குமார் பேந்தப் பேந்த விழித்தான். உயிர் மீண்டும் திரும்பி வந்து போனது போல் இருந்தது. அவன் பழைய நிலைக்குத் திரும்ப சிறிது நேரம் எடுத்தது.

குமார் தீபனின் கைகளைப் பிடித்துக் கொண்டு எழுந்து நிமிர்ந்து இருந்தான். அவன் உடல் எங்கும் மணல் ஒட்டியிருந்தது.

தீபன் ஒட்டிய மணலைத் தட்டிவிட்டான் குமாருக்கு கொஞ்சம் களை தீர்ந்திருந்தது.

குமார் போவமா... என்றான் தீபன்.

ஓம் போவம்... என்றான் குமார்.

அவனுக்கு இன்னும் பதட்டம் தீரவில்லை.

"இதுதான் ஆழம் அறியாமல் காலை விடாதே"

என்று சொன்னார்கள் இனியாவது உன் குறும்பு வேலையைக் கைவிடு என்றான் தீபன்.

சரி எனத் தலையாட்டிக்கொண்டு குமார் எழுந்து தீபனின் பின்னே நடந்துகொண்டிருந்தான்.

**முருகு பாரிமகன்**

## வாரம் ஒரு குறள்

உயர் குடியிலே பிறந்தவர்கள் தமது குலத்தினை மேலோங்கச் செய்வோம் என்றாலும் அதில் ஒரு சிறிய குற்றமேனும் வரின் அவர்கள் அந்த ஒழுக்கத்திலிருந்து விலகிவிடுவார். இதனை ஒருவருடைய தலையின்



மயிருக்கு வள்ளுவர் ஒப்பிடுகின்றார். அதாவது ஒருவருடைய தலையிலுள்ள போதே அந்தத் தலைமயிர் ஆனது சிறப்புப் பெறுகின்றது இது தலையினின்றும் உதிர்ந்து விட்டால் தன் மதிப்பினை இழந்துவிடும் இதனையே உயர்குடிக்கு தலையிலுள்ள மயிரினை ஒப்பிட்டுக் கூறுகிறார். இதிலிருந்து உயர்குடியினர் குற்றம் செய்வதனால் ஏற்படும் இழிவை

*"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்*
*நிலையின் இழிந்தக் கடை"*

என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 18

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | லா | ஏ | தொ | ப | க | அ |
| சி | கீ | ச | அ | பா | லா | தி |
| வா | டி | ஸ | தீ | ண் | ர | ம் |
| து | தா | ர் | ட | ழை | யி | த |
| மி | து | ஊ | வா | யோ | ழ | ளி |
| கே | வ | மோ | சு | தா | சி | இ |
| லை | ப | ரி | ரீ | ர | ற் | ச |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 16 இன் விடைகள்

01. சிவப்பு
02. ஊதா

01. மான்
02. பனறி.
03. மரை

### சொற்சிலம்பம் - 16 இன் பரிசுக்குரியவர்

சே. பேராளன், தரம் -04,
சுந்தர மூர்த்தி நாயநார் -
வித்தியாலயம், களபூமி,
காரைநகர்.

### சொற்சிலம்பம் - 16 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. த.றஜீவன், மு/நட்டாங்கண்டல், அ.த.க.பாடசாலை.
02. த.ஷாத்விகா, தரம் - 05, தருமபுரம் ம.வி.
03. ப. ஹீர்த்தனா, தரம்-05, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.
04. பு. லோஜிப்பிரியா, தரம் - 07, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.
05. கி. கிரிசாந், தரம் -05, கிளி/கிளிநொச்சி ம.வி.
06. கை. அகிலன், மு/யோகபுரம் ம.வி, மல்லாவி.

01. பழங்கள் மூன்று?
01) ..............................
02) ..............................
03) ..............................

02. பாலில் இருந்து இவற்றைப் பெறலாம்?
01) ..............................
02) ..............................

பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................

*சொற்சிலம்பம் -18.*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

## நகைச்சுவை



"என்னங்க நம்ம பையன் தலைகீழா நிண்டு ஏதோ வாய்ப்பாடு பாடமாக் கிறான்"

"அதுவா! பள்ளியில ரீச்சர் சொன்னாவாம் வாய்ப்பாடு தலைகீழா பாடமாய் இருக்கனும் என்று. அதுதான் தலை கீழா நிண்டு வாய்ப்பாடு பாடமாக்கிறான்."

சு.கெளரீஷன்

## விடுகதைகளும் விடைகளும்

01. காற்று நுழைந்தவுடன் கானம் பாடுவான் அவன் யார்?
02. சிறகில்லாப் பறவை தேச மெங்கும் திரியும் அது என்ன?
03. வீட்டுக்குள் வீடுகட்டி வீட்டையே கொள்ளை அடிப்பான் அவன்யார்?
04. அக்காள் விதைத்த முத்து அள்ள முடியாத முத்து அது என்ன?
05. வலை விரித்திடுவான் வேடன் அல்ல உயிர் குடித்திடுவான் எமனு மல்ல அவன் யார்?
06. வண்ணத்தில் வருவான் எண் ணத்தில் நிறைந்தவன் அவன் யார்?
07. மக்கள் இல்லாத நாடு அலையில் லாத கடல் அது என்ன?

### விடைகள்

01. மூங்கில். 02. கடிதம். 03. எலி. 04. கோலம். 05. சிலந்தி. 06. வானவில். 07. வரைபடம்.

தி.சுதர்ஜினி,
கிளி/தருமபுரம் ம.வி,

## பழமொழிகள்

01. தாயிற்சிறந்த கோயிலுமில்லை தந்தைசொல் மிக்க மந்திர மில்லை.
02. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
03. ஆனைக்கும் அடிசறுக்கும்.
04. அவனின்றி அணுவும் அசையாது.
05. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
06. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
07. பாத்திரம் அறிந்து பிச்சை கொடு.
08. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
09. இளங்கன்று பயமறியாது.
10. மனமுண்டானால் இடமுண்டு.

**இந்திரகுமார் கவாஸ்கர்,**
**தரம் -05,**
**புலுமச்சியா குளம், மாங்குளம்.**



# சினிமா விருந்து

முன்பு சினிமாவின் தலைவிதியைத் தீர்மானிப்பவர்கள் பெண்களாக இருந்தனர். ஏனெனில் வீட்டில் சினிமாவிற்குப் போவதென்றால் பெண்கள்தான் முன் நிற்பார்கள். அவர்கள்தான் எந்தச் சினிமாவைப் பார்ப்பது என்பதையும் தீர்மானிப்பார்கள். இப்போது அத்தகைய நிலை இல்லை. வீட்டுப்பெண்கள் அனேகமாகத் தொலைக்காட்சி நாடகங்களோடு சங்கமித்து விட்டார்கள்.போதியளவு நாடகங்களை தொலைக்காட்சி சனல்கள் போட்டி போட்டு ஒலிபரப்புகின்றன. இப்போது சினிமா பார்ப்பது இளைஞர்கள்தான். எனவே இளைஞர்களை நோக்கியே. அவர்களுக்காகவே சினிமா எடுக்க வேண்டியிருக்கிறது. அதனால் தான் இப்பொழுது வரும் சினிமாக்கள் அதைக் குறியாக வைத்துள்ளன. அல்லாவிட்டால் வெல்ல முடியாது என்கிறார் பிரபல சினிமா இயக்குனர் பாலுமகேந்திரா.

தமிழ்ச் சினிமா என்பது மக்களுக்கு வேண்டியதைக் கொடுக்கும் ஓர் ஊடகம் அல்ல. நுகர்வோருக்கு விரும்பியதைக் கொடுக்கும் ஒரு வியாபாரம். இங்கு இலாபம், நட்டம் என்பதுதான் வெற்றி, தோல்வி என்பது. அதற்கப்பால் கலைக்கோ, கதைக்கோ எந்த மகத்துவமும் கிடையாது.

இதுபற்றி நகைச்சுவை நடிகர் விவேக் சொல்லுகிறார் "சினிமா இண்டஸ்ரியில் சீனியரிட்டிக்கோ சின்சியாரிட்டிக்கோ கௌரவம் இல்லை. வெற்றிபெற்றால் உண்டு. இல்லையேல் இல்லை"

சினிமா விரும்பியதைக் கொடுப்பது என்று ஆகிய பின் அது வியாபாரம் ஆகிவிடுகிறது. வியாபாரம் என்று வந்துவிட்டால் வித்தக உத்திகள்தான் முக்கியமானது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதும் அதுவே.

தொலைக்காட்சி நாடகங்களின் வளர்ச்சியால் சினிமா நுகர்வோர் பெரும்பாலும் இளைஞர்களாக மாறியதுதான் சமூகத்திற்கு ஏற்பட்ட துரதிஸ்டம்.







இளைஞர்களின் ஆசை,விருப்பம் என்பவை அப்பருவத்தின் விபரீதங்கள். பருவம் தரும் விபரீதங்களை எப்படி இளைஞர்கள் கடக்கிறார்கள் என்பதில்தான் அவர்களின் எதிர்காலம் மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலமே தங்கியிருக்கிறது.

இதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் கல்வித் திட்டமிடல் என்பன ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்திற்கு அவசியம். ஆனால், எம்மிடம் வந்து சேர்வதோ அந்த விபரீதங்களுக்குத் தீனிபோடும் உற்பத்திப் பண்டகசாலையான சினிமாத்துறையின் உற்பத்திகள் தான்.

ஒரு முன்னணி நடிகையிடம் "நீங்கள் அதிக கிளாமராக நடிக்கிறீர்கள் என்று சொல்லப்படுகிறதே" என்று பத்திரிகையாளர் கேட்டதற்கு, அவர் "கவர்ச்சியாக இருப்பவர்கள் தான் அதைச் செய்ய முடியும். இல்லாதவர்களால் வயிறெரிச்சல் படத்தான் முடியும். அவர்கள் தான் விமர்சிக்கிறார்கள். ரசிகர்கள் எதிர்பார்ப்பதை அவர்களால் கொடுக்க முடியாத போது புசத்துகிறார்கள்" என்று பதிலளிக்கிறார்.

இன்றுள்ள பல இளைய இயக்குனர்கள் நல்ல கலை உத்திகளைச் சினிமாவில் பயன்படுத்துகிறார்கள். அவற்றில் பல மேற்கத்தேய சினிமாக்களின் பிரதியோ, அல்லது தழுவலோவாகினும் ஒப்பீட்டளவில் முன்னேற்றகரமானதே. ஆயினும் அவர்கள், கோடிக் கணக்கான முதலைப் போடும் தயாரிப்பாளர்கள் எங்கே தங்களை உதறிவிடுவார்களோ என்ற அச்சத்தில் வியாபார உத்தியாக மலிந்த காட்சிகளை, தகாதவைகளை,பாடல்களைச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் கலக்காமல் விடத் தயங்குகிறார்கள். இது ஓர் நிர்ப்பந்தம். இந்த நிர்ப்பந்தம் வியாபாரத்தின் நியதி.

உளவியல் நிபுணர் டொக்டர் ருத்திரன் கூறுகிறார். ஆசைகளையும், எதிர்பார்ப்புக்களையும் ஒருவர் சினிமாவின் கதாபாத்திரங்கள் ஊடாக தன்னைப் பொருத்திப்பார்த்து, தான் அதுவாக மாறி, அதன் மூலம் தான் அப்பாத்திரத்தின் அனுபவத்தைப் பெறுவதாகத் திருப்திப்படுகிறார். மனநோயில் இது ஓர் வகை" என்கிறார். அதைத்தான் சினிமா இப்பொழுது செய்கிறது என்று சொல்லலாம்.

தமிழ்ச் சினிமா ரசிகர்கள் பழகிப் போன ஒருவித போதையில் மீண்டும் மீண்டும் மூழ்குவதில் அடையும் ஓர் திருப்தியையே விரும்புகின்றனர். அங்கு தேவைப்படுவது மகத்துவங்களல்ல. எதிர்பார்க்கப்படும் அந்தப் போதையின் ரசனையின் படைப்பே.

இந்த வர்த்தகத்தில் இனி எந்தத் தர்மங்களையும் எதிர்பார்க்க முடியாது. நுகர்விற்கு ஏற்ப பண்டம் பண்டத்திற்கேற்ப நுகர்ச்சி.

**கோசி**

# எயிட்சும் சுகாதார சேவையாளரும்



எயிட்ஸ் அறிமுகமாகி 22 ஆண்டுகள் சென்ற பின்னரும் அச் சொல்லின் மீதுள்ள பயப் பிரமை இன்னும் தொடர்கின்றது. ஏனெனில் எயிட்ஸ் மரணத்தைக் கொண்டு வருவதோடு அந்நோயாளியின் தவறான நடத்தையும் வெளிப்படுத்துவதாகவே அனைவரும் கருதுகின்றனர்.இந்நோய் பாலுறவு,HIV கிருமி செறிந்த இரத்தம் ஏற்றுதல், தொற்று நீக்காத ஊசிகள் பாவித்தல் மூலமும், எயிட்ஸ் உள்ள தாயின் சிசுக்களுக்குமே தொற்றிவிடும். ஆனால் எயிட்ஸ் நோயாளியைத் தொட்டாலே கிருமிகள் தொற்றிவிடும்.என்ற பீதி தேவையற்றது. அதாவது இந்நோய் வேறு முறைகளில் இலகுவாகத் தொற்றிவிடக் கூடியதல்ல என்பது மருத்துவ ஆய்வாளர்களின் கருத்து.

எயிட்ஸ் என்பது ஒரு தனிப்பட்ட வியாதியன்று, பல நோய்க் குறிகள் சேர்ந்து வெளிப்படுகின்ற ஒரு நிலையை எயிட்ஸ் என்று அழைக்கிறோம். இந்நோய் RETRO வைரஸ் வகையைச் சேர்ந்த HIV என்ற வைரஸானது வெண்குழியங்களில் உதவும் T கலம் என்னும் வகையைத் தாக்கின்றது. பின் அவற்றினுள் பல்கிப் பெருக்கமடைந்து அக்கலங்களையே அழித்துவிடுகின்றது. உடலின் நோயெதிர்ப்புச் சக்திக்கு இவ்வகை T கலங்கள் அத்தியாவசியமானவை. இவற்றின் இழப்பால் சாதாரண வியாதிகளும் தகுந்த சந்தர்ப்பத்தில் தொற்றிக்கொள்ளும் வியாதிகளும், புதிய (புற்றுநோய்) வளர்ச்சிகளும் ஏற்படும்.

எயிட்ஸ் கிருமிகள் (HIV) எல்லா உடற் திரவங்களிலும் காணப்படினும் இரத்தம்/பாயம் போன்ற வற்றிலேயே நோயைத் தொற்ற வைக்கக் கூடிய அளவு செறிந்து காணப்படும். எனவே ஓரினச் சேர்க்கை பாலுறவு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும், ஊசி மூலம் போதை வஸ்து உட்செலுத்துபவர்களும் இலகுவாகத் தொற்றுக்கு இலக்காகிறார்கள். மேலும் நோயரும்பு காலம் சில மாதங்கள் தொடக்கம் பல ஆண்டுகளுக்கு நீடித்துச் செல்லலாம். மேலும் சிலரோ எதுவித பாதிப்புமின்றி நோய்க்காவிகளாகி மட்டுமே இருப்பர். வேறு சிலருக்கோ எயிட்ஸ் இணைந்த சில வியாதிச் சிக்கல்கள் (Aids related complex) மட்டுமே ஏற்படும். இம் மூன்று வகையினருமே உண்மையில் எயிட்ஸ் நோயாளியை விட மிக மிக ஆபத்தானவர்கள். இவர்கள் கடலில் மிதக்கும் பனிக் கட்டி போல் (Ice Berg) பயங்கரவாதிகளாக மறைந்திருந்து எயிட்ஸைப் பரப்புகின்றனர். இந்த வகையோரில் 5-20% பிற்காலத்தில் எயிட்ஸ் வருமுன் வேறு நோய்கள் ஏற்பட்டு மரணிக்கலாம். எயிட்ஸ் நோயாளிகள் பெரும்பாலும் 30-50 .வயதுவரையுள்ள ஆண்களாவர்.தற்போது பெண்களிடையேயும், சிறுவர்களிடையேயும் இது வேகமாகப் பரவி வருகின்றது.

எனினும் எயிட்ஸ் நோயாளியுடன் வேலை செய்தாலோ, சாப்பிடுவதாலோ,கை குலுக்குவதாலோ பண்த்தை மாற்றிக் கொள்வதாலோ அல்லது தும்மல்,இருமல் மூலமோ கிருமிகள் பரவி விடுவதில்லை என்பது மருத்துவ ஆய்வாளர்களின் முடிவு. இது பொது மக்களுக்கு ஆறுதல் தரும் செய்தியாகும். எனினும் 'மறைந்துள்ள' எயிட்ஸ் பரப்புவோர் குறித்து அனைவரும் விழிப்பாயிருப்பது அத்தியாவசியமானது.



குறிப்பாகச் சுகாதார சேவையாளர் (மற்றவர்களுடன் இரத்தத்துடனும் உடற் திரவங்களுடனும் தொழில் முறையில் தொடுகையுற வேண்டியவர்கள்) மிக மிக விழிப்பாயிருத்தல் அவசியம். எனவே முன்னெச்சரிக்கையுடன்

1) எல்லா நோயாளிகளின் உடற் திரவங்களும் (குருதி/பாயம்), ஊசிகள்,எயிட்ஸ் தொற்றுள்ளதாகவே கருதிப் பாவிக்கவும்.

2) தவறுதலான காயங்கள்,ஊசி குத்துதல்கள் நிகழாவண்ணம் விழிப்புடன் சத்திரசிகிச்சையில் ஈடுபடல்.

3) உடற் பாயங்களைக் கையாளும் போது கையுறை பாவித்தல்.

4) திரவங்களை எடுப்பதற்கு ரப்பர் பம்பிக் குழாய்களையே பாவிக்கவும். வாயால் உறிஞ்சக் கூடாது.

5) கைகளைச் சுத்தமாக அடிக்கடி கழுவிக்கொள்ளல் வேண்டும்.

எல்லா நோயாளிகளிற்கும் மேற் தெரிவித்தவற்றைக் கையாள்வது அவசியம். (ஏனெனில் இலைமறை காயாகச் சமூகத்திலுள்ள நோயாளி/நோய் கண்டுபிடிக்கப் படாதவரிடமிருந்து தற்காப்புக்காக உதாரணம் வெளிநாட்டிலிருந்து கணவன் வந்துபோக, உள்நாட்டு மனைவிக்குப் பிரவசம் பார்த்தல்).

தற்போது பொருளாதார வளம் பெருக்கும் நோக்குடன் கணவன்/மனைவி வெளிநாட்டில் உழைப்பது வழமையாகியுள்ளது. இதுவும் இயற்கைக்கு மாறானது. பணத்தை வரவழைப்பதுடன் எயிட்சையும் அழைத்து வந்துவிடும். எனினும் இவ்வாறு இனங்காணப்பட்ட 'எயிட்ஸ்' நோயாளிமேல் பீதி கொள்ளத் தேவையில்லை. இவரைக் குடும்பத்தவர் அன்பாகப் பராமரித்தால் நோய் தொற்றிவிடாது. இவர்களை ஏற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டியது மற்றக் குடும்பத்தவரின் கட்டாய கடமையாகும். சுகாதார சேவைகளின் போது 'எயிட்ஸ்' நோயாளிகளுடைய உடற் பரிசோதனை மாதிரிகள் சிவப்பு நாடாவில் பெயரிடப்பட வேண்டும். இரட்டைக் கையுறை,கவுண் பாவித்தல் வேண்டும். முகத்தை மூடும் கண்ணாடி அணிதல் வேண்டும். அறையை குளோரின் நீரினால் அடிக்கடிகழுவ வேண்டும். இத்தகைய முன்னேற்பாடுகளோடு நோய் எமக்குத் தொற்றாமல் மனிதாபிமான முறையில் அன்பாகப் பராமரித்தால் வாழ்வில் தோல்வி கண்டுவிட்ட இந்நோயாளிகள் தங்கள் இறுதிக் காலத்தையாவது மனத்தாங்கலின்றிக் கழித்து மரணமடைய முடியும்

**வைத்திய கலாநிதி ஜெரால்ட் ஜீவதாசன்**




## அன்புக்கு அர்த்தம்


அந்தக் கடற்கரையோரத் தனிமையிலே
கரை மோதியது. - வாழ்க்கையெனும்
வெள்ளோட்டத்தில் என்
கடந்தகால நினைவுகள் கரைபுரண்டன.
"காசுள்ள போதே பழகிக் கொள்"
என்பதுக் கேற்ப என்னோடு நட்புக்
கொண்டோரின் ஞாபகம்! எனக்கு
உழைப்பு இருந்தபோது "அன்பு.பாசம்"
என பலதைப் பேசியோர் - இன்று
செத்த மாட்டில் உண்ணி கழன்றதைப்
போல் மெல்ல மெல்ல நழுவுகின்றனர்
புகழ் சூடும் மனிதரெல்லாம் புனிதரல்ல.
கம்பர் புகழ் பாடும்
மனிதரெல்லாம் கம்பரல்ல
ஆகவே "பணங்கள் பழகும் போது
மனங்களோ மரணித்துக் கொள்கின்றன"
என்பதை சிலருக்கு உணர்த்தி
அன்பான கபடமற்ற இதையங்களை உணர்ந்து
அன்புக்கோர் அர்த்தம் புகட்டப் போகிறேன்.

எஸ்.விமல்

## வெளிச்சம் நோக்கி...!

அடர்ந்த காட்டில்
படர்ந்த இருள்
எங்குமே இருள்...
குருவிகளின் சத்தம்
கொடிய விலங்குகளின்
உறுமல்...
பாய்ந்தோடும் அருவியின்
பயங்கரச் சத்தம்....
நடுக் காட்டில் - நான்
தனிமரம் "ஏதோ".....
என்னை உணர்த்தும்
மரணபயம்...
ஓலமிடும் காற்று...
ஆனாலும், கண்ணீருக்கு
மன மில்லை.

க. ஆனந்தன்



## நண்பா...

நீலக்கடலே நிலவன்
நிலமே நீங்கள் நாடித்தவம்
புரிந்த புனிதர்களே
வனமது இடிந்துவிட்டால்
தாரகைகள் வழிகாட்டும்.
தாயகம் விடிந்து விட்டால்
உங்கள் புகழ் பாடும்
ஈழம் விடியும் இதயங்கள்
மலரும் நாளை
தமிழீழம்.

சு.நிலா,

## ஏக்கம்

புதுவருட கொண்டாட்டம்
நாள் முழுதும் ஒரே கூட்டம்
கடை தெருக்கள் எல்லாமே
கலகலப்பின் நிலை நிறுத்தம்
மஞ்சுளா புடவையகம்
மக்கள் வெள்ளத்தில்
நதியா நகையகமோ
நங்கையர் பரபரப்பில்
பலசரக்குக் கடைகளிலோ
பற்பல இடிபாடு
என் கடையை நோக்கி
எவர் வருவாரென
ஏக்கத்துடன் காத்திருந்தேன்
கச்சானை விற்று
என் கடைக்குட்டிக்கு
கஞ்சியேனும் வார்ப்பதற்கு.

பொ.சத்தியபாமா.

### தமிழ் குழுக்கள்

உள்ளங்கையில்
உணவிருக்க
புறங்கை நக்கும்
போக்கிரிகள்

### மரங்கள்

தகிக்கும் கோடை
இயற்கை பிடிக்கும்
அழகிய குடைகள்

### வாழ்க்கை

இருந்து விட்டேன்
எழுதியே ஆகவேண்டும்
ஒத்திவைக்க முடியாத
தேர்வுநாள் இது.

### சூரியன்

உலகுக்காய்
ஏற்றிவைத்த
ஒரு விளக்கு

கு.தவசீலன்

## சொல்ல வேண்டி வந்த பொய்கள்

தனியார் வைத்தியசாலையில் பணம் கொடுத்தால்தான் வைத்தியம் செய்வார்கள். ஆனாலும் தற்கால சூழலில் மக்களின் வறிய நிலையையும் தமது சேவையின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு இலவசமாக சிகிச்சை செய்ய சில வைத்தியர்கள் முன்வந்தனர்.

அச் சிகிச்சைப் பிரிவில் என்போன்ற காயமடைந்த சுமதி சிகிச்சைக்காக சென்றாள். அவளுக்கு வயதோ 25 ஆகிவிட்டது. எனவே டொக்ரர் சொன்னார் "இனி ஆபிரேசன் செய்தால் எலும்புகள் பொருந்தாது; செய்தும் பிரயோசனம் இல்லை" இவ்வாறு காரணம் கூறி மறுத்துவிட்டார். அவள் கொஞ்சம் தோற்றமுள்ளவள்தான் வசதி உடையவள் தான் ஆனால் எனக்கும் வயது 25தான் ஆனாலும் என்னைப் பார்ப்பவர்கள் எல்லோரும் 18 அல்லது 19 வயதுதான் மதிப்பார்கள்.

நாங்கள் ஒரு வறிய குடும்பம். எனவே இந்த வைத்தியரிடம் இந்த முறை செய்துவிட வேண்டும். ஏனெனில் அடுத்தடுத்த முறை வருவார்களோ தெரியாது. ஆகவே உற்றார் உறவினர் அயலவர் யாவரினதும் ஆலோசனையாக எனக்கு 18வயது என வைத்தியரிடம் கூற வேண்டும் என்று எல்லோரும் கூறிவிட்டார்கள். நானும் அதற்கு ஆமோதித்து வைத்தியசாலைக்கு சென்றேன். அங்கு வைத்தியர் என் கையை பார்த்துவிட்டு கட்டாயம் செய்யோணும். செய்தா வெற்றி கிடைக்கும். "பிள்ளைக்கு எத்தனை வயசு" "எனக்கு 18 வயது" அப்ப அவசரமில்லை ஒருவருடம் கழிச்சு ஆபிரேசன் செய்யலாம். டொக்டர் சஞ்சலம் ஏதுமின்றிக் கூறிமுடித்தார்.

செ. கானப்பிரியா.

## இப்படி ஏன் நடக்கிறது

கிளிநொச்சியில் இருந்து யாழ் செல்லும் பேருந்தில் ஏறி உட்கார்ந்தேன்.

சுவீப் நாளைக்கு குலுக்கல் இரண்டு கோடி ரூபா பரிசு' அம்மா, ஐயா, அண்ணா, தம்பி அதிஸ்ர ரிக்கற் வாங்கலையா ஐந்து ரூபாதான் வாங்குங்கள் என்று கூவிக் கூவி மும்மரமாக விற்பனையில் ஈடுபட்டான் ரிக்கற் வியாபாரி.

பேருந்தின் கீழ் இருந்து ஐயா தர்மம் பண்ணுங்கள் கோடி புண்ணியம் கிடைக்கும் என்று குரல் கேட்டது.

இவற்றை எல்லாம் பேருந்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன் மனதும் எண்ணங்கள் அலைமோத பொக்கட்டில் இருந்து காசை எடுத்தேன்.

பொக்கட்டில் இருந்து எடுத்த ஐந்து ரூபாவையும் மன நிறைவுடன் பிச்சைக்காரனிடம் கொடுத்தேன்.

ரிக்கற் காரனிற்கு என்னைப் பார்க்க வெறுப்பாக இருந்தது. தன்னிடம் சுவீப் ரிக்கற் வாங்க வில்லை என்று முகத்தை திருப்பிக் கொண்டு வேகமாக பேருந்தை விட்டு இறங்கிச் சென்றான்.

நான் பேருந்தில் இருந்தபடி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன் அந்த பிச்சைக் காரன் என்னிடம் வாங்கிய ஐந்து ரூபாயைக் கொடுத்து ஒரு அதிஸ்ர ரிக்கற்ரை வாங்குகிறான்!

பா.பவி

## குறுக்கெழுத்துப்போட்டி - 53

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 04 | | | |
| 08 | | 10 | | | 13 | |
| | | | 18 | | | |
| | | | 25 | | | 28 |
| | | 30 | | | | |
| 36 | | | | | 41 | |
| 43 | | | 46 | | | |

பெயர்:-..............................
முகவரி:-..............................
..............................
..............................

### இடமிருந்து வலம்

01. இறுமாப்பு.
08. கோள்.
13. தலைமுடி.
18. கணவனுக்கு எதிர்ப்பால்.
25. ஊர்.
30. தூபி குழம்பியுள்ளது.
43. மாதங்களில் ஒன்று.
46. கடவுள் குழம்பியுள்ளது.

### மேலிருந்து கீழ்

01. கொல்லாமை.
02. காட்டு மிருகம்.
04. நாளடைவு குழம்பியுள்ளது.
10. அருள்.
28. காற்றில் பறக்கவிடுவது தலை கீழாக உள்ளது.
30. ஓர் இடம்.
36. தொடக்கம் தலைகீழாக உள்ளது.
41. வீடு தலைகீழாக உள்ளது.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.51 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தாரம்.
05. இரக்கம்.
11. அக்கினி.
18. ஒப்பனை.
26. பயம்.
31. அபராதம்.
40. குருதி.
46. தருமன்.

**மேலிருந்து கீழ்**

01. தாகம்.
03. கரம்.
09. அகம்பாவம்.
18. ஒப்பந்தம்.
29. உணவு.
31. அன்பு.
40. குரு.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.53
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.51 இன் பரிசுக்குரியவர்

க. பத்மஸ்ரீ, இல.32A,
இரண்டாம் குறுக்குத் தெரு,
வவுனியா.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.51 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. ம.தாமரைச் செல்வி, அளம்பில், முல்லைத்தீவு.
02. லூ. கஜேந்திரன், 06ஆம் யுனிற், இராமநாதபுரம்.
03. க. நிலாசினி, உருத்திரபுரம், கிளிநொச்சி.
04. கா. தனுஷான், இராமநாதபுரம், வட்டக்கச்சி.
05. மு. இளவதனி, கோம்பாவில், புதுக்குடியிருப்பு.
06. சி. இராஜினி, கலவெட்டித்திடல், புளியம் பொக்கனை

# பொருண்மை வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

### சிதம்பரதிருச்செந்திநாதர்

எங்கள் பொருண்மிய வளங்களில் கால்நடை வளம் முக்கியமானது. அதன் காரணமாகவே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளை கால்நடைகள் தொடர்பாக எடுத்து வருகின்றது.

குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவையை மேற்கொண்டு வருகின்ற பிரதேசங்களில் நீண்ட காலமாகச் சினைப்படாமலும், வேட்கைக்கு வராமலும் உள்ள



பசுக்கள் பல இனங்காணப் பட்டுள்ளன. இப்பசுக்களைக் கர்ப்பப் பரிசோதனைக் குட்படுத் தி வேட்கையை ஒருமுகப்படுத்தல், ஊசி மருந்தை இப்பசுக்களுக்கு ஏற்றி வேட்கையை உண்டாக்கிச் சினைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விலங்கு வேளாண்மைப் பகுதியினரும் கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்கள வைத்திய அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4,5,6 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திலும் அதன் பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.

எனவே இத்தகைய குறைபாடுகளையுடைய பசுக்களை வளர்ப்பவர்கள் அவ்வப்பகுதிக் கால்நடை நிலையங்களிலோ அல்லது காராளி செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையத்திலோ எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொண்டு பயன்பெற முனையவும்.

இது உங்கள் கால்நடை வளத்தை மேம்படுத்துவதாக மட்டும் அமையாது. எங்கள் தாயகத்தின் பொருண்மியத்தையும் மேம்படுத்துவதாக அமையும்.

## சூரிய சக்தி வளம்

சூரியனே சக்தியின் ஆதாரம். சூரிய ஒளியிலிருந்து சக்தியைப் பெறுவதற்கு இன்று புத்தம் புதிய தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மரபு ரீதியான சக்தி வளப்பயன்பாட்டால் ஏற்படும் சூழல் மாசுபடும் பிரச்சினை இவ் வளப்பயன்பாட்டால் இல்லாதொழிந்து விடும். சூரிய சக்தியை இரு வகைகளில் பயன்படுத்தலாம்.

1). சூரிய வெப்பத்தை நேரடியாகப் பயன்படுத்துவது.

2) சூரிய சக்தியை மின் சக்தியாக மாற்றிப் பயன்படுத்துவது.

சூரிய வெப்பத்தை நேரடியாகப் பயன்படுத்தும் முறை எமக்குப் பழக்கமான பாரம்பரிய முறையே உணவுப் பொருட்களை உலர வைத்துப் பயன்படும் முறை நீண்டகாலமாகவே நடைபெற்று வருகிறது. ஆனால், சிறிது தொழில்நுட்ப அறிவைப் புகுத்துவதன் மூலம் சூரிய வெப்பத்தை பல்வேறு வழிகளில் பயன்படுத்த முடியும். கருமையாக்கப்பட்ட பொருளின் மீது சூரிய வெப்பம் பெருமளவு ஈர்க்கப்படும். இவ் விஞ்ஞான உண்மையைப் பயன்படுத்திப் பெருமளவு பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளலாம். எனினும், குறைந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எமக்குத் தேவையான சூரிய அடுப்புக்களை நாம் தயாரித்துக் கொள்ளலாம்.

சூரிய அடுப்புக்கள் தயாரிக்கும் போது கண்ணாடி வில்லைகளைப் பயன்படுத்திச் சூரிய வெப்பத்தை ஒரே இடத்தில் குவியச் செய்யும் வகையில் கூடை போலவும். பெட்டி போன்ற வடிவத்திலும் அடுப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன.

சில பொருட்களின் மூலம் சூரிய ஒளி படும் போது ஒரு வகை மின்னோட்டம் உண்டாகின்றது என பிரான்சிய விஞ்ஞானி எட்மன்ட் பெக்கர் என்பவர் 1839 இல் கண்டுபிடித்தார்.

இந்தக் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து "செலினியம்" என்ற கனிமத்திலிருந்து திருத்தமற்ற சூரிய மின்கலங்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வாய்வுப் பணி மேலும் தொடர்ந்தது. 1954 இல் நியூயோர்க்கிலுள்ள பெல் ஆய்வு கூடத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் "சிலிக்கன்" எனும் கனிமத்தைப் பயன்படுத்திச் சூரிய மின்கலம் தயாரிக்க முயன்று வெற்றி பெற்றனர்.

சிலிக்கன் என்பது உலகில் மிகவும் மலிவாகவும்.அதிகமாகவும் கிடைக்கும் கனிமமாகும். இது பூமியில் மண்ணுடன் கலந்துள்ளது. இக்கனிமம் 1400° C சென்ரிக்கிரேட் அளவுக்கு வெப்பம் ஏற்றுவதன் மூலம் உருவாக்கப்பட்டு படிக வார்ப்புக்கள் பெறப்படுகின்றன. இவற்றில் இருந்து தனித்தனிச் சில்லுகளாகச் சிலிக்கன் சீவி எடுக்கப்பட்டுச் சூரிய மின்கலங்கள் தயாரிக்கப்படுகின்றன.

1990 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா.ரஷ்யா.பிரித்தானியா. பிரான்ஸ். ஜேர்மனி. அவுஸ்திரேலியா. சீனா.இந்தியா போன்ற நாடுகள் சூரிய மின்கலங்களை உற்பத்தி செய்வதில் தீவிர அக்கறை காட்டி வருகின்றன.

மரபு ரீதியாகச் சக்தியைப் பயன்படுத்தி மின்சாரமயமாக்கப்பட்டது. கைத்தொழில் நாடுகளையும். நகரங்களையும் சார்ந்த மக்களைவிட மூன்றாம் உலகக் கிராமிய மக்களே சூரிய மின்கலங்களால் அதிக பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். இக்கிராமங்கள் சூரிய மின்கலம் மூலம் பின்வரும் பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

01) வீட்டுப்பாவனைக்கு மட்டுப்படுத்தப் பட்ட மின்சாரம் பெறல்.
02) சிறிய அளவிலான விவசாய நடவடிக் கைக்கு நீர் இறைத்தல்.
03) கிராமிய வைத்தியசாலைகளில் குளிரூட்டிகளை இயங்கச் செய்தல்.
04) தொலைத்தொடர்புச் சாதனங்களை இயங்கச் செய்தல்.

இன்னும் பல எரிபொருள் தடையின் பாதிப்பில் இருந்து விடுபட சூரிய மின்கலங்களைப் பாவிக்க முடியும்.

எமது தேசம் நீண்ட கடற்கரையைக் கொண்ட ஒரு தீவாகும் மத்திய கோட்டுக்கு அண்மையில் காணப்படுவதால் இது இயற்கையாகவே அதிக வெப்பத்தையும். காற்றையும் கொண்டு விளங்குகிறது.

இத்தகைய இயற்கை வளங்களில் நாம் சிறிது தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தைப் பெற்றுப் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். தனி நபர் தமது வீடுகளில் சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலும் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கும் சூரியமின்கலம் உதவுகிறது.

எமது பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் பின்தங்கிய கிராமங்களில் நிறைய மக்கள் வாழ்கின்றனர். இவ்விடங்களிலிருந்து கல்வி கற்கும் மாணவர்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாது குப்பி விளக்கிலேயே கல்வி கற்க வேண்டிய நிலையில் உள்ளனர். இத்தகைய இடங்களில் வசிக்கின்ற மாணவர்கள் குப்பி விளக்கில் கல்வி கற்றுக் கண்பார்வை இழந்த மாணவர்கள் அனேகம்.

இராணுவ ஆக்கிரமிப்பால் பொருளாதாரத் தடை ஏற்பட்டிருந்த காலத்தில் மாணவர்கள் மெழுகுதிரி. சிக்கன விளக்கு கூட்டாகச் சேர்ந்து பெற்றோமாக்ஸ் குப்பி விளக்குகளில் கல்வி கற்ற காலத்தை யாருமே மறக்க முடியாது.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு. பின்தங்கிய கிராமங்களுக்கு த.பொ.மே.நிறுவனம் இரவு நேரக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் சூரிய மின்கலத் தொகுதியை இலவசமாக வழங்கி வருகின்றது. இருளான ஒளியில் கல்வி கற்ற இக்கிராம மாணவர்கள் மின்சாரத்தில் கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்று வருகின்றனர்.

- சிவகமலா

யுத்தத்தின் போது 3500000 பனைகள் அழிக்கப்பட்டுள்ளன இவற்றை ஈடுசெய்யுமுகமாக தாலமூல வள அபிவிருத்தி நிறுவனம் பனம் விதையை மீள் நடுகை செய்து வருகிறது இந்த வகையில் 2000, 2001,2002, 2003 ஆகிய வருடங்களில் நாட்டப்பட்ட பனைவிதைகளின் விபரம்.

| மாவட்டம் | 2000ஆம | 2001ஆம | 2002ஆம் | 2003ஆம் |
|---|---|---|---|---|
| மன்னார் மாவட்டம் | - | 4467 | 623500 | 10000 |
| கிளி.மாவட்டம் | - | - | 679675 | 131100 |
| முல்லை மாவட்டம் | - | 48720 | 459296 | 11600 |
| வவுனியா மாவட்டம் | - | 2500 | 586456 | 10525 |
| யாழ். மாவட்டம் | 207697 | 227997 | 295675 | 149900 |

## நீரிழிவு நோய் தீர உதவும் மண்ணீரல்





அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நீரிழிவு நோயை கட்டுப் படுத்த புதிய சிகிச்சைமுறையை கண்டுபிடித்து உள்ளனர். எலிகளின் உடலில் சோதனை நடத்தி இதை கண்டறிந்து உள்ளனர். நீரிழிவு நோய் உள்ள எலிகளை தேர்வு செய்தனர். அவைகளின் உடலில் புதிய செல்களை (உடலணு) பொருத்தினார்கள். இந்த புதிய செல்கள் அல்லது உடலணுக்களை ஆரோக்கியமான எலிகளின் மண்ணீரலில் இருந்து முதலில் எடுத்தார்கள். நீரிழிவு பாதித்த எலிகளின் உடலினுள் செல்களை பொருத்திய பிறகு ஒரு வினோதம் நடத்தது. இவ்வாறு செலுத்தப்பட்ட மண்ணீரல் செல்கள் தாங்களே இன்சுலினைச் சுரந்தது தெரிய வந்தது. இப்படி சுரக்கும் இன்சுலின் அந்த எலியின் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தவும், குணமாக்கவும் பயன்பட வல்லது என்பது தெரிந்தது. மனிதர்களுக்கும இதே முறையை பயன் படுத்த முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது. ஆரோக்கியமான மனிதர்களின் மண்ணீரல் செல் மூலம் இந்த சிகிச்சை எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் என தெரிகிறது.

## சுவிங்கம் போன்ற கருத்தடை மாத்திரை



சுவிங்கம் போன்ற மென்று தின்னும் கருத்தடை மாத்திரை தற்போது தயாரிக்கப்பட்டு உள்ளன. குழந்தை உருவாவதை தடுக்க பெண்கள் கருத்தடை மாத்திரை சாப்பிடுகின்றனர். தற்போது சுவிங்கம் போன்ற மென்று தின்னும் கருத்தடை மாத்திரை ஓவ்கான்-35 தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமெரிக்க உணவு - மருந்துக் கழகம் அனுமதி அளித்திருக்கிறது. ஒரு அட்டையில் மொத்தம் 28 மாத்திரை இருக்கும். அதில் 21 வெள்ளை நிறத்திலும்,7 பச்சை நிறத்திலும் இருக்கும். இந்த மாத்திரையை தினமும் ஒன்று வீதம் மென்று தின்ன வேண்டும். அதன் பிறகு ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். இப்படி செய்தால் கருத்தரிக்காது என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது.

## உலக வெப்பநிலை உயர்ந்து வருகிறது



உலகின் வெப்பநிலை கடந்த 50 ஆண்டுகளில் பொதுவாக உயர்ந்து இருக்கிறது என்று இங்கிலாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மனித உடலின் வெப்பநிலை 98.4 டிகிரி பாரன்ஹீட் ஆகும். வெயில் காலங்களில் அதிக பட்சமாக 120 டிகிரி பாரன்ஹீட் வரை வெயில் கொளுத்துவது உண்டு. உலகின் வெப்பநிலை கடந்த 50 ஆண்டுகளில் பொதுவாக உயர்ந்து இருக்கிறது என்று இங்கிலாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். 1900 ஆண்டில் இருந்து 1999 ஆம் ஆண்டு வரை வட அமெரிக்காவில் வெயில் அளவின் மாற்றத்தை கண்காணித்தார்கள்.இதில் 2 1/2 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் அதிகரித்து இருப்பது தெரிய வந்தது. இதில் 80 சதவீத வெப்பம் 1970 ஆம் ஆண்டில் மட்டும் கூடியிருக்கின்றது. இதற்கான காரணத்தை ஆராய்ந்ததில் உறுதியான தகவல் எதுவும் கிடைக்க வில்லை. மனிதர்கள் உற்பத்தி செய்யும் இயற்கைவாயு காரணமாக இருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள். இயற்கையின் ஏற்ற இறக்கம் காரணமாக இருக்கலாம் என்று ஒரு பிரிவினர் சொல்கிறார்கள். எப்படி இருப்பினும் உலகின் வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருந்தால் மனிதர்களுக்கு இனம் புரியாத வியாதிகளும் வெப்ப நோய்களும் வர வாய்ப்பு இருக்கிறது.

## உலகில் ஆண்டுக்கு எத்தனை கர்ப்பிணிகள் இறக்கின்றார்கள்



இன்று உலகம் முழுவதும் ஆண்டுக்கு 5லட்சம் பெண்கள் பிரசவ காலத்தில் இறக்கிறார்கள். இதற்கு காரணம் பெண்கள் உடலில் சத்துக்குறைபாடுதான். எனவே ஆரம்ப காலத்தில் இருந்தே பெண்களுக்கு அதிக சத்துக்களைக் கொடுக்கவேண்டும். மேலும் குழந்தைகள் பிறந்த 6 மாதகாலத்திற்கு தாய்ப்பால் மட்டும்தான் கொடுக்க வேண்டும். தண்ணீர் கூட கொடுக்கக் கூடாது அப்போதுதான் குழந்தைகள் முறையாக வளர்ச்சி அடையும்.

— சானா —

# கறுப்புச் சேரியில் கலை மலர்ச்சி

## அமெரிக்க மண்ணில் கறுப்பு இலக்கியம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இதில் கறுப்பு கலை - இலக்கிய வாதிகளையும், வெள்ளை உலகின் பிரபல எழுத்தாளர், வெளியீட்டாளர், செல்வந்தர் அனைவரையும் ஒன்றாகச் சந்திக்கவைத்தார். இதனால் பல கறுப்பு எழுத்தாளர்களுக்குப் பிரபல வெளியீட்டாளர்கள் கிடைத்தனர். வெள்ளையர்கள் ஒரு ஆதர்சமாகக் கருதிய, எந்தவிதக் கட்டுப்பாடுமற்ற சுதந்திர மனிதன் எனும் இலட்சிய உருவமாக கறுப்பு மனிதனைத் தேர்ந்தெடுத்தார்கள். கறுப்பு மனிதன் உன்னதமான இயற்கையின் கவலையற்ற குழந்தையாக வெள்ளையர்களுக்குத் தெரிந்தான். வெள்ளையர்கள் நேசித்த காட்டுமிராண்டி மனிதனாக நீக்ரோ தெரிந்ததால், அவனது கறுப்பு எழுத்துக்களை வெள்ளை உலகம் வெளியிட்டுப் பணம் பண்ண முயன்றது.

கறுப்பு எழுத்தாளர்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டபோதும் கூட, தாங்கள் பயன்படுத்தப்படுவது குறித்த விழிப்புணர்ச்சியுடன் இருந்தனர் நீக்ரோக்கள். லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ் தனது 'போரிடும் வார்த்தைகள்' (Fighting Words) எனும் கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

''இவை நமது பிரச்சினைகள்: முதலாவதாக பதிப்பாளர்கள் நமது எழுத்துக்களைக் காட்டுமிராண்டித்தனமானவை என்று கருதுகிறார்கள். நமது எழுத்துக்கள் சீன எழுத்துக்களுடனும், பாலிமொழி எழுத்துக்களுடனும் வகை பிரிக்கப்படுகின்றன. நாம் நமது காட்டுமிராண்டித்தனத்தை இழந்தவுடன் நாம் விற்கப்படமாட்டோம்.''

பிரபல வெளியீட்டாளர்களுடனும், வெள்ளை இதழ்களுடனும் ஹார்லம் எழுத்தாளர்கள் முழுமையான தொடர்பு கொண்டிருந்த போதிலும், சுரண்டல் குறித்த விழிப்புடனேயே இருந்தார்கள். வெள்ளையர்களுக்குத் தேவையான மற்றுமொரு கறுப்பு மனிதனை அவர்கள் ஜோடித்துக் கொள்ள ஹார்லம் எழுத்தாளர்கள் அனுமதிக்கவில்லை என்பதை ஹ்யூக்ஸின் வார்த்தைகளால் நாம் அறியலாம்.



இவ்வாறு ஹார்லமில் கறுப்பு இலக்கிய நிறுவனங்களாக மனிதர்களே இயங்கினார்கள். செங்கல்லும், சீமெந்தும் கொண்ட கலை நிறுவனக் கட்டடங்கள் இங்கு எழுப்பப்படவில்லை. ஆனால் ஆர்ணா பாண்டம்ஸ் ஒரு நடமாடும் கலை நிறுவனமாக இருந்தார். ஆலெய்ன் லோக்கேயின் 'புதிய நீக்ரோ', லாங்ஸ்டன் ஹ்யூக்சின் 'நீக்ரோ கலைஞனும் இனவெறிமலையும்', 'தி கிரைசிஸ்', 'தி ஆப்பர்ச்சூனிட்டி' போன்ற இதழ்கள் என்றும் நிலைத்து வாழும் நிலையை அடைந்தன.

ஆனாலும் 'ஹார்லம் மறுமலர்ச்சி'யின் முதல் கால கட்டமான பிரச்சார காலம் பின்னாளில் பல கறுப்பு விமர்சகர்களாலும், வெள்ளை விமர்சகர்களாலும் கடுமையாகத் தாக்கப்பட்டது. ஹார்லம் மறுமலர்ச்சியின் மீதான விமர்சனத்தை வைக்காமல், இக்கட்டுரையை முடிப்பது முழுமையாக இருக்காது.



ஹார்லமின் புகழ் கறுப்பு உலகத்தைக் கடந்து பரவியது. வெள்ளை அறிவுஜீவிகள் வெள்ளை அமெரிக்காவில் தாங்கள் வெறுப்பவற்றிற்கு ஒரு மாற்று கிடைத்து விட்டதாக ஹார்லம் எழுத்துக்களைப் போற்றினர். வெள்ளை எழுத்தாளர்கள் கறுப்பு வாழ்க்கையைத் சுற்றித் தங்கள் படைப்புகளைச் செய்யத் தொடங்கினர். இது ஹார்லம் மறுமலர்ச்சிக்கு முன்னரே முயற்சி செய்யப்பட்டாலும், மறுமலர்ச்சிக்குப் பிறகு புதிய வேகம் பெற்றது. வெள்ளை இசைக்கலைஞர்கள் ஜாஸ் (JAZZ) புளுஸ் (BLUES) போன்ற முயற்சிகளைச் செய்தனர். வெள்ளையர்களின் புதிய /பாஷன் உலகம் ஹார்லம்மின் காபரேக்களையும், நடன அரங்குகளையும் சுற்றி வரத் தொடங்கியது.

ஆனால் இவை அனைத்தும் சேர்ந்து, நீக்ரோவிற்கு என்று திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாக வந்து சலிப்பூட்டுகிற ஒரு உருவத்தை ஜோடித்து விட்டது என்று விமர்சனம் செய்யப்பட்டது. பணிவான, சோம் பேறித்தனமான, குழந்தைத்தனமான பழையநீக்ரோ உருவத்துடன், எந்தவிதமான கட்டுப் பாடுமற்ற ஒரு காட்டுமிராண்டித் தனமான ஒரு உருவமும் இணைந்து கொண்டது. இதனை கறுப்பு விமர்சகர்களே குறை கூறினார்கள்.

இதைக் காட்டிலும் பலமான ஒரு விமர்சனத்தை லியோன் விப்பிள் (LEON WHIPPLE) எனும் வெள்ளை விமர்சகர் வைத்தார். 'நீக்ரோ தனது உன்னதமான யாழ் இசைக் கருவியை ஒரு குவளை சூப்புக்காக வைத்துச் சூதாடுகிறான்' என்று குற்றம்சாட்டினார். இந்த விமர்சனத்தை ஆழ்ந்து சிந்தித்தால் அமெரிக்க மண்ணின் தலித்தான நீக்ரோவுக்கு எத்தகைய அவலநிலை நேர்ந்திருக்கிறது என்று புரிந்து கொள்ளலாம். ஹார்லம் மறுமலர்ச்சியில், ஆப்பிரிக்க மண்ணுக்கே உரித்தான கலைக் கருவூலங்கள் வெள்ளையர்களிடம் சம உரிமை கோரும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டது என்று விமர்சிக்கிறார் விப்பிள்.

ஆனால் இது எவ்வளவு பெரிய சோகம் என்பதை, இந்த விமரிசனத்தையே சற்றுத் திருப்பிப் பார்த்தால் புரியும், வெள்ளையர்களிடம் தன்னை மனிதனாக, சகமனிதனாக மதிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்காக கறுப்பு மனிதன் தன் ஆப்பிரிக்கக் கலைக்கருவூலங்களை எல்லாம் காட்டி வாதாட வேண்டியிருக்கிறது. தனது மனித உரிமைகளுக்காகப் போராடும் ஒரு கருவியாக கலை - இலக்கியத்தைப் பயன்படுத்தும்போது அவன் ஒரு மெல்லிய கயிற்றின் மீது, கரணம் தப்பினால் மரணம் என்கிற நிலையில் நடக்கிற அபாயம் தெரிகிறது.

இதனால்தான் 'ஹார்லம் மறுமலர்ச்சி'யின் மீது எவ்வளவு விமர்சனங்கள் வைக்கப்பட்டாலும், அது கறுப்பு மனிதனுக்கு, இலக்கிய உலகத்தின் கதவுகளைத் திறந்துவிட்ட ஒரு முக்கிய எழுச்சி என்பதை மறுக்கமுடிவதில்லை. அமெரிக்க மண்ணில் நீக்ரோ எனும் தலித், தனது தலித் அடையாளத்துடனேயே, அங்கீகாரம் பெற்ற இலக்கிய உலகில் நுழைந்து சரியாசனம் பெற ஹார்லம் மறுமலர்ச்சி ஊற்றுக்கண்ணாய் இருந்ததை யாரும் மறுக்க முடிவதில்லை.


ஏழாம் ஆண்டு நினைவலையில்
உன்னோடு நாங்கள்

தாயின் மடியில
03 - 10 - 1974



தாயக மண்ணில்
09 - 01 - 1997

லெப். சகாதேவன்
மயில்வாகனம் சசிகரன்

*தாயக மண்ணின் விடிவிற்காக*
*உன் உயிரை ஈந்த சசிகரனே!*
*அதர்மத்துக்கு எதிராய் நின்று*
*வீரப் போராடிய சசிகரனே!*
*தலைவனின் ஆணையை தலைமேல்*
*சுமந்த சகாதேவனே! எல்லோரும்*
*போற்றும் புலிப்படைக்கு சகாதேவனாய்,*
*தர்மம் வெல்ல அயராது - வீரமாய்*
*போராடிய சசிகரனே! நீ நினைத்த தர்மம்*
*இன்று வென்று விட்டது சகாதேவா.*
*உன் இலட்சியமான தழிழீழம்*
*விரைவில் மலர்ந்துவிடும் சகாதேவனே!.*

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். 09.01.2004 நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர்கள், நண்பர்கள் சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.1C,பகுதி -1,
திருவையாறு, கிளிநொச்சி.

பெற்றோர்,
மயில்வாகனம்,
புஸ்பகாந்தி.



ஈழநாதத்தின் நன்றிகள்

புதுவருடத்தை யொட்டி ஈழநாதம் பத்திரிகையாகிய எமக்கு எமது பிரியமான வாசகர்கள் அனுப்பிய வாழ்த்து மடல்கள் கண்டு மனமகிழ்வடைந்தோம்.

வாழ்த்துக்கள் அனுப்பிய அனைவருக்கும் மனமார நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

நேசமுடன்,
ஈழநாதம்.



பொதிவிநியோக சேவையில் TNT யின்
தைத்திருநாள் விசேட தள்ளுபடி



தைப்பொங்கலை முன்னிட்டு
சர்வதேச கூரியர் சேவை,
சர்வதேச தபால்சேவை,
உள்நாட்டு கூரியர் சேவைகளுக்கு
**20% சிறப்புத் தள்ளுபடி**யினை வழங்குகின்றோம்
என்பதை மனமகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

20% விசேடகழிவு

தொடர்புகளுக்கு:
TNT கூரியர் சேவை
487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021- 2223771
0777- 270452

வெளிநாட்டில் உள்ளவர்கள் அந்தந்த நாட்டினுள் TNT கூரியர் சேவை மூலம் யாழ்ப்பாணம், வன்னியில் உள்ள உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பொங்கல் பரிசுகளை அனுப்பி வைக்கமுடியும்.

நாங்கள் உங்கள் கிளப்பிப் பொருட்களை மட்டுமல்ல அவற்றோடு உங்கள் அன்பினையும் எடுத்துச் சென்று சேர்க்கின்றோம்.


இவ் விசேட சலுகை பொங்கல் திருநாள் வரை மட்டுமே.

(ச-8870)






இரண்டுமே பாய்ச்சல்கள்தான். ஒன்று வெற்றிக்காக, மற்றது வெற்றியால் உண்டானது. கலிபோர்னியாவில் ஒரு பந்துக்கு தலைகொடுக்க மேலெழும் வீரர்களும் வெற்றியின் மகிழ்ச்சியால் மேலெழும் ரகர் வீரர்களும்.



என்ன துணிவு இவருக்கு. தனது ஒரு வயதுக் குழந்தையை இடது கையிலும் அதே அளவு இறைச்சித் துண்டொன்றை வலது கையில் வைத்து முதலைக்கு வேடிக்கை காட்டும் இவர் பிரபல முதலைவேட்டையாளர் ஸ்ரேவ் இவன். அவுஸ்திரேலியாவில் அண்மையில் நடத்திய நிகழ்வொன்றில் இவ்வாறு தோன்றியதுதான் தாமதம் பல சிறுவர் உரிமை அமைப்புக்கள் எதிர்ப்புக்குரல் எழுப்பத் தொடங்கி விட்டனர்.

# இணையநாதம்

உயிரைப்பணயம் வைத்து பந்தயங்களில் ஈடுபடுவதென்பது எம்மவர்களுக்கு சற்று கடினமானதுதான் ஆனால் கால்களில் சிறு தோணியை மாட்டிக்கொண்டு சுழன்றெழும் அலைகளினூடு தாவிச்செல்வ[illegible] என்பது இவர்களுக்கு இனிப்பு உண்பது போலாகும். ஒரு குறிப்பிட்டதொகைப்பணப் பரிசிற்கா[illegible] இவர்களின் சகாசங்கள் எம்மை தலைசுற்ற வைக்கவில்லையா?



மாடு வண்டி இழுக்கும் என்றுதான் சிறுவயதில் படித்தோம். நாயும் வண்டி இழுக்கும் என்று பின்னர் தெரிந்துகொண்டோம். அந்தமாதிரியானதொரு நாய் வண்டிதான் இது. ஸ்கொட்லாந்தில் வார இறுதிகளில் மனிதர் உல்லாசமாகக் கழிக்க நாய்கள் வண்டி இழுப்பது புதிதல்ல.



www.eezhanatham.com

இணையத்தளத்தில் இனி ஈழநாதம்பார்க்க க்ளிக் செய்யுங்கள்

இந்தப் பூனைக்கு வாய்த்த கஸ்ரகாலம் கூண்டுக்குள் போட்டு பூட்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறாகள். சீனாவின் குவான்சாகு நகரில் பிடிபட்ட முதலாவது சார்ஸ் நோய் பூனைக்குட்டிதான் இது. சீனாவில் மீண்டும் தோன்றிவரும் சார்ஸ் அபாயத்தைக் கருத்திற்கொண்டு இவ்வாறான மிருகங்கள் விற்கப்படும் பல இடங்கள் பொலிசாரினால் முற்றுகையிடப் படுகின்றன.



தலைப்பாகைகளுடன் நிற்கும் இச்சிறுவர்கள் கைகளில் ஏந்தியிருப்பது வாள்கள்தான் அணிவகுப்பு ஒன்றிற்காக பாரம்பரிய தலைப்பாகையும் இராணுவ உடையும் தரித்திருக்கும் இச்சீக்கிய சிறுவர்கள் முகங்களில் மட்டும் இராணுவச்சாயல் தெரியவில்லை அல்லவா?



நகல்களைப்பார்த்து பொறாமைப்படும் அசல் பெண்அணிந்திருக்கும் ஆடையிலும் பார்க்க நகல்கள் அழகாகப் படுகின்றதல்லவா இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் ஆடைத்தெரிவில் ஈடுபடும் இந்த முஸ்லிம் பெண் தெரிவுசெய்தபோது எதை






கடந்த மே மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமை. மாலை நாலு மணி. வானம் இருண்டு படபடவென்று கனத்த தூறலாய் மழை துமித்துக் கொண்டிருந்தது: அந்த வானத்திலும் பார்க்கக் கறுத்தடர்ந்திருந்த ஆப்பிரிக்கக் காடொன்றின் நடுவே, சப்பாத்தின் கீழ் சரளைக் கற்கள் சரசரக்க நடந்து கொண்டிருந்தேன். திடீரென்று எல்லாமே கனவு போலிருந்தது- இருந்தாற் போல யாழ்ப்பாணத்திலிருந்து யாரோ என்னைத் தூக்கி கடல் மட்டத்தின் மேலே 2200மீற்றர் உயரத்திலிருக்கிற அந்தக் கென்ய மலையின் மழைக் காட்டு இருளில் வீசி விட்ட மாதிரி!

அது நடுக்காடு தானென்றாலும் நடுவில் ஒரு பாதை போய்க் கொண்டிருந்தது. ஆறடி அகலம் இரண்டு புறமும் கறுத்தப் பெயின்ரோ, சொலிக்னமோ அடித்துக் கன்னங்கரேலென்றிருந்த மரக்குற்றிகளாளான பலமான உயர வேலி. காலடியில் கிடந்தசரளையும் கருங்கல் காடும், வேலிக்கு மேலால் எட்டிப் பார்த்து முகத்தை வருடியது அதன் சுவாசம் குப்பென்று மூக்கிலடித்தது: ஏதேதோ மிருகங்களின் சிணியும் மரங்களின் மணமும் கலந்த சுவாசம். தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை நினைவு வந்தது. ஆனால அது நிழல். இது நிஜம் அங்கே மிருகங்கள் கூட்டில், நாங்கள் வெளியில்: இங்கே மிருகங்கள் வெளியில், நாங்கள் கூட்டில்.

மலை விடுதியின் பணியாள் ஒருவர் ஓடி வந்து ஆளுக்கொரு குடையைத் தந்தார். பாதை அந்த விடுதியை நோக்கித்தான் போய்க் கொண்டிருந்தது. எங்கள் வான், விடுதிவாசல் வரை வர இயலாமல் எல்லை முகப்பிலேயே நின்று விட்டது: பன்னிரண்டரை மணியிலிருந்தே அந்த முகப்பில் எதிர்பார்த்திருந்த விடுதிச் சிப்பந்திகள் கையசைத்தபடி விரைந்து வந்தார்கள். நாங்கள் இறங்கியபோது மழை தூறத் தொடங்கியிருக்கவில்லை.

காடும் வானமும் இருள் மண்டியிருந்தன. அந்த ஐந்தாறு பேரும் இறங்கிய எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள்

" ஜாம்போ!..." ஒரே குரலில் வரவேற்றார்கள் வானில் வந்த நால்வரைவிட இருந்த வேறு ஆட்கள் அங்கு அப்போது அவர்கள் மட்டும்தான்.

ஆபிரிக்கர்களை முன்னர் பல தடவைகள் பார்த்திருக்கிறேன் சிலதடவைகள் பழகியுமிருக்கின்றேன்: கொழும்பில் கொஞ்சக் காலம் மொஸ்கோவில் இருந்த போது எல்லாம் மொஸ்கோ லுமும்பா பல்கலைக்கழகத்தில் அரைக்கரைவாசி ஆபிரிக்க மாணவர்கள் தாம் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கறுப்பில் தான் எத்தனை வகை! பல்கலைக்கழகமிருக்கிற மிக்ளுஹா மக்ளயா தெருவின் அந்தப் பகுதியை மொஸ்கோ வாசிகள் ஆப்பிரிக்கா என்றே வேடிக்கையாகக் குறிப்பிடுவார்கள். அங்கிருந்த ஆறுவார காலத்தில் இரண்டு வாரம் என் அறை சகாவாக இருந்தவர்கூட ஒரு ஆப்பிரிக்கர்: கானாவைச் சேர்ந்த கலாநிதி அச்சிம் பொங். ஏன் அவ்வளவு? அந்த அன்று காலையில் நைரோபி விமான நிலையத்தில் இறங்கியதிலிருந்து கண்ணிற்படுகிறவர்களெல்லாம் (அயூப் விதிவிலக்கு) அவர்களே என்றாலும் இப்போது இதென்ன? இந்தக் காட்டு மத்தியில் பளபள வென்று மின்னுகிற கருநிறத்தில், சிரிப்பால் முகத்தில் பளீரிடும் பற்களும் கண்களுமாய் சாம்பல் நிற சீருடையுடன் சூழ நின்று அவர்கள் முகமன் கூறியபோது குறுகுறுத்தது என்ன?

அவர்களிருவரைச் சைகைசெய்து அயூப் வானின் பின் கதவைத் திறந்து விட்டார். அயூப்புக்கு அவர்களெல்லோரும் மிகவும் பழக்கமானவர்கள் என்றே தெரிந்தது. அடிக்கடி சுற்றுலாப் பயணிகளை அழைத்துக்கொண்டு இங்கு வருவார் போலும்......

பாதை வளைந்து வளைந்து போனது. காட்டிருளும் மந்தாரமும் மாறுவதாயில்லை. மழையின் மெல்லிய இரைச்சல்: சரளைக் கற்களின் சரசரப்பு, காட்டின் மூச்சுக்காற்று, எங்கள் பயணப் பைகள் எங்கே? அந்த இருவர் மாத்திரம் எங்களுக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தார்கள். அயூப்பைக் கூடக் காணவில்லை. செல்வாவைத் திரும்பிப் பார்த்தேன், எந்தச் சலனமுமில்லாமல் நடந்து கொண்டிருந்தார். அருகே விமுக்தி அதே மாதிரி இருவர் முகத்திலும் களைப்பு வெளிப்படையாகவே தெரிந்தது. முதல்நாள் வியாழன், அதிகாலை மூன்றரைக்கு வெளிக்கிட்ட பயணம் கென்யாவுக்கும் இலங்கைக்குமான நேர வித்தியாசத்தை- இரண்டு மணித்தியாலம் விட்டு விட்டுக் கணக்குப் பார்த்தால் கூட, முப்பத்தாறு மணித்தியாலத்திற்கும் மேலே! ஒன்றரை நாள். அன்றைக்கு மட்டுமல்ல, அதற்குப் பிறகுவந்த அந்த ஒருவாரமுங் கூட அப்படித் தானிருக்கும் என்று அப்போது எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இருந்தாற்போல பக்கத்துப் புதரில் சலசலத்தது: ஏதோ பாய்ந்த மாதிரி திடுக்கிட்டு விலகினால், முன்னால் போன இருவரும் திரும்பிப்பார்த்துச் சிரித்தார்கள்.

"பயப்படாதீகள்!.."

"அது ஒரு காட்டுப் பூனைதான் !.."

-இருவருமே ஆங்கிலத்தில் சொன்னார்கள். எங்கள் கண்களுக்கு ஒன்றுந் தெரிவதாயில்லை. ஒருவர், நின்று சற்றுத்தாமதித்து எங்கள் பின்னால் வர ஆரம்பித்தார்.

பாதை மீண்டும் ஒரு வளைவில் திரும்பிய போது, எதிரே திடீரென்று ஒரு கருங்கோட்டை தோன்றிற்று. வானைத் தொடமுயன்ற அந்தப் பெயரறியா மரங்களின் பின்னிருந்து ஏதோமாயம் போல் வெளிப்பட்டது. அது. அது கோட்டையல்ல, முற்றுமுழுதும் பெரு மரக்குற்றிகளால் அமைக்கப்பட்ட ஒரு இரு மாடிக் கட்டடம் என்பது புரியச்சில கணங்களாயின.

அந்தநேரம் பார்த்து, சூரியன் வெளிவந்தது. ஆயிரங்கோடி இலைகளும், சொட்டும் சிலிர் நீர்த் துளிகளும் அதனைப் பிரதிபலிக்க முயன்ற அவ்வேளையில்: இருளும் ஒளியுமாய், வெயிலும் மழையுமாயிருந்த அப்பின்னணியில் அந்தக் கருங்காட்டுக் கோட்டை ஏதோ மந்திரமாளிகை போல மனதிற் பதிந்து போயிற்று.

பாலம்போல- மரப்பலகைகள் பரவியிருந்த- ஒடுங்கிய ஒரு வழியால், எங்கள் காலணிகளெல்லாம் டக்டக்கென்று பெரிதாகவே ஓசையெழுப்ப- பாதுகாப்பிற்காக அப்படிச் சத்தம் வரும் ஒரு அமைப்பை வைத்தார்களோ என்றும் ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது- நாங்கள் மலை விடுதி வாசலை அடைந்த போது மழை முற்றாகவே விட்டிருந்தது. பறவைகளும் பல்வேறு பூச்சிகளும் கூடக் குரல் கொடுக்கத் தொடங்கியிருந்தன.

விடுதிவாசலில் அயூப் நின்றிருந்தார். அருகில் எங்கள் பயணப் பைகள் அதிசயமாக இருந்தது. அயூப் சிரித்தபடி காட்டிய திசையில் ஒரு இளம்பெண், முகமெல்லாம் மலர்ச்சியும் கையில் ஒரு தட்டுமாய் நின்றிருந்தாள். அவள் பின் ஒரு இளைஞன், அவனுக்குப் பின்னால் ஒரு பெண், அவர்களும் அதேமாதிரி, மூவரின் உடைகளும் சாதாரணமாக- எங்கள் நாளாந்த உடைகளைப்போலவே- இருந்தன. மூவர் வாயிலிருந்தும் மீண்டும் ஒரே குரலாய் ஒலித்தது: "ஜாம்போ!" முன்னால் போன என்னிடம் முதல் பெண் தனது தட்டை நீட்டினாள். சோளப்பொத்தி அவித்தது மாதிரி வெள்ளையாக ஏதோ மூன்று அதிலிருந்தன, என்னவென்று புரியாமல், 'என்ன, ஏது' என்று கண்ணால் கூட அயூப்பை விசாரிக்க முடியாத நிர்ப்பந்தத்தில், "ஜாம்போ.." என்று முனகியபடி, மெல்லக் கையை நீட்டி ஒன்றை எடுத்தேன். கதகதவென்று சூடாய், ஈரமாய், புசுபுசுவென்று! புரிந்து விட்டது, துருக்கித் துவாய்! வெந்நீரில் நனைத்து அழகாக வைத்திருக்கிறார்கள், வந்த விருந்தாளிகள் கைகளை முகத்தைத் துடைத்துக் கொள்ள! எடுத்து மெல்லக் கைகளை ஒற்றிக் கொண்டதும், அடுத்து நின்ற இளைஞன் தன் தட்டை மெல்ல நீட்டினான். அது வெறுமையாக இருந்தது. துவாயை அதில் வைத்தேன். பின்னால் வந்த என் நண்பர்களிருவருக்கும் குழப்பங்கள் தீர்ந்திருக்கும். மூன்றாவது தட்டை நோக்கி முன்னேறினேன் அங்கு பிரச்சினையேயில்லை. மூன்று பெரிய கிளாஸ்கள் நிறைய பழச்சாறு.

(தொடரும்)




சாந்தன்

# அந்தரங்கத் துணை

மகா பாரதப் போர் தொடங்குவதற்கான ஆயத்தங்கள் நடக்கின்றன. தங்கள் தங்கள் பக்கத்தைப் பலப்படுத்துவதில் கௌரவர்களும் பாண்ட வர்களும் மும்மரமாக இருக்கின்றனர். அதன் ஒரு கட்டமாக கிருஷ்ணரைத் தமது படையில் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு துரியோதனனும் அருச்சுனனும் துவாரகைக்குச் செல்கின்றனர். அங்கு சென்றவர்களிடம் "என் படைகள் எல்லாம் ஒரு பக்கமாகவும் மற்றைய பக்கத்தில் தனித் தவனாக நானும் இருப்பேன். நானோ போர்க்களத்தில் ஆயுதம் எடுத்துப் போராடமாட்டேன் இதையெல்லாம் மனதில் கொண்டு நீங்கள் இருவரும் உங்கள் பக்கத்திற்கு ஆயுதங்களோடு கூடிய படை வேண்டுமோ.... அல்லது தனித்தவனாக நிற்கும் நான் வேண்டுமோ... என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள்" என்று கிருஷ்ணர் கூறுகிறார். தெரிவு செய்யும் முதல் சந்தர்ப்பம் அருச்சுனனுக்கு கிடைக்கிறது. அவனோ ஆயுதம் எதுவும் அற்று நிற்கும் கிருஷ்னரைத் தன்பக்கம் வரும்படி அழைக்கின்றான். கிருஷ்ணரோ நன்றாக யோசித்து முடிவெடுக்கும் படி கூறுகிறார். அதற்கவன் யோசித்துத் தான் சொல்லுகிறேன்-படைகள் என்னோடு இருப்பதை விட நீங்கள் மட்டும் என்னருகில் இருந்தாலே போதும் நான் பகைவர்களை வென்று விடுவேன் எனக் கூறி கிருஷ்ணரையே துணையாக அழைத்துச் செல்கின்றான்.

இந்தப் புராணக் கதை எமக்கு ஒரு கருத்தைச் சொல்லுகிறது. என்ன கருத்து..... எமக்கு துன்பம் நேருகின்ற போது எம்மைச் சுற்றிப் பலர் இருக்கலாம் எனினும் எம்மில் விருப்பமானவர்,எம்மில் அக்கறையுள்ளவர் என்று நாம் நினைப்பவர் எமக்கு அருகில் இருந்தால் எம்மைச் சுற்றி பலர் சூழ்ந்திருந்தும் எமக்குத் தரமுடியாத ஆறுதலை நாம் பெற்று விடுகிறோம். ஆதலால் அருச்சுனனுக்கு கிருஷ்ணர் அமைந்ததைப் போல எம்மில் முழுக்கவனத்தையும் செலுத்தி அக்கறையோடு இருக்கக் கூடிய ஒருவரை நாம் பெற்றிருக்க வேண்டும் அப்படியொருவரைப் பெறுவதால் துன்பங்கள் எமக்கு நேர்கின்ற போது நிறைவான ஆறுதலை நாம் பெறுவது சாத்தியமாகிறது. பெறத் தவறும் சந்தர்ப்பத்தில் எமக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பகிர்ந்து மனதை வெறுமையாக்கி வாழ்க்கையைத் தடைகள் இன்றி முன்னெடுத்துச் செல்ல முடியாமல் தடைப்பட்டு நிற்க வேண்டிய நிலைமை எமக்கு நேர்கிறது. இதனால் வாழ்க்கையில் வெறுப்பு விரக்தி போன்றன ஏற்பட்டு ஏதோ பிறந்தோம் வாழ்ந்து முடிப்போம் என்ற மனநிலையோடு வாழ்க்கையை சுவாரஸ்யம் அற்றதாக ஓட்டிக்கொண்டிருப்போம். சிலர் ஒரு கட்டத்தில் தம்மைத் தாமே மாய்த்தும் கொள்கிறார்கள்.



எனவே இந்நிலைகளில் இருந்து விடுபட்டு உள ஆரோக்கியமான மனிதனாக வாழ்வதற்குரியதாக எம் வாழ்க்கையை ஒழுங்கமைத்து வாழ்ந்து செல்வதன் மூலம் எமது இலட்சியங்களை - இலக்குகளை வெற்றிகொண்டு எம் வாழ்க்கையையும் சுவையுள்ளதாக ஆக்கிக் கொள்ள முடியும் அதற்காக நாம் செய்ய வேண்டியது பலவாக இருப்பினும் உறவினர் களுக்குள்ளோ நண்பர்களுக்குள்ளோ எம் அந்தரங்கங்களையெல்லாம் மனம் விட்டு பகிரக்கூடிய முறையில் ஒருவரைப் பெற்றிருப்பதன் மூலம் இலகுவாக நாம் அதனைச் செய்து விட முடியும் ஆனால் மனம் விட்டு எம் விஷயங்களைப் பகிரக் கூடிய ஒருவரைக் கண்டு பிடிப்பதென்பது சுலபமான ஒன்றல்ல சிலருக்கு அத்தகைய ஒருவரை இனங்காணச் சில வருடங்கள் கூடச் செல்லலாம். தொடர்ந்த முயற்சியும் சலிப்பில்லாத் தன்மையும் கூட இதற்கு அவசியமாகலாம் ஆதலால் வெறுமனே எங்களுடைய பிரச்சினைகளைப் பகிர்வதற்கு ஒருவரை தேடாமல் மற்றவர் களுடைய பிரச்சினைகளைக் கேட்டு அவரது நம்பிக்கைக்குரியவராக எம்மை நாம் மாற்றிக் கொள்வதன் மூலமும் எங்களுக்குரிய ஒருவரை நாம் தேடிக் கொள்ள முடியும். நாங்கள் திறந்தமனத் தோடு நம்பிக்கைக்குரியவராக ரகசியங்களைப் பேணுபவராக மற்றவர்களோடு நல்ல முறையில் பழகிவர மற்றவர்களும் எங்களுடன் பழகத் தலைப்படுவர் எம்மைச் சுற்றி நண்பர் வட்டம் ஒன்று வளர்ந்து வரும் அவ் வட்டத்தில் எமக்கு மிக அண்மையில் வந்து எம் நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கும் ஒருவரை எம் அந்தரங் கத்துணையாக (ஆத்ம நண்பனாக) பெற்று வாழ்க்கையை தடைகள் இன்றி வாழ முயலுவோமாக..

நா.நவராஜ்

ஆய்ந்தறியும் வேளையில், அதிகரிப்பது, உண்மை அழகு; குறைவது, போலி அழகு. - ஸர் ஃபுல்க் க்ரெவில்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க இந்தியாவைத் தலையீடு செய்யுமாறு சனாதிபதி இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் விடுத்த மறைமுகக்கோரிக்கைக்கு அவர் இணங்கி உதவி அளிப்பதாக உறுதியழித்துள்ளதாக கூறப்படுகிறது. இது அமெரிக்காவின் அளுத்தத்திற்கு சந்திரிகா கொடுத்துள்ள மறைமுகமான பதிலடி யென்றே கூறவேண்டும். அரசியல் நெருக்கடியை தீர்க்க உதவ அழைப்பு விடுப்பது இனவிவ காரங்களில் தலையீடு செய்ய விடுத்த அழைப்பாகவே உணரப்பட முடியும்.

இதேவேளை தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்பினை தென்னாசியா அதிக கவனத்தில் கொள்ளவேண்டுமெனவும், இந்தியா தனது பாதுகாப்பினை கவனத்தில் கொள்ளவில்லையானால் அது ஆச்சரியமானதாகவும் பகுத்தறிவற்ற ஒன்றாகவுமே இருக்குமென்றும், நட்புரீதியற்ற வெளிநாட்டுச் செல்வாக்குடனான எந்தவொரு செயற்பாடும் தென்னாசியப் பிராந்தியத்தில் ஏற்படுவதென்பது, இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்பு படுத்தப்பட்டே நோக்கப்பட வேண்டுமென்றும் சனாதிபதியின் அரசியல் ஆலோசகர்களில் ஒருவரான கதிர்காமர் தெரிவித்திருப்பதை மேற்குறித்த அழைப்போடு ஒப்புநோக்கினால் பல உண்மைகளை உணர முடியும்.

அமெரிக்க அழுத்தமும், இந்தியாவுக்கான அழைப்பும் சந்திரிகா- ரணில் ஆகியோருக் கிடையேயான, அதிகார மோதலின் சர்வதேச வடிவமாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுவதை உணர முடிகிறது.

இலங்கையின் அரசியல் குழப்பங்களையும், சமாதான முயற்சிகளின் முன்னெடுப்பையும் வைத்து இராஜதந்திர ரீதியிலான பனிப்போர் ஒன்றை அமெரிக்காவும் இந்தியாவும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் ஆரம்பித்துவிட்டன என்றகருத்தையும் நிராகரிக்க முடியாது.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –51

நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.



படத்திற்கு மெருகூட்டுங்கள் –51

.................................................................

.................................................................

.................................................................

.................................................................

பெயர் : .................................................

முகவரி : .................................................

.................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.



### அரண்

என்
வலக்கையின்
ஐந்து
விரல்கள்
உண்ணவும்
எழுதவும்
வணங்கவும்
மட்டுமல்ல-
அறையவும்.



### உலகமைதி

மாந்த நேயம்
பேசின
அணுகுண்டுகள்.
புறாக்களை
பறக்கவிட்டன
கழுகுகள்.
போராடிக்கொண்டிருக்கிறது
அமைதி.

### சூடு

பாரியைப் பார்த்து
முல்லை
சொன்னது:
முதலில்
நிறுத்து
மரம்
வெட்டுவதையும்
தேர்
கட்டுவதையும்'



### இருள்

பகலிலும்
தலைவர்கள்
குத்துவிளக்கு
ஏற்ற
நிகழ்ந்தன
விழாக்கள்.
தேடுகிறோம்....
எங்கே
வெளிச்சம்?



காசி ஆனந்தன்

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –50



சு.சுதாகரன்,
8ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

### பரிசுக்குரிய வரிகள்

ஈரானில் பூகம்பம் இதயம் வலிக்கிறது
இறந்தது எம் இஸ்லாம் சகோதரர்கள்
ஏகாதிபத்தியமும் இஸ்ரேலும் அழிக்கும் இஸ்லாமை
இயற்கையும் அழிப்பது மிகக் கொடுமை

### பாராட்டுக்குரிய வரிகள்

ஓலரா ஓட்டுனுவே
சிங்களத்துக் கால்களில் சிதறிப்போவதற்கா
விடுதலைக்காய் போராட
இந்த வயதிற்கு தடைபோட்டாய்

கு.தமிழ்ப்பிரியா
வட்டக்கச்சி.

பசிமயக்கமா இல்லை கயவன்
பறித்த உயிரற்ற உடல்களா
எத்தனை அவலங்கள் உனக்கு
எப்போது மாறும் இந்நிலை இங்கு

ந.கங்கா,
உதயநகர் கிழக்கு.

தந்தையே உன் கைகளில் தாங்கிய
தனயன்களுக்கு நடந்தது என்ன?
நவாலியில் நரபலி எடுத்தார்களா?
கிளாலியில் உடலைக் கிழித்தார்களா?

க.பிரியா,
புதுக்குடியிருப்பு.

ஈராக்கிலா? இலங்கையிலா?
இரண்டிலும் தான் குழந்தைகளை
காவு கொள்ளும் வல்லூறுகளும்
பூதங்களும் அதிகம் உள்ளன.

க.நவக்குமார்,
திருவையாறு.

மரணங்கள் மண்ணில் தொடர்கின்றன - எனினும்
தீர்வுகள் எதுவும் கிடைக்கவில்லை
நெஞ்சு பொறுக்க முடியவில்லை - புதிய
விடியல் நோக்கி பயணிக்கின்றான்.

பொலிகையூர்வசந்தன்
புதுக்குடியிருப்பு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.






## 7ம் ஆண்டு நினைவுப் பூக்கள்

தாயக மண்ணில்
09 - 01 - 1997



தாயின் மடியில்
18 - 09 - 1793

### மேஜர். விமலன்

விசேட வேவுப்பிரிவு

(செல்வரத்தினம் - ஜெயரூபன்)

கல்லறையில் துயில்கின்ற
கனவாகிய நிஜமானவனே - நீ
வாழ்ந்த பொழுதுகள்
கண்களில் காட்சிகளாகின்றன.
தாங்கவில்லை உன் பிரிவு
தவியாய் தவிக்கின்றன - உனை
என்றும் நேசிக்கும் உறவுகள்.

தகவல் :-
இல.12,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி. (4005)

குடும்பத்தினா
சகோதரி :- திருமதி.ஜீ.கௌரி,
மருமகன் :- ஜீ. பிரணவன்.



V.M.K

எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

நங்கையர் விரும்பும்
அசல் 22கரட் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

# வீ.எம்.கே ஜுவலர்ஸ்

இல:105, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
கண்டிவீதி, சாவகச்சேரி.

T.P} 0777-723021
0602-212989

(சி-8865)



அனைவருக்கும் எமது தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

உங்களது நயம் நம்பிக்கை,
நாணயம் உள்ள
தங்க வைர நகைகளை
குறித்த தவணையில்
22 கரட் தங்கத்தில்
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்.

தரம் நாடுவோர்
தவறாமல் நாடுமிடம்

# நியூ நிரஞ்சனாஸ்

(சி-8866)

83/1, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு
(ES பேரம்பலம் முன்பாக), யாழ்ப்பாணம். T.P 077-6070679

---

பொங்கல் நல்வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்ளும்

# தில்லையம்பதி மோட்டோர்ஸ்

GREAVES LIMITED



AGENTS FOR - GREAVES, SPARE PARTS

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும்
இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.



(மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)

# தில்லையம்பதி மோட்டோர்ஸ்



இல 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-222 2488, 021-2223820

(சி-8867)

---



பொங்கல் நல்வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்கின்றோம்!

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன் INTERNET மூலம் தொடர்புகளைப் பெற்றுக் கொள்ளவும், உள்நாடு, வெளிநாடுகளுக்கான சகல விதமான துரிததபால்/ பொதிகள் சேவைக்கும் மற்றும் பக்ஸ், போட்டோப்பிரதிகள், லமினேற்றிங் இன்னும் பல சேவைகளை ஒரே கூரையின் கீழ் பெற்றிட

# SRI MURUGAN

*Tele Communication& Agency Post Office*

T.P:021-222 2670, 3214

# THIRUMURUGAN.COM NET

இல:46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ. ச.முன்பாக) திருநெல்வேலி.

T.P:021-222 7310, 222 7555, 222 7560

(சி-8868)

---



எமது அன்பிற்கினிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

MD-90 மற்றும் நீக்கொன்டிசன் மோட்டார் சைக்கிள்கள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள்,
பற்றரி வகைகள், அசிட் வகைகள், சோலர் வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

இல – 108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இல – 262, கண்டி வீதி,
சாவகச்சேரி.

# அருள் விநாயகர் றேடர்ஸ்

இல – 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8869)